# தாலம்

## ஓலை - 4



2023

பனை எங்கள் சூழல் !
பனை எங்கள் பண்பாடு !
பனை எங்கள் பொருளாதாரம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COOP

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# தாலம்

## ஓலை - 4

வெளியீடு :-

☞ கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

☞ வடக்கு மாகாண பனை, தென்னை சார்
உற்பத்திக் கூட்டுறவு நிறுவனங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஞ்சிகை விபரம்


| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | : | "தாலம்" ஓலை 4 |
| மலரின் வகை | : | பனையும் கூட்டுறவும் |
| தொகுப்பாசிரியர் | : | திரு சு.சிறீகாந் (அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம்) |
| மலர்க்குழு | : | 01) திருமதி மாலினி தயாகரன்<br>02) திரு பரமசிவம் தவப்பிரியன்<br>03) திருமதி பிருந்தாமலர் சயந்தன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| வெளியீட்டுத் திகதி | : | 22.07.2023 |
| இடம் | : | கூட்டுறவாளர் மண்டபம்,<br>மாவட்ட கூட்டுறவுச் சபை, கிளிநொச்சி. |
| பயன்படுத்திய தாள் | : | 70gsm |
| அளவு | : | B 5 |
| வண்ணப்பக்கம் | : | 120gsm |
| படிகளின் எண்ணிக்கை | : | 500 |
| மொத்தப்பக்கங்கள் | : | ix + 90 |
| அச்சுப்பதிப்பு | : | யாழ் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அச்சகம். |
| கணனி வடிவமைப்பு | : | அச்சக முகாமையாளர் திரு சி.சுகிர்தன். |
| அட்டைப்படக் காட்சி | : | காரைநகர் |
| உசாத்துணை | : | பனை பாடும் பாடல் - இந்தியா.<br>பனைச் செல்வம்.<br>தால விலாசம்.<br>இணையம். |


இம்மலரில் இடம்பெற்றுள்ள ஆக்கங்களுக்கு அவற்றின் ஆசிரியர்களே பொறுப்பாவர். தொகுப்பாசிரியர், மலர்க்குழு இதன் உள்ளடக்கங்களுக்கு பொறுப்பாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாலத்தின் அகத்தில்....

பக்கம்


| | | |
|---|---|---|
| 01 | சமர்ப்பணம் | i |
| 02 | தாலம் அறிய விளைவோர்க்கு | ii |
| 03. | ஆசிகள் கோடி | iv |
| 04. | தாலத்தின் பயணத்தில்...... | v |
| 05. | வாழ்த்துச் செய்திகள் | vi |
| 06. | கட்டுரை – கூட்டுறவில் இளையோரின் பங்களிப்பு! | 01 |
| 07. | கட்டுரை – பொன்விழாக் கண்டு நிற்கும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் | 03 |
| 08. | கவிதை – அகவை ஐம்பதில் பனைவளச் சங்கங்கள் | 05 |
| 09. | கட்டுரை – பனையின் உன்னதமான சத்துணவுகளை நாம் உதாசீனப்படுத்துவது ஏன்? | 07 |
| 10. | கவிதை – பனை எங்கள் சூழல் ! | 09 |
| 11. | கட்டுரை – பன்முகப் பார்வையில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் | 10 |
| 12. | கவிதை – பனை மரம் | 13 |
| 13. | கட்டுரை – பனை உயர.... | 14 |
| 14. | கவிதை – அழிக்க முடியாத வேர் | 21 |
| 15. | கட்டுரை – பனை வளமும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கங்களும் – ஒரு பார்வை ! | 22 |
| 16. | கவிதை – ஏடகமே வாழி நீ ! | 27 |
| 17. | கட்டுரை – பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பொருளாதார நிலை! | 28 |
| 18. | கவிதை – காத்திடுவோம் கற்பகதருவை ! | 30 |
| 19. | கட்டுரை – பனை எங்கள் பண்பாடு ! | 31 |
| 20. | கட்டுரை – சித்த மருத்துவத்தில் பனை ! | 32 |
| 21. | கவிதை – பூமித்தாயின் கற்பக விருட்சமே ! | 39 |
| 22. | கட்டுரை – சித்த மருத்துவ நோக்கில் பனை ! | 40 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | பக்கம் |
|---|---|---|
| 23. | கவிதை - பனை எங்கள் வாழ்வியல் ! | 42 |
| 24. | கட்டுரை - கூட்டுறவுச் சங்கங்களில் இருப்பெடுத்தல் | 43 |
| 25. | கட்டுரை - பனை எமது வாழ்வின் அடையாளம் | 49 |
| 26. | கவிதை - பனையும் பண்பாடும் | 52 |
| 27. | கட்டுரை - பனையாண்மை ! | 53 |
| 28. | கவிதை - பனைவளம் பெருக்கி பயன் பல பெறுவோம் | 55 |
| 29. | கட்டுரை - கள்ளுற்பத்தி தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள் | 56 |
| 30. | கவிதை - பண்பாடு பதித்த பனை | 60 |
| 31. | கவிதை - பெண் பனையே ! | 62 |
| 32. | கட்டுரை - பயன்தரும் பலம் கொண்ட பனையே ! | 63 |
| 33. | கட்டுரை - பெண்களைப் பொருளாதார நோக்கில் வலுப்படுத்துவதில் பனை தென்னை வள அ.கூ.சங்கங்கள் | 64 |
| 34. | கட்டுரை - பனை தென்னை வ.அ.கூ.சங்கங்களின் இன்றைய நிலை தொடர்பான ஒரு கண்ணோட்டம் | 69 |
| 35. | புள்ளிவிபரம் - சங்கங்களின் உற்பத்திச் சந்தைப்படுத்தற் செயற்பாட்டுப் புள்ளி விபரங்கள் - 2021/2022 | 72 |
| 36. | படங்கள் - 2023 நிகழ்வில் கௌரவம் பெறும் சங்கங்களின் சிறந்த அங்கத்தவர்கள் | 79 |
| 37. | படங்கள் - 2022 ஓவியப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற ஓவியங்கள் | 86 |
| 38. | படங்கள் - 2020 கண்காட்சி நிகழ்வுகளின் பதிவுகள் | 88 |
| 39. | படங்கள் - தாலம் ஓலை 3 வெளியீட்டின் பதிவுகள் | 89 |
| 40. | நன்றி - நன்றி பகிர்தல் | 90 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

**"தால காவலர்"**
**அமரர் கலாநிதி கந்தையா கனகராசா அவர்களுக்கு**
**இம்மலர் சமர்ப்பணம் செய்யப்படுகின்றது.**



" நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் "

(குறள் 28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாலம் அறிய விளைவோர்க்கு .........



பல்வகைப் பண்புகளைக் கொண்ட தால விருட்சமானது தென்னாசியப் பிரதேசங்களில் அதிகம் காணப்படும் ஒரு தாவரமாகும். இலங்கையின் வடக்கு மாகாணத்தில் பயனுறுதிமிக்க இத்தாலவிருட்சம் அதிகம் காணப்படுகின்றது. அதனால் வடக்கு மாகாணத்தின் சின்னமாகவும் இது விளங்குகின்றது. புவியின் பிரதான நான்கு பருவகாலங்கள் உள்ளன. அதாவது கோடைகாலம் (Summer), இலையுதிர்காலம் (Autumn), குளிர்காலம் (winter), இலைதுளிர் காலம் (வசந்தகாலம்) (spring) ஒவ்வொருகாலத்திலும் இயற்கையின் ஏனைய தாவரங்கள் ஒவ்வொருமாதிரிக் காணப்படும். அதாவது இலைகள் உதிரத் தொடங்கும். பின்னர் முற்றாக இலைகள் இல்லாது போகும். இலைகள் துளிர்விடத் தொடங்கும், நன்றாக இலைகள் சடைத்திருக்கும். ஆனால் பனைமரமானது பரம்பல் உள்ள இடங்களில் எக்காலத்திலும் ஒரே மாதிரிக் காணப்படும். இயற்கையோடு இசைவாக்கம் அடையும் தன்மைகொண்ட இவ்விருட்சமானது மனித வாழ்விற்கு பயனுறுதிமிக்க பல கொடைகளை வாரி வழங்கிக்கொண்டிருக்கின்றது. வருடம் முழுவதும் பல்வேறு வகையான பயன்களை வழங்கிக் கொண்டிருக்கும் இவ்விருட்சத்தின் பெருமைகளை எடுத்தியம்பவும், இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் பயனுறுதிமிக்க கல்வியாளர்களின் கருத்துக்களை பதிவுசெய்து கொள்வதற்கும், புள்ளிவிபரங்களை பதிவேற்றவும் களம் அமைத்துக்கொடுக்கும் இச்சஞ்சிகை தாலம் ஓலை 1 என 2018ம் ஆண்டு முதன் முதலில் வெளியானது.

பனை எங்கள் சூழல்! பனை எங்கள் பண்பாடு! பனை எங்கள் பொருளாதாரம்! என்கின்ற கருப்பொருளைத் தாங்கி வெளிவந்துகொண்டிருக்கும் சஞ்சிகையானது 2019ல் தாலம் ஓலை 2 எனவும், 2020ம் ஆண்டு தாலம் ஓலை 3 எனவும் வெளிவந்த நிலையில், 2021ம் ஆண்டு தாலம் ஓலை 4 வெளியிடமுடியாத நிலைக்கு உலகம் முழுவதையும் ஸ்தம்பிக்கவைத்த “கொவிட் -19” கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக வட இலங்கையும் கணிசமான தாக்கத்திற்கு உள்ளாகி இருந்தது. இதன் காரணத்தினால் வெளியிடமுடியாமல் போன தாலம் ஓலை 4 ஐ 2022ம் ஆண்டில் வெளியீடு செய்வதற்கு அக்காலப்பகுதியிலிருந்த கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய உயர்திரு கோ.நந்தகோபாலன் அவர்கள் எடுத்த முயற்சியின் பயனாக ஆக்கங்கள் பெறப்பட்டு கணினித் தட்டச்சு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையின்மை காரணமாக தாலம் ஓலை 4 வெளியீடு மீண்டும் தடைப்பட்டது.

இத்தாக்கங்களில் இருந்து மெல்லமெல்ல விடுபட்டுக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் தாலம் ஓலை 4ஐ வெளியிடவும் பனம் பொருள் விற்பனைக் கண்காட்சியியை நடாத்தவும் தற்போதுள்ள கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவாளருமாகிய மதிப்பிற்குரிய திருமதி தேவந்தினி பாபு அவர்களால் குறுகிய காலத்தில் எடுக்கப்பட்ட முயற்சியின் பயனாக இச்சஞ்சிகையானது பிரசுரிக்கப்படுகின்றது.

நிகழ்வுகளின் பதிவுகள், ஓவியப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் ஓவியங்கள், கௌரவம் பெறும் பனந்தொழில் வல்லுனர்களின் புகைப்படங்கள் என்பவற்றையும் தாங்கியதாக வெளியிடப்படும் இச்சஞ்சிகையில் இடம்பெறும் விடயங்களுக்கு மேலாக உலகம் முழுவதிலுமுள்ள பனைசார் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் துறைசார் கல்விமான்கள் துறைசார் நிபுணர்கள் ஆகியோர்களை அழைத்து மாநாடு ஒன்றை நடாத்தி அதன் பதிவுகளையும் எடுக்கப்படும் தீர்மானங்களையும் சஞ்சிகையில் சேர்த்துக்கொள்வது மிகவும் காத்திரமானதாகஅமையும்.

மன்னுநீர் ஞாலத்துவான் பனையில்
மேன்மையெல்லாம் பன்னுகலி
வெண்பாவாற் பாடவே

என்று பனையின் பெருமைகளைக் கூறுவதற்காக தால விலாசம் என்னும் நூலில் காப்புச்செய்யுள் அடிகளில் நவாலியூர் சோமசுந்தரப் புலவரால் குறிப்பிடப்பட்டமைபோல் இத்தாலம் சஞ்சிகையும் பனையின் பெருமைகளையும், தேவைகளையும் எடுத்தியம்பக்கூடிய வகையில் எளிய தமிழ் நடையில் உருவாக்கம் பெறுகின்றது. தாலம் ஓலை 4ஐ தொகுத்து வழங்குவதற்கு களம் அமைத்துக் கொடுத்த கூட்டுறவுத் திணைக்களத்திற்கும், பனைசார் கூட்டுறவாளர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை நல்கி நிற்கின்றேன்.

"தாலம் ஒருநாள் ஞாலம் போற்றும் பேசுபொருளாக மாறும்"

சு.சிறீகாந்,
தொகுப்பாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிகள் கோடி.........

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பது ஒன்று இல்"




புகழ் நிலைக்கும் திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க உயர்ந்த புகழைக்கொண்டு இப் பிரபஞ்சத்தில் நிலைத்துநின்று பல உயிர்களுக்கும் தன்னாலான ஈகையை வழங்கிக்கொண்டிருக்கும் பனைமரமானது, பூலோகத்தின் தால விருட்சம் என்று புகழ்ந்து கூறப்படுகின்றது.

இவ்விருட்சமானது இயற்கையோடு பின்னிப் பிணைந்து மிகவேகமாக மாறிக்கொண்டிருக்கும் பொருளாதார மாற்றங்களுக்கு கணிசமான பங்களிப் பினை வழங்கிக்கொண்டிருக்கின்றது. அத்துடன் பல்வேறுபட்ட ஏற்றுமதிப் பண்டங்களுக்கும் தன்னாலான மூலப்பொருட்களை வழங்கிக்கொண்டிருக் கின்றது.

இத் தாலவிருட்சத்தின் பயன்களையும் அதன் காத்திரத்தன்மையையும் எதிர்கால சந்ததியினர் அறிந்துகொள்ளக்கூடிய வகையில் பல கட்டுரைகளையும் கவிதைகளையும் பதிவுகளையும் புள்ளிவிபரங்களையும் தாங்கியதாக வெளியிடப்படும் "தாலம் ஓலை 4" மலரானது மனித சமுதாயம் நன்றியுணர்வோடு என்றும் இப்பனை மரத்தை உச்சமாக போற்றி வருவதை உணரவைக்கின்றது. இயற்கை அன்னையாகிய எனக்கும் பெருமை சேர்க்கின்ற பூலோகத்தின் கற்பக விருட்சமாகிய தாலவிருட்சத்தை கௌரவப்படுத்தும் இம்மலரானது சிறப்பாக வெளிவர நல்லாசிகளை வழங்குவதில் பெருமைகொள்கின்றேன்.

" இயற்கையோடு இரண்டறக் கலந்து
இயல்பாகவே பல நன்மைகள் செய்து
பூமிப்பந்தில் புதுமைகள் செய்யும்
பூலோகக் கற்பகமாய் தாலம் விளங்கிட
இயற்கை அன்னையின் நல்லாசிகள் கோடி "

*- இயற்கை அன்னை -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## தாலத்தின் பயணத்தில்....

வடமாகாணத்தின் தனித்துவமான வளமாக பனை வளம் காணப்படுகின்றது. பண்டைய இலக்கிய நூல்களிலும், பனையின் பெருமை பேசப்பட்டுள்ளதுடன் பனையைப் பேணிவளர்த்தல் அறமாகவும் கொள்ளப்பட்டது. ஈழத்துப் புலவரான நவாலியூர் சோமசுந்தரப்புலவர் தனது "தாலவிலாசம்" எனும் நூலில் பனைவளப் பெருமையைப் போற்றியுள்ளார். தமிழர் தம் பண்பாடு பனைசார்ந்த பண்பாடாகத் தொன்றுதொட்டே இருந்து வருகின்றது.

எமது வடமாகாணத்தில் பனையை அடிப்படையாகக் கொண்டு அதன் மூலமான உற்பத்திகளை மேற்கொள்ளும் இயங்குநிலையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் முப்பத்தேழு காணப்படுகின்றன. இவை பனைசார் உற்பத்திகளை ஒருங்கிணைத்து ஒழுங்கமைப்புடன் அங்கத்தவர்கள் செயற்படுவதற்கு அடிப்படையாக அமைவதுடன் அங்கத்தவர்களின் பொருளாதார சமூக நிலையை வலுப்படுத்திவருவதுடன் நாட்டின் பொருளாதார விருத்திக்கும் பங்களிப்புச் செய்துவருகின்றன. இவை பனைவள விருத்திக்கும் பெரும் பங்களிப்பாற்றி வருவது யாவரும் அறிந்ததே.

2020ஆம் ஆண்டு மூன்றாவது ஓலை வெளியிடப்பட்டிருந்தாலும் நாட்டின் கொரோனாத் தொற்று மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக 2021, 2022ஆம் ஆண்டுகளில் "தாலம்" சஞ்சிகை வெளியிடப்படவில்லை. 'தாலகாவலர்' எனப்போற்றப்படும் அமரர் கலாநிதி க.கனகராசா அவர்களது நினைவுநாளாகிய இத்தினத்தில் "தாலம்" இதழின் நான்காவது ஓலையை வெளியீடு செய்வதில் பெருமகிழ்வடைகின்றேன். இந்த நான்காவது ஓலையானது பனைமாண்பியத்தை எடுத்துக்கூறும் பனைசார் ஆக்கங்களைக் கொண்டதாக அமைகிறது.

தற்போது இச்சஞ்சிகை வெளியிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த அனைத்து உள்ளங்களுக்கும் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் சார்பாக எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"பனை வளம் பெருக்கிப் பயன் பலபெறுவோம்"

**தேவந்தினி பாபு,**
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடக்கு மாகாண ஆளுநரின்
## வாழ்த்துச் செய்தி

பூலோக கற்பகதரு எனச் சிறப்பிக்கப்படும் பனை மரத்தை மாண்புறுத்தும் வகையில் வெளியிடப்படும் தாலம் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி கூறுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழினத்தின் வாழ்க்கையோடு இணைந்த பனை மரமானது பஞ்சம் போக்கி எனவும் புகழ்ந்துரைக்கப்படுகின்றது. வேர் முதல் நுனி வரை மூன்று தலைமுறைக்கு பயன்தரும் பனை மரத்தையும் அதன் உற்பத்திகளையும் கொண்டு வடக்கு மாகாண மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கான பாதையினை கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமானது பனை அபிவிருத்திச் சபை மற்றும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்து ஏற்படுத்தி கொடுக்கின்றமை மிகவும் பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

பயனுறுதி வாய்ந்த பனைவளமானது நிலைபேறான வணிகப் பொருளாதாரத்தினை வழங்கக்கூடியதாகும். அருகிவரும் பனை உற்பத்திகளை எதிர்கால சந்ததியினரும் பயன்பெற ஏதுவாக மீண்டும் செழிக்கச்செய்வது அத்தியாவசியமான தேவையாகும்.

இன்றைய காலத்தில் இடையறாது தொடரும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக் களத்தின் முயற்சி நிலைத்து நின்று தொடரவேண்டும்.

தாலம் சஞ்சிகையின் இதழ் வெளியீட்டிற்கு பங்களிப்புச் செய்யும் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"தமிழ் மணம் கமழும் மனையெங்கும் பனைவளம் காப்போம்!"

நன்றியுடன்,

P.S.M. சார்ள்ஸ்,
ஆளுநர்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message From
# Chief Secretary of Northern Province
# " Thalam" Magazine

With great pleasure, I extend this greeting message to the Thalam magazine, which has been annually published by the Department of Cooperative Development since 2018 with the view to promoting the Palmyra products as well the Small Medium Entrepreneurs, those who are involving in manufacturing the palmyra products for long periods.

The Palmyrah tree - everlasting gift - is the symbol and prosperity of Jaffna Peninsula, that never get decline or drop under any weather changes, always flourish with its' produces for the livelihood of most of families, especially women headed families in villages. The palmyra products of Jaffna peninsula have good values not only in local markets but in open market at island wide, which are eagerly purchased by the foreigners too.

The attempt of the Department of Cooperative Development in releasing this Thalam magazine with the contents on palm products and technical methods, assisting the local manufacturers and marketing facility at Coop Cities of MPCS, is really appreciable. Most local factories are linked with Dept. of Cooperative Development to sell their products and the Department of Cooperative Development of NP coordinates with Palmyra Development Board and Coconut Cultivation Board by introducing new waves in producing palmyra goods as per modernized styles and designs. This 4th Thalam magazine, releasing for the year 2023, has the useful sections and opens the ways for marketing platform.

I wish the Commissioner and all officials, involved in the publishing committee and wish them to achieve more effective plans for promoting the livelihood of local manufacturers and increasing SMEs in Northern Province.

***S.M.Saman Bandulasena***
**Chief Secretary,**
**Northern Province.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சு செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக் களத்தினால் வெளியிடப்படும் “தாலம்” சஞ்சிகையின் 4ஆவது மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமிதமடைகின்றேன்.

இயற்கை எழில் கொஞ்சும் வடக்கு மாகாணத்தில் அன்றும் இன்றும் பனையாது மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்துள்ளது. பனை எங்கள் சூழல்! பனை எங்கள் பண்பாடு! பனை எங்கள் பொருளாதாரம்! என்ற கருத்திற்கிணங்க தமிழர்களின் அடையாளச் சின்னமாக பனைமரம் பெருமையுடன் விளங்குகின்றது. எம் வாழ்வியலுக்கான வாழ்விடம் முதல் ஆயுட்பலத்திற்கும் உறுதியளிக்கும் உணவுவரை பயனுள்ள பல வளங்களை வழங்கும் கற்பகதருவான பனை மரத்திற்கு ஈடு எதுவுமில்லை. பனை வளத்தை அழிய விடாது பாதுகாப்பதும் எமது தமிழ் இனத்தின் பண்பாட்டைப் பேணிக்காப்பதும் எமது தலைமுறையின் கடமையாகும். இந்த வகையில் பனை மாண்பினை பறைசாற்றும் “தாலம்” என்ற சஞ்சிகையின் நான்காவது ஓலை வெளியிடப்படுவது பாராட்டத்தக்க விடயமாகும். இதனை நெறிப்படுத்திய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், வடக்குமாகாணம் அவர்களுக்கும் மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வளர்க பனை! வாழ்க மனை!

**ரூபினி வரதலிங்கம்.**
செயலாளர்,
கூட்டுறவு மற்றும் மகளிர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முல்லை மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரின்

## வாழ்த்துச் செய்தி

தமிழரின் வாழ்வோடும் வளத்தோடும் பின்னிப் பிணைந்து தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் வாழவைப்பது பனையாகும். பனை பல இலட்ச இலட்சமாக வருமானத்தை கொடுத்து தொழிலாளர்களை வாழவைத்துக்கொண்டு இருக்கின்றது. மன்னர்கள் முதல் சாதாரண தொழிலாளர்கள் வரை பனையின் பயன்களை நுகராதவர் பாரில் யாருளர். கற்பகதருவாகி காசிக்கு ஒளி கொடுக்கும் பனை வளத்தை காவுகொள்ள பல கழுகுகள் இக்காசியினில் உலாவுகின்றன. இதனை இல்லாது ஒழித்து பனை வளத்தை பேணிட பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்படும் வேளை “தாலம்” சஞ்சிகையும் தன் பணியினைச் செவ்வனே ஆற்றி வருகின்றது. காலத்திற்குக்காலம் பல்சுவை அம்சங்களைத் தாங்கி வெளிவரும் இச்சஞ்சிகை மென்மேலும் தன் பயணத்தினை தொடர்ந்திட வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

நன்றி.

**பி.விஜயச்சந்திரன்,**
*தலைவர்,*
*முல்லை மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக்*
*கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)*
*ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.ஹரிதரன்,
யாழ்ப்பாண சௌக்கிய சேவைக் கூட்டுறவுச் சங்கம்,
யாழ். போதனா வைத்தியசாலை.

# கூட்டுறவில் இளையோரின் பங்களிப்பு

"கூட்டுறவே நாட்டுயர்வு"
"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

இன்றைய 21ம் நூற்றாண்டில் பல தொழில்நுட்பங்களோடு பயணித்துக் கொண்டிருக்கும் எங்கள் அனைவரையும் ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ் மேலோங்கிச் செல்ல வழி அமைப்பதே கூட்டுறவின் முக்கிய நோக்கமாகும்.

ஒரு நாட்டின் முதுகெலும்பாக இருப்பவர்கள் இன்றைய இளையவர்கள் ஆவர். "இன்றைய இளையோர் நாளைய தலைவர்கள்". எமது நாட்டைக் கட்டிப் பாதுகாக்க பிறந்தவர்களே இவர்களாவர்.

இன்றைய காலகட்டத்திலே கூட்டுறவில் இளையோர்களின் பங்களிப்பு மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு விஞ்ஞான அறிவியல் தொழில்நுட்பமும் ஒரு காரணியாக அமைகின்றது. ஆதிகாலத்தில் மனிதன் கூட்டமாகவே ஒன்றித்து வாழ்ந்து பல வெற்றிகளைக் கண்டுள்ளான். இன்றைய காலகட்டத்தில் கூட்டுறவோ, ஒன்றி வாழ்வதோ இளையோர் மட்டத்தில் மிகவும் நலிவுற்றே காணப்படுகின்றது.

இளையோர் எமது கூட்டுறவில் இணைவதன் ஊடாக பல நன்மைகளைப் பெற்றுக் கொள்வதுடன், தற்காலத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினை சிறந்த முறையில் மாற்றி அமைக்கக்கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ளலாம். அதுமட்டுமல்லாது கிராம மட்டத்திலான பொருளாதார மேம்பாடு, எமது ஆளுமை, திறமை மற்றும் விளையாட்டு ஆற்றல் என்பவற்றை மேம்படுத்த கூட்டுறவு உதவுகின்றது. அது மட்டுமல்லாமல் எமது நாட்டின் கலை, பண்பாடு, கலாச்சார விழுமியங்களோடு வாழ்தல், அதனைக் கட்டிப் பாதுகாத்தல் போன்ற வற்றை எடுத்துக்கூறுவதற்கு கூட்டுறவு வழியமைக்கின்றது.

கூட்டுறவின் சட்டதிட்டத்தில் 18-35 வயதிற்கு உட்பட்ட ஆண் / பெண் / இருபாலாரும் நிர்வாகத்திற்குள் உள்வாங்கப்பட வேண்டும். ஆனால் தற்காலத்தில் 40 வயதிற்கு மேற் பட்டவர்களே நிர்வாகத்தில் அங்கத்துவம் வகிக்கின்றார்கள். இது மனவேதனையைத் தருகின்றது.

மேலும் பொருளாதார மேம்பாடு, கிராம மட்டத்திலான பொருளாதார, வாழ்வாதாரத் தினை உயர்த்துதல், சேமிப்புப் பழக்கத்தினை அதிகரித்தல், கடன் திட்டங்களை நடைமுறைப் படுத்தல், சுயதொழிலினை ஊக்குவித்தல், சிறுவர், பெண்களுக்கான அந்தஸ்தை வழங்குதல், பெரியோர்களை ஒன்றிணைத்தல் போன்ற செயற்பாடுகள் கூட்டுறவில் இணைவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் நன்மைகள் எனலாம்.

மேலும் கூறுகையில் இத்தகைய நன்மைகளைக் கொண்ட கூட்டுறவில் இளையோரின் பங்களிப்பானது நலிவுற்றுக் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் சுயசிந்தனை. இதற்குள் சென்றால் முன்னேறமுடியாது, தொழில்நுட்ப வசதி இன்மை, வேலைவாய்ப்புக் குறைவு போன்ற காரணிகளால் இளையோர் பின் நகர்கிறார்கள்.

ஆனால் கூட்டுறவின்மூலம் ஒருவர் இணைகின்றபோது அவர் முன்னோக்கிச் சென்ற தாகவே இருக்கின்றார்கள். கூட்டுறவில் இளையோர் இணைவதால் சமுதாய மட்டத்தில் முன்னோக்கி நிற்கிறார்கள். வேலை வாய்ப்பினையும் வழங்குகின்றது. கல்வி சார்ந்த, சாராத நிகழ்வுகளையும் இளையோர்களுக்கான விளையாட்டுக்களையும் இளம் முயற்சியாளர் களையும் ஊக்குவித்துக் கொண்டுதான்இருக்கின்றது எனலாம்.

ஆகவே, இளையோர் கூட்டுறவினை குறைகூறாமல் இதற்குள்ளும் ஓர் நன்மையுண்டு என உணர்ந்து இளையோரும் இணைந்தால் ஒன்றுபட்டு கூட்டுறவினை சரிவில் இருந்து மீட்டு எடுக்கமுடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக் கண்டு நிற்கும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்

சு.சிவலிங்கம்,
கோண்டாவில் ப.தெ.வ.
அ.கூ.சங்கம்.

பனை வளங்களும் பனந்தொழிலை தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள பனந்தொழில் முயற்சியாளர்களையும் அதிகமாகக் கொண்டுள்ள இலங்கையின் வடபுலத்தில் 1972ம் ஆண்டில் உருவாக்கம் பெற்ற பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது ஐம்பதாண்டு பயணத்தை தொடங்கியுள்ள இவ் ஆண்டில் இச்சங்கங்களின் உருவாக்கத்திற்கு பின்னால் இன்றுவரை இச்சங்கங்கள் மூலமாக பனந்தொழில் வல்லுனர்களின் வாழ்வியல் மாற்றங்கள் அவர்களின் வளர்ச்சிகள், உயர்ச்சிகள் என்பன பெற்றுள்ள அனுகூலங்கள் சொல்லில் அடங்காதவை. இச்சங்கங்கள் உருவாக முன்பு 1972ம் ஆண்டுகளுக்கு முன்னரும் பனம்தொழில் வல்லுனர்களும் பனந்தொழிலும் இருந்தது. எனினும் அவை அநேகமாக திட்டமிடப்படாதவையாகக் காணப்பட்டது என்பது மறுக்கப்படமுடியாத உண்மை நிலையாகும்.

மரவரிச் சட்டம் மட்டுமே இருந்த அன்றைய நாளில் முதலாளிமார்களால் மட்டுமே பனந்தொழில் வல்லுனர்கள் கூலிக்கு அமர்த்தப்பட்டு அவர்களது உழைப்பு சுரண்டப்பட்ட வண்ணமே இருந்தது. இதனால் பனந்தொழில் வல்லுனர்களின் வாழ்வு நிலையும் ஒடுக்கப் பட்டுக் கிடந்தது.

எமது மண்ணின் பனை வளங்களையும் பனந்தொழில் புரியும் வல்லுனர்களையும் பெரிதும் நேசித்தவர்களால் அன்றைய பாராளுமன்றத்தின் நிதி அமைச்சராக இருந்த கௌரவ N.M.பெரேரா அவர்களுடன் தொடர்புகொண்டு மேற்கொண்ட பகீரத முயற்சியின் காரணமாக மரவரிச் சட்டம் நீக்கப்பட்டு கூட்டுறவுத் துறையுடன் இணைக்கப்பட்ட ஓர் கூட்டுறவு அமைப்பாக பனை வளச் சங்கங்கள் தோற்றம் பெற்றன. அதன் பின்னரே தவறணை முறைமையும் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. இதன் பயனாக பனந்தொழில் வல்லுனர்களின் பொருளாதாரம் துளிர்விடத் தொடங்கியது. அன்றுமுதல் கிளை நிலையங்கள் அமைக்கப்பட்டு உற்பத்திகள் கொள்வனவு செய்யப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டதனால் தமது உழைப்புக்கு ஏற்ற முழுப் பயனையும் தொழிலாளர்கள் அடையத் தொடங்கினர்.

இச்சங்கங்கள் புதுப்புது யுக்திகளைக் கையாண்டு விற்பனை நடவடிக்கைகளை அதிகமாக்கினர். உற்பத்தியின் விற்பனை போக, மீதியானவையை அகற்றும் நிலை காணப்பட்டதால் தொழிலாளர்களின் உழைப்பு வீண் விரயமாவதை உற்றுநோக்கிய சங்கங்கள் மிதமிஞ்சிய உற்பத்திகளை பயன்படுத்துவதற்காக வடிசாலைகளை தோற்றுவித்து சாராயத்தின் மூலப் பொருளை உற்பத்தி செய்யும் பருவ காலங்களில் செய்யப்படுகின்ற உற்பத்திகளை போத்தலில் அடைத்தும் பருவகாலமற்ற மாதங்களில் அவற்றை விற்பனைக்காகப் பயன்படுத்தவும் தொடங்கினர். இதனால் பனந்தொழிலில் ஈடுபடுபவர்களும் பனந்தொழில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லுனர்களும் தமது உழைப்பிற்கான முழுப்பயனையும் பெற வழியமைக்கப்பட்டது.

இந் நடவடிக்கைகளால் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மிகப் பெரியளவிலான வளர்ச்சியை அடையத் தொடங்கியது. இதன் பெறுபேறாக தொழிலாளர்களுக்கான பலநூறு நலத்திட்டங்கள் உருவாக்கம் பெற்றன. பனந்தொழில் வல்லுனர்களின் சமூக, பொருளாதார வளர்ச்சி அசுர வேகமெடுக்க பனந்தொழில் வல்லுனர்களை வளர்த்துவிட்ட இச்சங்கங்களானது அவர்கள் சார்ந்த சமூக நலத்திட்டங்களை வகுத்து ஊக்குவித்து சமூக, பொருளாதார வளரச்சியையும் தொட்டு நின்றது. பெண்களுக்கான சுயமுயற்சித் தொழில்கள், உழைப்பாளர்களுக்கான சேமிப்புத் திட்டங்கள், சிக்கன விழிப்புணர்வுத் திட்டங்கள், சமூக அக்கறைக் கோட்பாடுகள், கல்விப் பயிற்சி வளர்ச்சி ஊக்குவிப்புக்கள், முன்பள்ளிகளை உருவாக்கி ஆரம்பக் கல்வி ஊட்டல்கள் என ஆரம்பித்த இச்சங்கங்களின் சமூகம் மீதான அக்கறையானது கூட்டுறவு முறைமைக்கேற்ப கூட்டுறவு அமைப்பின் அனைத்துக் கொள்கைகளையும் கொண்டதாக இச்சங்கங்கள் அமையப்பெற்று கூட்டுறவுப் பண்புகளுக்கேற்ப வீறுநடை போட்டு தமது ஐம்பதாவது ஆண்டுகளில் கால்பதித்து நிற்கின்றன. தனது அங்கத்தவர்களுக்கான நலத்திட்டங்களாக சேமிப்பு, சிக்கனம், பயிற்சி வழங்கல், ஊக்குவிப்பு, விபத்து நிதி, மரணக்கொடை, சகாய நிதி, ஓய்வூதியத் திட்டம், வரட்சி நிவாரணம், தொழில் பாதிப்பின்போதான நிதிப் பங்களிப்பு, கடன் வழங்கல், வழிகாட்டல் கருத்தரங்குகள், பிற தொழில்முனைவோருக்கான உதவித் திட்டங்கள் என எண்ணிலடங்காத நலத்திட்டங்களை வகுத்து அவர்களின் பொருளாதார ஸ்திரத்தை மேம்பாடடையச் செய்துள்ளதுடன், அவர்கள் சார்ந்த சமூக நலத்திட்டங்களாக முன்பள்ளிகள் நடாத்துதல், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஊதியம் வழங்குதல், இலவச மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ளல், மாணவர்களுக்கான மாலைநேர வகுப்புக்களை நடாத்திக் கொடுத்தல், சமூகத் தேவைகளை கண்டறிந்து நிறைவேற்றிக் கொடுத்தல், மருத்துவ நிதி அன்பளிப்புச் செய்தல் என சமூகத்தின்பால் கொண்டுள்ள அக்கறை காரணமாக இவ்வாறான சமூக நலத்திட்டங்களை வகுத்து வழங்கி வருகின்றன.

அவ்வாறே தொழில் வரி செலுத்துதல், உற்பத்திகளுக்கான வரி வழங்குதல், வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளால் நாட்டின் பொருளாதாரத்திற்கும் இச்சங்கங்கள் பெரும் பணி ஆற்றி வருகின்றன.

எனவே, வெறுமனே ஒரு ஐம்பது ஆண்டுகால வரலாற்றினை மட்டுமே கொண்ட பனை வளச் சங்கங்கள் ஆற்றியுள்ள சேவைகள் பிரமாண்டமானவை. இவற்றின் வளர்ச்சி பிரமிக்கத் தக்கவை. குறுகிய கால எல்லைக்குள் தம்மையும் தாம்சார்ந்த சமூகத்தையும் தனது நாட்டையும் மிகப்பெரிய வளர்ச்சிப் போக்கிற்கு கொண்டு வந்துள்ள இச்சங்கங்கள் உண்மையிலும் உண்மையாகப் போற்றப்படவேண்டியவையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை ஐம்பதில் பனைவளச் சங்கங்கள்

தே.யோ.தவராஜா,
கோண்டாவில்
ப.தெ.வ.அ.கூ.சங்கம்

பனைவளச் சங்கங்களுக்கு
அகவை இன்று ஐம்பது
என்.எம் பெரேராவின் ஆத்மாவிற்கு
எங்களின் ஆத்மார்த்தமான நன்றிகள்
கூட்டுறவுத் துறையதற்கும்
கோடான கோடி நன்றிகள்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

முன்னம் ஒரு காலம் எங்கள் பனந்தொழில்
பன்முகச் சுரண்டல்களால் படுத்தே கிடந்தது
பனைவளச் சங்கங்கள் பிறப்பெடுத்த பின்னர்தான்
பனந்தொழில் வல்லுனர்களின் வாழ்வியலில்
மனம் மகிழ் மாற்றங்கள் நடந்தேறின..

அன்றைய கள்ளுக் கொட்டில்கள் போலவே-எங்கள்
குடிமனைகளும் ஓலைக்குடிசைகளாயும்
ஒழுக்கு வீடுகளாயும் அழுது வடிந்தன
இன்றைய எமது சங்கங்கள் அன்று
பிறப்பெடுத்த பின்னர்தான் -எங்கள்
வாழ்வியலும் புதிதாய்ப் பிறப்பெடுத்துக் கொண்டது

இன்றைய "நாங்கள்" அன்றைய "நாங்கள்" அல்ல
ஐம்பது வருட வரலாறு - எங்கள்
ஐந்து தலைமுறையை தலைநிமிர வைத்துள்ளது
வீட்டுக் கோடிக்குள் இருந்து
விற்பனை செய்த நாங்கள் - இன்று
நவீன கிளைகளுடன் CO-OP City வரை
வளர்ந்திருப்பது காலத்தின் மாற்றம் அல்ல
எங்கள் உழைப்பின் உயர்வு!

கள்ளுச் சீவுதலும் விற்றுக் காசாக்குதலும்
இலாபத்தைப் பகிர்ந்தளித்தல்
என்றான நிலை கடந்து
நலத்திட்டங்கள் பல வகுத்து
நானிலம் வியக்கும் நிலையடைந்து
வாழ்வாதாரம் அதை வளமாக்கி
புகழாரம் சூடிக்கொள்ளும்
வரலாறு கடந்து நிற்கிறதெங்கள்
பனை வளச் சங்கங்கள்.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பொருளாதாரம் இன்று
நலிவடைந்து கிடக்கின்றது - பொருட்களின்
விலையேற்றம் கட்டுக்கடங்காது எகிறிப் பாய்கிறது
அரிசி ஐநூறு பாண் நானூறு சாதா ரீ நூறு
என்றெல்லாம் பேச்சுக்கள் அடிபடுகிறது
ஆனாலும் நாங்களோ எந்தக் கவலைகளும்
இல்லாதவராய் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்

காரணம்.........?
பனையை நம்பியவர்கள் நாங்கள்
பனை வளச் சங்கங்கள் உள்ளவரை
பயப்படப் போவதில்லை
கூழோ கஞ்சியோ கூட்டுறவு உள்ளவரை
மாளாது எங்கள் வாழ்வியல் !

ஐம்பதை அடைந்துள்ள நாங்கள் -ஆண்டு
நூறைத் தொடுகின்றபோது - தன்னிறைவு
பெற்றவர்களாய்த் தரணியிலே திகழ்வோம்
சுய பொருளாதாரத்தில் நூறுவீத வளர்ச்சி
நாட்டின் பொருளாதாரம் எங்கள் தயவால் செழிப்புறும் !




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனையின் உன்னதமான சத்துணவுகளை நாம் உதாசீனப்படுத்துவது ஏன்?

Dr. சி.சிவன்சுதன்
பொதுவைத்திய நிபுணர்.

எமது கலாச்சாரத்தின் அடையாளமாக வரட்சியைத் தாங்கும் தூணாக கற்பக தருவாக சித்திரிக்கப்படும் பனை மரங்கள் எமது மத்தியில் தோன்றியதால் பல கஷ்டங்களையும் அவமதிப்புக்களையும் தாங்கி நிற்க வேண்டிய நிலை காணப் படுகின்றது.




இதே பனை மரங்கள் அபிவிருத்தி அடைந்த வல்லரசு நாடுகளிலே செழித்து வளரக்கூடியனவாக இருந்திருந்தால் பனம் பழங்கள் ஒவ்வொன்றும் ஈய உறைகளிலே சுற்றப்பட்டு அதன்மேல் ஸ்ரிக்கர் ஒட்டப் பட்டு பாரிய விளம்பரங்களுடன் இங்கு இறக்குமதியாகி வந்திருக்கும்.

இலகுவில் ஏமாறக் கூடிய மனம்படைத்த நாமும் பணத்தை வாரி இறைத்து அவற்றை வாங்கி உண்டிருப்போம். இதே பனை மரங்கள் அமெரிக்கா தேசத்திலே வளர்பவையாக இருந்திருந்தால் பனங்கிழங்குகளின் மருத்துவக் குணங்களை உலகறிந்திருக்கும்.

கருப்பட்டிகள் அருமருந்தாக சித்தரிக்கப்பட்டிருக்கும். ஒடியல், புழுக்கொடியல் மா வகைகள் உலக சந்தையிலே பெரும் இடத்தைப் பிடித்திருக்கும். பனையின் ஒவ்வொரு பகுதிகளும் உலகின் உபயோகத்திற்கு வந்திருக்கும்.

ஆனால் பாவம் இந்தப் பனை மரங்கள் பாவப்பட்ட எம்மக்கள் மத்தியிலே தோன்றி பொலிவிழந்து காணப்படுகின்றன.

பானங்களிலே அதிகூடிய புரதச்செறிவுடைய பானம் நுங்கு என்பது நம்மில் பலருக்கு தெரியாது. பால்தான் புரதச் செறிவுடைய பானம் என்று நினைத்துக்கொள்கிறோம். 100 கிராம் பாலிலே 3.3 கிராம் புரதம் இருக்கிறது. ஆனால் 100 கிராம் நுங்கிலே 10.8 கிராம் புரதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. பாலினைப்போல பல மடங்கு புரதச் செறிவுள்ள பானம் நுங்கு என்பதை மனதில் நிறுத்துவோம்.

நுங்கினுடைய உலர் நிறையிலே 60% புரதமும் 30% மாப்பொருளும் இருப்பதுடன் மிகக்குறைந்தளவு கொழுப்பே இதனில் காணப்படுகிறது. பனங்கூடல்களுக்குள் வசிக்கும் எமது சிறார்கள் புரதக் குறைபாட்டினால் அவதியுறுகின்றனர். ஆனால் அவர்களுக்கு இந்த நுங்கின் மகத்துவம் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை.

எம்மத்தியிலேயே ஒரு கோடிக்கும் அதிகமான பனைகள் இருந்தும் அவற்றில் இருந்து கிடைக்கும் பனம்பழங்களில் 5 வீதமான பனம்பழங்கள்கூட உபயோகப்படுத்தப்படுவதில்லை. வண்டுகளிடமிருந்தும் புழுக்களிடமிருந்தும் அவற்றை முற்றாகக் காப்பாற்றி அனைத்துப் பழங்களையும் முழுமையாகப் பயன்படுத்துவது எப்படி என்பது சம்பந்தமான வழிமுறைகளை நாம் ஆராயவில்லை.

புரதச்சத்து நிறைந்த விற்றமின்கள், கனியுப்புக்கள் நிறைந்த எமது அரும் சொத்தான பனம்பழங்கள் வீணடிக்கப்பட்டு மண்ணுக்கு உரமாகிக்கொண்டிருக்கின்றன.

பனம்பழங்களின் உலர் நிறையில் 11 வீதம் புரதமும் பெருமளவு பீட்டா (β) கரோட்டினும் ஏனைய விற்றமின்களும் இரும்பு, கல்சியம் போன்ற கனியுப்புக்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்தப் பனம்பழங்களை மக்கள் விரும்பி உண்ணக்கூடிய வகையில் எவ்வாறு மாற்றங்கள் செய்வது என்பது சம்பந்தமான பல ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். சோடாவுக்கு மாற்றீடாக பனம் பழங்களிலிருந்து பல வகையான சுவையான பானங்கள் உற்பத்தி செய்யப்படவேண்டும். இடியப்பத்தினுள்ளும் பிட்டினுள்ளும் பனம்கழி சேர்த்து சமைப்பதன்மூலம் அவற்றின் சுவையும் நிறமும் ஊட்டச்சத்தும் மெருகு பெறும் என்பது சொல்லிக்கொடுக்கப்பட வேண்டும். பனங்களியினை இலகுவில் பிரித்தெடுப்பது. அதனை பாதுகாக்கும் பொறிமுறைகள் கண்டறியப்பட வேண்டும்.

பனம்பழங்களின் மருத்துவக் குணங்களும் அதிலே காணப்படும் நோய் எதிர்ப்புத் தன்மையும் விஞ்ஞானபூர்வ ஆராய்ச்சிகள்மூலம் உறுதி செய்யப்பட வேண்டும். இந்த முயற்சி வெற்றி அளிப்பின் நாம் பனம் பழங்களை ஈய உறைகளில் சுற்றி அவற்றில் ஸ்ரிக்கரும் ஒட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையும் ஏற்படலாம்.

பலவிதமான விளம்பர யுக்திகளுடன் இறக்குமதியாகி அதிக விலையில் விற்பனையாகும் ஓட்ஸ் வகைகள் எமது இன்றைய உணவுகளில் ஒன்றாக மாறும் நிலை காணப்படுகின்றது. ஆனால் எமது சொந்த மண்ணில் விளையும் ஓட்ஸிலும் சிறந்த அதிக நார்த்தன்மை கொண்ட மலிவான, இயற்கையான பனங்கிழங்குகளை நாம் புறக்கணித்து விடுகின்றோம். பனங்கிழங்குகள் அதிகளவு நார்த்தன்மையும் மிகக்குறைந்தளவு கொழுப்பும் கொண்டிருப்பதுடன் உலர் நிறையில் 12 வீத புரதத்தையும் பல விற்றமின்கள் கனியுப்புக்களையும் கொண்டிருக்கின்றன.

பனங்கிழங்குகளில் இருக்கும் மாப்பொருளானது குறைந்த வேகத்திலே உடலினுள் அகத்துறிஞ்சப்படுவதால் இது நீரிழிவு நிலை உள்ளவர்களுக்கும் ஒரு சிறந்த உணவாக காணப்படுகின்றது. பனம்பழங்களின் பயன்கள் அனைத்தையும் எடுத்த பின்பு அதன் கொட்டைகளை பனம்பாத்தி போடுவதன் மூலம் பனங்கிழங்குகளை பெற்றுக்கொள்ள முடியும். இதன்மூலம் பனம்பழங்களும் பனம் விதைகளும் பயனுடையவையாக மாற்றம் பெறும். அத்துடன் பனங்கிழங்குகளை பதப்படுத்தி பனங்கிழங்குகளாகவே பாதுகாக்கும் பொறிமுறை கண்டறியப்படவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை எங்கள் சூழல் !



திருமதி வை.மேர்ஜின்றோஸ்,
பணியாளர்,
பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ.சங்கம்

எங்கள் மண்ணின் இனிய வளமாய்
எங்கும் நிறைந்த அரிய வரமாய்
பொங்கும் வனப்பும் மிளிரும் செழிப்பும்
தெங்கும் பனையும் சேர்ந்த உறவாய்
வையம் செழிக்க வாழ்வு சிறக்க
வளங்கள் நல்கும் பனை மரங்கள்
எமக்காய் விளைந்த இனிய வரங்கள்

இயற்கை எமக்களித்த இனிய கொடையாய்
வாழ்க்கை ஒளிர்ந்திட வழியமைத்த சுடராய்
வீழ்ந்தவர் வாழ்வினை ஏற்றிவைத்த ஏணியாய்
தாழ்ந்தவர் விதியினை மாற்றிவைத்த மதியாய்
வளம் கொழிக்கும் பனை வளங்கள்
எமக்கு கிடைத்த இனிய வளங்கள்

நூற்றெட்டு வகையான பயனுண்டு பனை வளத்தில்
நாற்றிசையும் வாழ்ந்திடும் நலனுண்டு பனை வளத்தில்
வேறு வளம் என்ன வேண்டும் வாழ்வு சிறப்புற
சோறுபோட்ட இவ்வளங்கள் என்றும் எமதே
பேறு பெற்றோம் பெருவாழ்வு நாமடைந்தோம்
வீறுகொண்டெழுந்து வெற்றிகண்டோம்

ஏழைத்தொழிலாளர் ஏற்றம் காணவும்
ஏந்திழையாள் பெருமைதனை எடுத்தியம்பவும்
பனையுடன் தென்னை வளமதும் சேர்ந்து
பாமர மக்களை பாவலராக்கிட
பூமியில் பூத்த பனை மரமே

அடிமுதல் நுனிவரை அனைத்துப் பாகமும் பயன்தரும்
அடித்தளமாய் எம்வாழ்வில் வளம் தரும்
மானிடர் வாழ்வினில் மகத்துவம் பலதரும் பனைமரமே
மானசீகமாய் உன்புகழ் கூறுவோம்

இனிப்பாய் சுவைத்திட பதநீர்
புளிப்பாய் பருகிட பனஞ்சாறு
பல்லுக்கு இதமான பனங்கிழங்கு
பச்சை ஒடியலும் புழுக்கொடியலும்
பாணியும் சுவைக்க நல்ல கல்லாக்காரமும்
பழஞ்சாற்றில் பணியாரம் பனாட்டு

வீடு கட்டவும் கூரைவேயவும் விருந்தோம்பவும்
வீதியோரத்தில் வேலி அடைக்கவும்
அழகு சாதனப் பொருட்கள் செய்யவும்
அழகாய் வீட்டை சுத்தம் செய்யவும்
பல்வகைப் பொருட்கள் பாங்காய்த் தந்திடும்
பகலவன்போல் என்றும் நிலைத்திடும்

பண்பான பனைமரமே
உழைப்பவர் வாழ்வில் ஒளிமயமே
பண்புதனில் கலங்கரை விளக்கு நீயே
பனை வளத்தை பெருக்கி
பனை வளத்தை காத்திடுவோம்
இயற்கை அன்னை கொடையை
எம் சந்ததிக்கு வழங்கிடுவோம்

பனம் சூழலை வளர்க்கப் புறப்படுவோம்
குலம் சிறக்க செயற்படுவோம்
நிலைத்து நின்று சேவைசெய்யும் பனைவளத்தில்
நிலைத்த அபிவிருத்தி நோக்கிப் புறப்படுவோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பன்முகப் பார்வையில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்

இ.விஜயமோகனராசா
மா.கூ.அ. உத்தியோகத்தர்,
கூ.அ.உதவி ஆணையாளர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களின் சமூக, பொருளாதார, கல்வி,கலை, கலாசார மேம்பாடுகளை தூரநோக்காகக் கொண்டு உறுப்பினர்களினால் சம உரிமையும் சமகடமையும் என்ற அடிப்படையில் 1972 ம் ஆண்டின் 05ம் இலக்க கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் பதிவு செய்யப் பட்ட ஓர் கூட்டுறவு நிறுவனமாகும்.

கடந்த வருடம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் 50வது ஆண்டில் கால்பதித்து பொன்விழாவினைப் பூர்த்திசெய்திருக்கின்றன. இந் நிலையில் 1972ம் ஆண்டு கள் உற்பத்தி, விற்பனை கூட்டுறவுச் சங்கமாகவும் 1978ம் ஆண்டு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கமாகவும் 1992ம் ஆண்டில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமாகவும் சங்கங்களின் செயற்பாடுகளின் அடிப்படையில் பெயர் மாற்றம் பெற்று பிரதேச ரீதியான கொத்தணி அமைப்புக்கள், மாவட்ட ரீதியான சமாசங்கள், பேரிணையம் என்ற உச்ச அமைப்புக்களாகவும் பரிணாமம் பெற்றுள்ளன. தற்போது வடமாகாணத்தில் 39 பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் பிரதேசரீதியான 04 கொத்தணிகளும் மாவட்டரீதியான 06 சமாசமும் மாவட்டரீதியான சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்தியசேவைக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுமென ஆக மொத்தம் 50 கூட்டுறவு நிறுவனங்கள் செயற்பட்டுவருகின்றன.

இந்தவகையில் இச் சங்கங்கள் தமது 50வது ஆண்டு நிறைவில் தமது தூரநோக்கினை அடைந்துள்ளதா? என்பதனை கடந்துவந்த பாதைகளினை மீட்டுப்பார்த்தல் மிகவும் அவசியமாகின்றது.

1760-1830றக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இங்கிலாந்தில் உற்பத்தித் துறையில் ஏற்பட்ட மாற்றமான கைத்தொழில் புரட்சியினால் சமூகத்தில் தொழிலாளர்கள் மத்தியில் எவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டதோ அதேநிலைமை இலங்கையில் பனை, தென்னை மரங்களில் சாற்று உற்பத்தியினை மேற்கொண்ட ஆரம்பகால உறுப்பினர்களும் அனுபவிக்க வேண்டிய துன்பமான நிலைமை காணப்பட்டது.

1972 ம் ஆண்டிற்கு முன்னர் பனை தென்னை மரங்களிலிருந்து சாற்று உற்பத்திகளை மேற்கொள்பவர்கள் மரவரிமுறைமையின் கீழ் முதலாளிகளிடம் குத்தகை முறையில் அமைந்த கள்ளுத்தவறணைகளில் தமது உற்பத்திகளை நாள் கூலிக்கு வழங்குபவர்களா கவே இருந்தனர். இதனால் அவர்கள் பலவழிகளில் பாதிப்புகளை எதிர்நோக்கியிருந்தனர். இவற்றின் பிரதான பிரச்சினைகளை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தொழிலாளர்களின் உழைப்பிற்கு ஈடாக கூலி கிடைக்கப் பெறாமை.
2. நேர வரையறையின்றி குறைந்த கூலிக்கு வேலை செய்தமை.
3. கூலிக்குப் பதிலாக சாற்று உற்பத்திப் பொருட்கள் பதிலீடாக வழங்கப்பட்டமை.
4. தொழிலாளர்களின், குடும்பஉறுப்பினர்களின் வாழ்க்கை வறுமையும் நோயும் துன்பமும் கொண்டதாகக் காணப்பட்டமை.
5. முதலாளிகளின் கீழ் அடிமைகளாகவும் பரம்பரை பரம்பரையாகவும் இத் தொழிலினை மேற்கொண்டமை.
6. தொழில் பாதுகாப்பு இன்றிய நிலைமை காணப்பட்டமை.
7. தொழில் பாதிப்பிற்கான விபத்து காப்புறுதி நிவாரண முறைமைகள் காணப்படாமை.
8. தொழில் ரீதியாக சமூக அந்தஸ்து இன்றிய நிலைமை காணப்பட்டமை.
9. தொழிலாளர்களின் குடியிருப்புக்களின் மத்தியிலேயே கள்ளுத்தவறணைகள் அமைந்திருந்தமையினால் பல சமூகச்சீர்கேடுகளை எதிர்நோக்குகின்ற நிலைமை காணப்பட்டமை.
10. உற்பத்தித் தொழில் சாதி ரீதியான பாகுபாடான நிலைமையினை சமூகத்தில் ஏற்படுத்தியமை.
11. வாழ்க்கைத்தரம், கல்வித்தர நிலைமை கீழ் மட்டத்தில் காணப்பட்டமை.

இவ்வாறான பிரதான பிரச்சினைகளை எவ்வகையில் தீர்த்துக்கொள்ளலாம் என சமூகத்தின் முன்னோடிகள் சிந்தித்துக்கொண்டிருக்கையில் 1972ம் ஆண்டின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருந்த அரசாங்கம் தன்னிறைவுப் பொருளாதார (மூடிய பொருளாதாரம்) கொள்கையினை கொண்டிருந்தமையினால் அப்போதைய நிதி அமைச்சராக இருந்த அமரர் N.M. பெரேரா அவர்களினால் நிதி மூலங்களை உள்ளூர் வளங்களில் இருந்து சீரானமுறையில் முழுமையாகப் பெற்றுக்கொள்ளும் முகமாக அதுவரை இருந்துவந்த இந்த மரவரிக் குத்தகை தவறணை முறைகள் நிறுத்தம் செய்யப்பட்டு கூட்டுறவுச் சட்டத்தின் அடிப்படையில் கூட்டுறவுச் சங்க நிறுவன முறையில் உறுப்பினர்களை இணைத்து தாமே தம்மை நிர்வகித்து தமது உறுப்பினர்களின் நன்மைகளுடன் அரசுக்குரிய விற்பனை வரிகளையும் ஒழுங்காகச் செலுத்திவரும் உன்னத நிலைமைகள் தோற்றுவிக்கப்பட்டன.

இந் நிலைமை மாற்றம் இச் சாற்று உற்பத்தியில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் எஜமானர்களாகவும் கூட்டுறவுக் கொள்கைகளுக்கமைய பாரிய கூட்டுறவு இயக்கமாகச் செயற்பட்டு மரவரிமுறைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புக்களில் இருந்து விடுபட்டுக் கொண்டுள்ளனர் என்றால் மிகையாகாது.

50வது ஆண்டில் கால் பதித்திருக்கும் இக் கூட்டுறவு நிறுவனங்கள் இன்று பாரிய சமூக நிறுவனங்களாகவும் நிதிநிறுவனங்களாகவும் தொழிற்பட்டுவருவதுடன் தமது உற்பத்திக் குரிய நியாயமான வருமானங்களையும் தொழிலில் இருந்து பாதிப்படையும்போது இதற்கேற்ற வகையில் நஷ்டஈடுகளையும் விபத்து நிதிகளையும் காப்புறுதிகளையும் தொழிலில் இருந்து இளைப்பாறும்போது ஒய்வூதியங்களையும் பெற்றுக்கொள்வதுடன் ஓர் அரசாங்கம் நாட்டு மக்களின் நலன்களை மேம்படுத்தும் முகமாக எவ்வாறான நலன்புரித் திட்டங்களை முன்னெடுக்கின்றனவோ அதேபோன்று தமது உறுப்பினர்கள், உறுப்பினர்களின் பிள்ளைகள், பணியாளர்கள், அவர்களின் பிள்ளைகள் மற்றும் சமூகம் என்றவகையில் பாரிய சமூக நலன்புரித் திட்டங்களை சங்கரீதியாக, கொத்தணி ரீதியாக, சமாசம், பேரிணையம் ஊடாகவும் ஏற்படுத்தி உறுப்பினர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியும் வாழ்வாதார முன்னேற்றங்களும் ஏற்பட வழிசமைத்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மாற்றங்களை உறுதிப்படுத்தக்கூடியவாறு சங்கங்களின் அலுவலகம், தொழிற்சாலைகள், கிளைகளின் அமைப்புமுறைகள், உறுப்பினர்களின் வாழிடமாற்றம், உறுப்பினர்கள், பணியாளர்களின் பிள்ளைகள் இன்று வைத்தியர்கள், பொறியியலாளர்கள், அரச உயரதிகாரிகளாக உயர்ந்திருத்தல் முக்கிய ஆதாரங்கள் ஆகும். மேலும் நாட்டின் ஜனாதிபதி, அமைச்சர்கள், அரசியல் சார்பானவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் சங்கங்களின் உடனான நல்லுறவினை பேணுதல், மாகாண சபையினால் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு பனை மான்மியம், பனம்பொருட் கண்காட்சி வருடாந்தம் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்துதல், இந்நிகழ்வில் தொழில் பாதிப்படைந்தவர்களுக்கான நிவாரணம் வழங்குதல், கலை, கலாசார நிகழ்வுகளை நடாத்துதல் என்பன சமூகத்தில் இவ் உறுப்பினர்கள், நிறுவனங்களின் சமூகமட்ட அந்தஸ்தினை உயர்த்தி நிற்பதற்கு சான்றாக அமைகின்றன.

இந்நிலையில் 50வது ஆண்டு நிறைவின் பின்னரும் சங்கங்களில் காணப்படுகின்ற பின்வரும் பிரதான குறைபாடுகளை நிவர்த்திசெய்தல் மிகவும் அவசியமானதாகும்.

01. சங்கங்களின் நிர்வாகசபையில் உறுப்பினர்களுக்கிடையிலும் பொதுமுகாமையாளருக்கும் நிர்வாக சபையினருக்குமிடையில் பல முரண்பாடுகள் ஏற்படுவதனையும் அவை தொழில் நியாயசபைகள் மற்றும் மேல் நீதிமன்றங்கள் என்பவற்றில் வழக்குகளாக பதிவு செய்யப்பட்டு நடைபெறுவதனையும் அவதானிக்கமுடிகிறது. இந் நிலைமாற்றத்தினை ஏற்படுத்தும் முகமாக தூரநோக்குள்ள சிறந்த நிர்வாகத்தினரையும் இவர்களுக்கான பயிற்சியினை ஏற்படுத்தி வினைத்திறனான நிர்வாகத்தை ஏற்படுத்தல் அவசியமாகும். அத்துடன் நிர்வாக சபையில் குறைந்தது ஒருவராவது வினைத்திறன் சட்ட அறிவாற்றல் உள்ளவரை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்க பதிவாளரும் நியமனம் வழங்குதல் அவசியமானதாகும். அதற்கேற்றவகையில் ஆணையாளருக்கு சட்டரீதியாக நியமனம் செய்யும் அதிகாரம் காணப்படினும் சங்கங்களின் துணைவிதிகளிலும் இத்திருத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும்

02. சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து உற்பத்திகள் அனைத்தையும் முழுமையாக கொள்வனவு செய்வதுடன் சட்டவிரோதமான விற்பனைகளை இறுக்கமான மேற்பார்வையுடன் கட்டுப்படுத்துவதுடன் நவீனதொழில் நுட்பங்களை பயன்படுத்தி சங்கங்களினால் உற்பத்தி செய்யப்படும் கள், பதநீர், வெல்லம் என்பவற்றினை நவீனமுறையில் ரின், பைக்கற்றுக்களில் பொதிசெய்து இப் பொருட்களுக்கு மேலாக இளநீர், நுங்கு என்பவற்றினை ரின்களில் அடைத்தும் பனைசார் அலங்கார கைப்பணிப் பொருட்களை உற்பத்திசெய்தும் அதற்கான தரப்படுத்தல் (SLS,ISO) சான்றுகளையும் பெற்றுக்கொள்வதுடன் சர்வதேச ரீதியில் சந்தைப் படுத்தல் திட்டங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

03. உறுப்பினர்களிடையே நீண்டகால சிக்கன, சேமிப்பு, கடன் திட்டங்களை பொருத்தமான வகையில் ஏற்படுத்துவதுடன் கிராமிய வங்கிகளை கணணிமயப்படுத்தி விரைவான அங்கத் தவர்களுக்கான சேவைகளுடன் கிராமிய வங்கிகளுடனான முகவர் சேவைகளையும் (மின்சாரம், தொலைபேசி, western union) ஏற்படுத்தல் வேண்டும்.

04. ஒவ்வொரு சங்கங்களும் உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்தக்கூடிய வகையில் பாவனையாளர்களை கவரக்கூடியவகையில் PALM CO-OP CITY முறைகளினை ஏற்படுத்துதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. சங்கத்தில் கடமையாற்றுகின்ற ஊழியர்களின் சம்பளங்கள் மிகவும் குறைந்தளவில் காணப்படுவதனால் சம்பள அதிகரிப்புக்களை ஏற்படுத்தும் முகமாக ஊக்குவிப்புத் திட்டங்களை ஏற்படுத்தி வருமானங்களை அதிகரிப்பதுடன் சங்கம், பணியாளர்கள் மதுவரிச் சட்டம், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்டம், பொதுச்சட்டம், கூட்டுறவுச் சட்டம் என்பவற்றினுள் கட்டுப்படுத்தப்படுவதனால் அங்கத்தவர்கள் நலன் கருதி இணக்கப்பாட்டுடனான சட்ட ஏற்பாடுகளை பின்பற்றி பாதுகாப்பு நடவடிக்கைகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இத்திட்டங்களும் இனிவருங்காலங்களில் சங்கங்களில் முன்னெடுக்கப்படுமாயின் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதுடன் எமதுநாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் முக்கியத்துவப் படுத்தப்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

☆☆☆☆☆☆☆☆☆☆☆

# பனை மரம்

தயாமினி
(ராதை குபேரன்)
இணுவிலூர்

ஒற்றையாய் வளர்ந்து உயரமாய் இருந்தாலும்!
ஏழைக்குடிலுக்கும் கூட்டுக் குடும்பத்திற்கும்!
குடிலாகும் பனையாகும் இதயத்தில் இதமாகும்!

உச்சிக் கொண்டை ஓலை விரித்தால்!
வீட்டிற்கு கூரையாகும் நாட்டிற்கே காவலாகும்!
வளைத்து நெய்தால் பெட்டி கடகமாகும்!
நொங்கு குடித்தால் உடம்பிற்குக் குளிர்ச்சியாகும்!
உள்ளத்தில் என்றும் அமைதி தோன்றும்!
வண்டிக்குச் சக்கரமாகும்
விளையாட்டுக்குப் பொம்மையாகும்!



பதநீர் கள்ளு பருகிடத் தேநீர்!
மருகும் அருந்த மனதிலே விருந்தாகும்!
சூட்டு உடம்புக்குள் குளிர்ச்சியை ஊட்டும்!
ஆட்டுக் காலாய் பனங்கள் பதநீர்!
பனங் கிழங்காய் விளைந்திடும் பெருமை!

மனையாக்க மரத்தின் பயன்கள் தந்திடும்!
குரத்தி நெய்யும் பனை பொருளில்!
மகிமை பயனில் பலனாய் மின்னும்!
தமிழனின் தேசிய பனை மரமாய்!
எல்லை காக்கும் அய்யன் போன்று!
ஊரையாளும் பனைமரமும்
பயன்தரும் அனுதினமும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பனை உயர......

ந.பார்த்தீபன்.
ஓய்வுநிலை உப பீடாதிபதி.
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி.

"வரப்புயர...." என்பது ஔவையாரின் வாழ்த்து. அது எனக்குள் ஏற்படுத்திய தாக்கமே "பனை உயர...." என்று சிந்திக்க வைத்தது. வரம்பு உயர நீர் உயரும். ஆனால் விதைத்தால்தானே நெல்லுயரும்? (இக்காலத்தில் வடபகுதியில் பல இடங்களிலுள்ள வயல்களில் விதைப் பதில்லை. வானம் பார்த்த பூமி. விதைத்தது வீடு வந்துசேரும் செலவி லும் பார்க்க குறைந்த செலவில் அரிசி வாங்கலாம் என்பது அனுபவப்பட் டவர்களின் கூற்று. எங்கள் நிலம் தரிசாகிறதே என்பதையும் செலவு மறக்க வைக்கிறது.) பனை வளம் தொடர்பாக சிந்தித்தால், பனம் விதையை (பனங்கொட்டை) நடவேண்டும். உண்மையில் எங்கள் ஊர்களில் பனம் விதையை நாட்டியவர்கள் மிகக் குறைவு. அது தானே முளைத்த மரம், தனியாக வளர்ந்த மரம் என்பதுதான் யதார்த்தம். ஆனால் இன்று நிலைமை மாறியிருக்கிறது. பனம் விதையை நாட்டும் கைங்கரியம் நடைபெறுகிறது. இதற்கு தால காவலர் கலாநிதி "மில்க்வைற்" (ஒரு காலத்தில் பிரபல்யமான சலவைச் சவர்க்காரம்) கனகராசா முதன் முதலில் முயற்சி செய்தவர் என்பதில் இரு கருத்துக்கு இடமில்லை.

நெல்லை விதைத்தால் மட்டும் போதுமா? களை பிடுங்க வேண்டும். இல்லையேல் களைகள் நெல்லை வளர விடாது. இன்று களை பிடுங்குவதற்குப் பதிலாக கிருமி நாசினி களைத் தெளிக்கிறார்கள். பின்னர் உரம் போடவேண்டும். முற்காலத்தில் பசளை போட்டுத் தான் நெல் விதைத்தார்கள். இன்று களை பிடுங்கிய பின்தான் பசளையைப் போடுகிறார்கள். ஆனால் பனம் விதையை நட்டால் இவ்வாறொன்றும் செய்யப்படுவதில்லை. அதுதான் தானே முளைத்த மரம் அல்லவா?

"பனை உயர மனை உயரும்" என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதா? அப்படி ஒரு சிந்தனை இருந்திருந்தால், எங்களது காணிகளுக்குள் பனையை நட்டிருப்போம். நட்டுப் பராமரித்த வரலாறு இல்லை. பெரிய மரமாய் வந்ததும் (வளர்ந்ததும்) பனங்காய் எடுத்தார்கள். தேங்காய் போல பனங்காய் என்பது பேச்சு வழக்கு. அதன் பனம்பழத்தை எடுத்து பாத்தி போட்டார்கள். ஒடியலாய் விற்றார்கள். புளுக்கொடியலாய் (பனங்கிழங்கை அவித்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயவைத்தது) விற்றார்கள். இப்போதும் இந்தச் செயற்பாடுகள் ஓரளவு இருக்கின்றன. இருப்பினும் மனை உயர முடியுமா?

முற்காலத்தில் பனை ஓலைகளை வெட்டி மாட்டுக்குத் தீவனமாக்கினார்கள். பனை ஓலையை வெட்டிக் கரம் போட்டு (நிலத்தில் ஒழுங்குபட அடுக்கி, அல்லது ஒடுகரமாய் போட்டு. படியப்படுத்தி) வீடு வேய்ந்தார்கள, வேலி அடைத்தார்கள். இன்று வீடுகள் ஓடுகள், சீற்றுகள் ஆகவும் வேலிகள் மதில்களாகவும் மாறிவிட்டன. மேலும் ஓலை வெட்டுவது யார்? சிலர் உயரமான மூங்கில் தடியில் கொக்கத்தடி செய்து (தடியின் உச்சியில் சத்தகக்கத்தி கட்டப்பட்டிருக்கும்) கீழிருந்து வெட்டி வீழ்த்துவதும் உண்டு. வேறு வழி..?

தங்கள் வீட்டுக் காணிக்குள்ளோ, வேறு காணிக்குள்ளோ இருக்கும் பனைகளை கள்ளுச் சீவலுக்குக் கொடுத்திருப்பார்கள். பனைச் சீவல் செய்பவர்கள் பாளை சீவி, முட்டி கட்டி (மண்ணினால் செய்யப்பட்ட சிறு குடம்), கள் இறக்குவார்கள். அவர்களிடம் சொல்லி மாட்டுத் தீவனத்திற்கு ஒவ்வொரு நாளும் வெவ்வேறு பனைகளிலிருந்து இரண்டோ மூன்றோ ஓலையை வெட்டிப் போடும்படி கூறுவார்கள். அவர்கள் இறக்குகின்ற கள்ளில் ஒரு போத்தலோ இரண்டு போத்தலோ கள்ளையும் கொடுத்துவிட்டுச் செல்வார்கள். பிற்காலத்தில் கள்ளுச் சீவுகிறவர்களிடம் ஒரு பனைக்கு இவ்வளவு என்று கூலி வாங்கினார்கள் என்றும் கூறப்படுகிறது. ஆனால் முற்காலத்தில் இந்தப் பனைகளுக்காகப் பணமாக எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை. இதே நிலை தென்னைக்கும் பொருந்தும்.

அந்தக் காலத்தில் கொட்டில் வேய்ந்த, வேலியடைத்த பழைய ஓலைகள் தோட்டம், வயல் என்பவற்றிற்கு பசளையாகப் பயன்பட்டன. பச்சை ஓலையை வெட்டி பசளையாகப் பயன்படுத்தியதும் உண்டு. அவ்வாறு வெட்டும்போது கிடைக்கும் மட்டைகளைப் (வரிச்சு மட்டை) பயன்படுத்தி வேலி அடைப்பதும் வீடுகளுக்கு மறைப்பாக வரிந்து கட்டுவதும் நடைபெற்றது. காற்றோட்டம், வெளிச்சம் வீட்டுக்குள் வருவதற்கும் அவ்வாறு வரிந்து கட்டுவது உதவியிருக்கிறது.

இனி, பனம்பழம் விழும்போது அதனையெடுத்து உரித்து புளித்தண்ணீர் சேர்த்து பனங்களியாக உண்பார்கள். மிஞ்சுவதை பனங்காய்ப் பலகாரமாக, பனங்களிப் பிட்டாக, பனாட்டாக, பாணி சேர்த்து பாணிப் பனாட்டாக பயன்படுத்துவார்கள். பழச்சாறு எடுத்த பனம் விதைகளை மண்மேடை (பாத்தி) அமைத்து பனங்கிழங்கு பெறுவார்கள். இப் பனங்கிழங்கிலிருந்து ஒடியல், புழுக்கொடியல் என்பன பெற்றுக்கொள்வார்கள். ஒடியலைக் காயவைத்து இடித்து, அரைத்து மாவாக்கி ஒடியல்மாப்பிட்டு அவித்துப் பயன்படுத்தினார்கள். கூழ் காய்ச்சிக் குடிப்பார்கள்.

பனங்கள்ளைப் பெறும்போது பதனீர் அல்லது கருப்பனீர் (கருப்பணி) குடிக்க விரும்புவோர் அனேகமாகப் பெண்கள் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப சுண்ணாம்பைச் சேர்த்து (கள் எடுக்கும் முட்டிக்குள் சுண்ணாம்பைப் பூசி) கருப்பனீர் இறக்கிக் கொடுப்பதும் உண்டு. குடித்தது போக மீதியைக் காய்ச்சி கருப்பட்டி செய்து இனிப்புக்குச் சீனி, சர்க்கரைக்குப் பதிலாக உபயோகிப்பார்கள். இப்பனங்கட்டியை நீண்ட காலம் வைத்துப் பாவிப்பதற்காக சிரட்டையில் அல்லது ஓலையில் செய்த குட்டான்களில் ஊற்றி காயவைத்துப் பயன்படுத்துவார்கள்.

கள் மிகவும் மருத்துவ குணம் கொண்டது. கண் வருத்தம், சின்னமுத்து, பொக்கிளிப் பான் (கொப்பளங்கள் தோன்றுவதால் தான் கொப்புளிப்பான் என்பது பொக்கிளிப்பான் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சு வழக்கில் கூறப்பட்டது) போன்ற சூட்டினால் வரும் வருத்தங்களுக்கு வெங்காயம் வெட்டிப் போட்டுக் குடிப்பார்கள். (அப்படிக் குடித்துப் பழகிய காரணத்தால் பல ஆண்கள் குடிகார ராக மாறியிருக்கிறார்கள்) வெப்பத்திலிருந்து பாதுகாப்பு பெறுவதோடு சிறந்த ஊட்டச் சத்துக்கள் கள்ளில் இருக்கின்றன. மலச்சிக்கலுக்கு நல்ல மருந்தாகவும் கள் பயன்படுகிறது.

"அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" என்பது பழமொழி. அது கள்ளுக்கு அதிகம் பொருந்தும். மருந்தாக, நோய் நிவாரணியாக, வெப்பத் தணிப்பு கருவியாக, ஊட்டச்சத்துக் கொண்டதாக இருக்கின்ற கள்ளைக் குடித்து வெறித்து, சத்தி எடுத்து, மயங்கிப் பிதற்றி, சண் டைகள் பிடித்து. சீரழிந்தது மனிதனின் அறியாமை. அதனால்தான் "கள்ளுக்கடைப் பக்கம் போகாதே, உன் காலைப்பிடித்துக் கெஞ்சுகிறேன். கண்ணும் புகைந்திடும், நெஞ்சும் வறண்டிடும், கைகால் உளைந்திடும் இந்தக் கள்ளாலே..." என்று பொப்பிசை பாடல் பாட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. இதற்கு கள் என்ன பாவம் செய்தது?

இப்போது பனை உயர மனை உயரும் என்பதைச் சற்றுச் சிந்திப்போம். "மண்ணு லகத்தினிற் தெய்வப்பனையொன்றை வள்ளல் அருளினன்....." என்று பாடப்பட்டதும், "நட்டா யிரம் ஆண்டு பூமியிலே நின்று நல்ல பயன்கள் உதவிடும்...." என்று பாடப்பட்டதும், பனைச் செல்வம், தால மான்மியம், கற்பகதரு, திருவிராசன்... போன்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டதும், "வளர்க பனை - வாழ்க மனை", "பனை வளம் பெருக்கி பொருள் வளம் காண்போம்" போன்ற கருத்துக்கள் உருவானதும், "பனை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்" போன்ற பழமொழிகள் கூறப்பட்டதும் தொடர்கின்றன.



எங்கள் பண்பாட்டில் இரண்டறக் கலந்தது பனைச் செல்வம். பனை எங்கள் அடையாளம் என்று உயர்ந் தோங்கி ஒலிக்கிறது. வட மாகாணத்தின் வரலாற்றுக் குறியீடு என விளங்கி வருகின்றது. எமது வாழ்வின் வளம் பனை என்று நம்பப்படுகிறது. வறட்சி நிலங்களில் இது வளர்வதால் அந்த வறட்சிக்கும் வைரத்துக்கும் நிறத்துக்கும் அது எங்களுக்கும் மிக நல்ல பொருத்தமானதாகத்தான் இருக்கிறது. இயற்கையாகக் கருமை நிறத்தினை உடைய தும் இதன் கல அமைப்பு மண்ணிறம் கலந்த துளிகள் வடி வில் காணப்படுவதும் இயற்கை அன்னையின் படைப்பில் சிறப்புற்று அழகாகவும் உள்ளது எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் இதனை அழகுபடுத்த உள்ளீடுகள் தேவையற்றது என்றும் நீண்ட காலப் பாவனைக்கு உகந்த இயற்கையை விரும்பும் உலகச் சந்தையில் பனைமர உற் பத்திப் பொருட்களுக்கு அதிக கேள்வி உள்ளதால் அதிக இலாபம் ஈட்டலாம். சிலாகைகள், தூண்கள், குத்துக்கால்கள் என்பன பலமானதும் நீண்ட காலப் பாவனை கொண்டதும் என்பதால் முன்னோர்கள் கூரை போடுவதற்குப் பயன்படுத் தினார்கள். இதற்கு இன்னுமோர் எடுத்துக் காட்டு நீண்ட துலாக்களை பனை மரத்தில் செய்து பயன்படுத்தியதைக் குறிப்பிடலாம். ஆயினும், மலேசியாவிலிருந்து மலேசியன் தீராந்தி மரங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இது இறக்குமதிச் செலவீனத்தைத் தருகிறது. இதற் குப் பதிலாக பனைமரத் தீராந்தி பயன்படுத்த முடியும். ஏற்றுமதி செய்து, ஏற்றுமதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானத்தையும் பெறமுடியும்.

இன்று சூழல் மாசடைவதற்கும் மண் மலடாவதற்கும் கடல் நீர் அசுத்தமடைவதற்கும் தரை - கடல் வாழ் உயிரினங்கள் அற்பாயுளில் அழிவதற்கும் காரணமான பொலித்தீன்-பிளாஸ்ரிக் பாவனைக்குப் பிரதியீடாகப் பனையோலை, தும்புப் பொருட்கள் மிகச்சிறந்த பயன்பாடாக உணரப்படுகின்றன. முன்னோர்கள் மண் பற்றோடு, சமூகப் பற்றோடு வாழ்ந்து காட்டிய வழி முறைகளை மீண்டும் பின்பற்ற வேண்டிய தேவை உணரப்படுகிறது. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்பதுபோல பனை உற்பத்திகள் பாவனைக்கு வரவேண்டிய அத்தியா வசியம் பகுத்தறிவுள்ளோரால் இனங்காணப்பட்டுள்ளது.



இன்று பனை ஓலைத் தொப்பி, பனையோலைப் பெட்டி, பாய், நீத்துப்பெட்டி, கிணற்றுப் பட்டை, தும்புக் கட்டை, விளக்குமாறு (பனை ஈர்க்குப் பயன்பாடு முற்காலத்தில் இருந்தது) கூடை, பாக்(bag) போன்ற பொருட்கள் உள்நாட்டுத் தேவைகட்கு மட்டுமன்றி வெளி நாட்டுத் தேவைகட்கும் பயன்படுத்தலாம். வெளிநாடு களில் பனை உற்பத்திகளுக்கு நல்ல வரவேற்பும் கேள் வியும் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையி லிருந்து பனம்பொருள் உற்பத்திகளை ஏற்றுமதி செய் யும் ஒருவர், சுளகு, நீத்துப் பெட்டி, கடகம், இடியப்பத்தட்டு போன்ற பொருட்களுடன் அழகு சாதனப் பொருட்களை யும் கொள்வனவு செய்து ஏற்றுமதி செய்வதாகக் கூறு வதை பார்க்கும்போது இந்த வாய்ப்பை நாம் முறையாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

நாங்கள் தென்னந் தோப்புகளை உருவாக்குவோம் அல்லது உருவாக்கியபடி உள் ளதை வாங்குகிறோம். ஆனால் பனந்தோப்புகளை உருவாக்குகின்றோமா? ஒப்பீட்டு ரீதியில் இலாபம் என்று தென்னந்தோப்பையே பெரிதும் நம்புகிறோம். தேக்குமரம் போடுங்கள் இருபது வருடத்தில் பெரிய இலாபம் உழைக்கலாம். இல்லை, அண்மைக்காலத்தில் சந்தண மரம் என்றோர் அலை அடிக்கிறது. ஆனால் ஒப்பீட்டளவில் பனை மரத்தின் பயன் அதிகம். நான்கு அடிக்கு ஒரு மரம் நாட்ட முடியும். நாட்டுவதுதான் எங்கள் வேலை. எந்தவிதமான பராமரிப் பையும் பனை மரத்துக்குச் செய்யத் தேவையில்லை. இருபது வருடத்தில் வைரமான பனை மரத்தின் தீராந்தி, வீடு கட்டும் வளை, கைமரம், சலாகை என்பவற்றைப் பயன்படுத்த முடியும். நம் முன்னோர்கள் பனை மரத்தின் வைரம், பாவனைக்காலம் என்பன தெரிந்தே (மழை, வெயில் படாமல் காக்கப்படின் இருநூறு வருடங்களுக்கு அப்படியே இருக்கும்) வீட்டின் கட்டுமான வேலைகளுக்கு அதிகம் பயன்படுத்திப் பயனைப் பெற்றார்கள்.

பனையைத் தறிக்கும்போது பனங்குருத்தை வெட்டி எடுத்துச் சாப்பிட்டார்கள். பனங் கிழங்கை அவித்துச் சாப்பிட்டார்கள். அவித்துத் தும்பெல்லாம் எடுத்துவிட்டு உரலில் போட்டு மிளகு, கடுகு போன்றவற்றை போட்டு இடித்துச் சாப்பிட்டார்கள். ஒடியற்பிட்டை அவித்து, அரைத்து மீன் குழம்புக் கறி சேர்த்துச் சாப்பிட்டார்கள். அந்த ஒடியற்பிட்டை அடுத்த நாள் துருவி எடுத்து, தேங்காய்ப்பூ, சர்க்கரை சேர்த்து சாப்பிட்டார்கள். இப்படியான சத்தான சாப்பாட்டை சாப்பிடாதவர்களைப் பார்த்து “நல்லது தின்ன நாய்க்கு தெரியுமா?” என்று வயது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதிர்ந்தவர்கள் கூறுவது நினைவுக்கு வருகிறது. ஏனென்றால் அவ்வளவும் உடல்நலத்திற்கு ஆரோக்கியம். அதனால்தான் பனையிலிருந்து பெறும் உணவு "உயிர்வேலி" என்று சொல்லப் பட்டது.

கல்லாக்காரம், பனைவெல்லம், பனம்பாணி, பனங்கற்கண்டு, பனைவேர் பயன்படுத் திச் செய்த இலேகியங்கள், சூரணங்கள், குடிநீர்கள் என்பன மருத்துவ ரீதியாக மனிதனுக்குப் பல பயன்களைத் தந்திருக்கின்றன. முதியோர்களுக்கு அதிகம் ஏற்படுகின்ற மலச்சிக்கல் என் னும் பெரும் சிக்கலுக்கு (காலைக்கடன் என்பர். கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன் எனப்பட்டது ) காலைக் கடன் தீர்க்க பனையிலிருந்து கிடைக்கும் எல்லாப் பொருட்களும் உதவுகின்றன. அது கள்ளாக இருந்தாலும் சரி, ஓடியில் பிட்டு, புழுக்கொடியல், பனங்களி, பனாட்டு யாவும் உடலுக்கு ஆதாரம்தான். இன்று பயன்படுத்த தவறுகின்றோம். முன்னோர் ஆரோக்கியமாக வாழ பனையின் உணவுகள் உதவியதை மறந்து விட்டோம்.

பனைமரத்தை வளர்க்கும்போது மழை வீழ்ச்சியைப் பெறுகின்றோம். நிலத்தடி நீர் சேமிக்கப்படுகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஏற்படுகிறது. பாதுகாப்பு அரணாக பயன்பட்டிருக் கிறது. விலங்குகளுக்கு தீவனமாக உள்ளது. பறவைகளுக்கு வாழிடம் வழங்குகிறது. பனையின் அடியான வேரிலிருந்து அதன் நுனியான குருத்து வரை மனிதனுக்கு மருத்துவப் பயன் முதற்கொண்டு பல்வேறு பயன்களைத் தருவதை நாம் உணர்ந்துகொள்ளத் தவறுகிறோம். வளரும் தலைமுறைக்கு வளர்ந்தவர்கள் முன்னோடியாகத் திகழ வேண்டும். பனை உற்பத்தியைக் கௌரவிக்க நாம் முன் வரவேண்டும். பொலித்தீனுக்குப் பதிலாகப் பனையின் உற்பத்திகளைப் பயன்படுத்த வேண்டும்.

பனைசார் ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்படவேண்டும். பனை மான்மிய ஆராய்ச்சி நிதி அறிமுகப்படுத்தப்படுவதாக அறியும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதல் தலைவராகப் பதவி வகித்த பேராசிரியர் க. கைலாசபதி, கடல் வளமும் பனை வளமும் நிறைந்த வட மாகாணத்தின் மீன் உற்பத்தி, பனம்பொருள் உற்பத்திகள் தொடர்பான கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என விரும்பினார். ஆனால் அவர் காலத்தில் அது கைகூடவில்லை. உண்மையில் ஆயிரத்து தொழாயிரத்து எழுபத்தேழாம் (1977) ஆண்டு இவ்விரு துறைகளும் ஆரம்பிக்கப்பட்டு அது தொடர்ந்திருக்குமேயானால் நாம் தன்னிறைவுப் பொருளாதாரத்தை அடைந்திருக்க முடியும். இப்போதாவது இது பற்றிய சிந்தனை, செயற்பாடுகள் உருவாவது வரவேற்கப்பட வேண்டியது.

நல்ல கலவை பனையை வளர்த்து நாம் பெறக்கூடிய வருமானம் தொடர்பாக ஆரோக் கியமான தகவலொன்று பின்வருமாறு கூறுகிறது. ஆயிரம் பனைகள்(1,000) கொண்ட தோப்பை உருவாக்கினால் பதினைந்து (15) வருடங்களில் அண்ணளவாக நாற்பது (40) கோடி ரூபாய்க்கு மேல் இலாபம் பெறமுடியும். ஒரு பனையில் இருந்து ஒரு பருவத்துக்கு ஆயிரத்தைநூறு (1500) லிட்டர் பதனீர் உற்பத்தி செய்யமுடியும். ஆயிரம் பனைகள் (1,000) இருப்பின் பதினைந்து லட்சம் (1,500,000) லிட்டர் பதனீர் பெறலாம். இதிலிருந்து அண்ணள வாக ஐம்பதாயிரம் (50,000) கிலோ பனைவெல்லத்தை உற்பத்தி செய்யலாம். ஒரு கிலோ பனை வெல்லம் எண்ணூறு ரூபாய்க்கு (800) மேல் விற்கப்படுகிறது. எனவே ஐம்பதாயிரம் (50,000) கிலோவுக்கு நாற்பது (40) கோடி வரை வருமானம் பெறமுடியும். இத்தனைக்கும் இது பதினைந்து (15) வருட முயற்சியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு, பனையில் ஏறி கள், பதனீர் இறக்கும் தொழில்நுட்பம் பயிற்றப்படவேண்டும். பரம்பரை பரம்பரையாக பனையில் ஏறி, கள், பதனீர் இறக்குபவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவது கண்கூடு. இதுவே இதன் நடைமுறை பிரச்சினையுமாகும். இன்றுவரை இது தனியார் தொழில் முயற்சியாகவே காணப்படுகின்றது. தமிழ்நாட்டில் இவர்களைச் சாணர் குலம் என்றும் இவர்களின் வீரத்தினைப் பாராட்டி "பனை எழுபது" என்ற நூல் எழுதப்பட்ட தாகவும் கூறப்படுகிறது. பனையின் அதிக பயன்கள் உயரிய வட்டுத் தொகுதியில் இருந்து பெறப் படுவதால் அதன்மீது ஏறுவது துணிவுமிக்க தொழில்நுட்ப, கைதேர்ந்த ஆற்றலுள்ளோரால் மட்டுமே செய்யமுடியும். உடல் - உள ஆரோக்கியம் உள்ள துணிச்சல் மிக்கோரால்தான் செய்யமுடியும். இன்று இது……?

"பனை எழுபது" நூலிலுள்ள அறுபத்து நான்கு, அறுபத்து ஐந்து (64, 65) ஆம் பாடல் களில் இச் சாணர்குலச் சிறப்புப் பாடப்பட்டுள்ளது. உயர்ந்த பனையில் மிகவும் தொழில் நுட்பத் துடன் ஏறி, எழுதுதற்கேற்ற ஓலையை வெட்டி வழங்குவோர் தொழில்நுட்பம் சார்ந்த பெரியோர் களாக போற்றிப் பாடப்பட்டிருகிறது.

"தேடரிய விருமனுக்கும் தேசமதில் உள்ளோர்கட்கும் நாடு புகழ்ந்திடக் கணக்கு நன்றாக ஒப்பமிட நீடுபுகழ் சாணர்கள் தன் நீள் கற்பக தருவினுட ஏடுகளைக் கொடாமல் விட்டால் எழுத்தறிய மாட்டாரே." (பனை எழுபது-64)

"பதினெண் புராணங்கள் பாரதமும் ராம கதை சதிரு நன்னூல் முறைமை அகல காவியங்கள் முதல் மதியுளதோர் சாணர் குலம் வளர்ந்தோங்கும் சாணர் குலம் நிதிவள முண்டானால் உங்கள் நீதி வளம் உண்டாமே" (பனை எழுபது 65)



உண்மையில் பனை ஏறுவது உடற்பயிற்சிகளுள் முதன்மையானது. உடல் ரீதியான மிகப்பெரும் தகுதி உடையது. வட்டுப் பகுதியைச் சேர்ந்த மகரந்தங்களின் சேர் க்கையால் பாளைகள் காணப்படும். இப்பாளைகளைக் கூர் மையான கத்தியால் சீவி பாளைகளை (மண் பானைகளில்) முட்டிகளில் சொருகிக் கட்டி கள்ளோ, பதனீரோ எடுப்பது தொழில்நுட்பம் வாய்ந்தது. பனை உச்சியில் இருந்து இதனை மேற்கொள்வது மிகுந்த ஆபத்து நிறைந்தது. இத் தொழில்புரிபவர்கள் சிறந்த துணிவுமிக்க வீரர்கள் என்றே குறிப்பிட வேண்டும் எனக் கூறுகின்றனர். இத் தொழிலைச் செய்பவர்கள் தொழில், சமூக அந்தஸ்து குறைந்ததென்ற ஒரு மனப்பாங்கு சமூகத்தில் உருவாகி இருப்பதால் தொழிலில் அக்கறையின்மை காணப்படுகிறது. இதனால் தொழிலை விட்டுச் செல்வோர் தொகை அதிகரிக்கின்றது. புதிய தலை முறை இத்தொழிலில் நாட்டமற்று தொழிலை விட்டுவிடுகின் றனர். இந்நிலை மாற்றப்பட வேண்டும்.

ஒரு காலத்தில் "போக்கற்றவன் போலீசுக்கு போனான்" என்றும், அது பிணத்துக்கு காவல் காக்கின்ற தொழில் என்றும் கருதினர். தொலைத்தொடர்பில் மின்சாரப் பகுதியில் வேலை என்றால் கிடங்கு கிண்டிறது, போஸ்ற் தூக்கி நிறுத்துவது என்று கூறி வெறுத் தொதுக்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் காலப்போக்கில் இவற்றிற்கெல்லாம் நல்ல மவுசானது. இது தொழில் தொடர்பான எமது மனப்பாங்குச் சிக்கல். இன்றும் அரச தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவதற்குக் காரணமாக பென்சனபிள் (Pensionable) ஜொப் (Job) என்று கூறுவதைப் பார்க்கிறோம். இது கூடத் தற்காலத்தில் ஓரளவு குறைந்து பிறைவேற்றில் (Private) வருமானம், உழைப்புக் கூட என்று சொல்லும் நிலைக்கு வந்துள்ளது. இந்த மாற்றங்கள் பனையேறும் தொழில் தொடர்பாக ஏற்பட வேண்டும். அந்த ஆரோக்கியமான மனோநிலை வளர்க்கப்பட வேண்டும்.

பனையேறும் பயிற்சி, தொழில்நுட்பம், முயற்சி இல்லையெனில் வெறுமனே பனம் பழம் பொறுக்கி, பனங்களியின் உற்பத்தியையும் பனங்கிழங்கு உற்பத்தியையும் மட்டும்தான் செய்யலாம். காவோலை விழுந்தபின் பசளையாக்கலாம். இது பனையின் வருமானத்தை மிகவும் மட்டுப்படுத்தும். இதனை மாற்ற பனையேற வேண்டும். அதற்கான தொழில்நுட்ப சாதனம் உருவாக்கம் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தவேண்டும். பனை, தென்னை வள அபிவிருத்தியில் சங்கங்களின் கொத்தணிகள், சங்கங்களின் சமாசங்கள், நிறுவனங்களின் பேரிணையங்கள், பனை அபிவிருத்திச் சபை, வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் யாவும் இணைந்து திட்டமிட்டு செயற்படவேண்டும்.

இது, நாம் நினைப்பது போல இலகுவான காரியமல்ல. கிணற்றிலிருந்து நீரை அள்ளிப் பருகிய நாங்கள் மினறல் வோட்டருக்கும் பழக்கப்படுத்தப்பட்டு விட்டோம். ஊர்க்கோழியை விரும்பிச் சாப்பிட்ட காலம் போய் புரோயிலர் கோழி, அதுவும் மூன்று வாரக் கோழி சாப்பிட விரும்புகின்றோம். தேசிக்காய் தண்ணி, நெல்லிக்கிறஸ் என்பவற்றை விரும்பாது கொக்கோ கோலாவும் பெப்சியும் அருந்தப் பழகிவிட்டோம். இந்நிலையில் பியருக்குப் பதிலாக கள்ளை அருந்தவும் சீனிக்கு பதிலாக கருப்பட்டியைச் சுவைக்கவும் பீட்சாவுக்குப் பதிலாக பாணிப் பனாட்டுச் சாப்பிடவும் சொப்பிங் பாக்கிற்குப் பதிலாக பனையோலைப் பாக்கைப் பயன்படுத்தவும் நிறையப் பிரயத்தனப்பட வேண்டும்.

1994 ஆம் ஆண்டு டென்மார்க் நாடு பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்துவதற்காக அத்தயாரிப்புக்களின் மீது வரி அறவிடும் நடவடிக்கையை மேற்கொண்டது. இதனால் ஐம்பது (50)வீதத்தால் பொலித்தீன் பாவனை குறைவடைந்துள்ளதுடன் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் பொலித்தீன் பாவனை குறைந்த அளவில் நுகர்வைக் கொண்ட நாடாகவும் திகழ்கிறது. நமது நாட்டிலும் 2018ஆம் ஆண்டுமுதல் இந்தப் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடை செய்வது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேங்காய் எண்ணை முதல் சுடச்சுடத் தேநீர் வரை சொப்பிங் பாக்தான். இலங்கையில் அண்ணளவாக இருபது(20) மில்லியனுக்கு அதிகமான லஞ் சீற்றுகள் (lonch sheet) பாவிக்கப்படுகின்றன என கூறப்படுகிறது. இது வரவர அதிகரித்துச் செல்கின்றதே தவிர குறைவதாகத் தெரியவில்லை.

இந்த நிலைமையில் அரசுடன், அரசாங்கக் கட்சிகளுடன் சுமுக உறவைப் பேணி அரசின் பல்வேறு உதவிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் கருத்துரைக்கப்படுகிறது. ஆயினும் பொருளாதார ரீதியாக பலவீனமுடையவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட கூட்டுறவு அமைப்பின் உற்பத்திகளுக்கு அரசு விதிக்கின்ற வரிகள் உயர்வாகக் காணப்படுகின்றன என்றும் இதற்கு வரிவிலக்கு அல்லது சலுகை வழங்கப்பட வேண்டும் என்றும் பலரும் கூறுவதைப் பார்க்கிறோம். அரசு, தொழிற்சாலைகளை அமைத்து, இயந்திரங்களைப் பயன்படுத்தி உரிய முறையில் உற்பத்திகளை மேற்கொள்ள முயன்றால் பலருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவதோடு, பனை வளப் பயன்பாட்டின் வழியில் தேசிய வருமானத்தையும் அதிகரிக்க முடியும் என பலரும் கூறுவதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறாயினே பனை உயர மனை உயரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிக்க முடியாத வேர் !



அரியதோர் விருட்சம் நீ
அவனியில் முதுசம் நீ
ஆசியாவின் கோபுரம் நீ
ஆதி அந்தமில்லா தாலம் நீ

இயல் இசை நாடகம் நீ
இணையில்லா பேறு நீ
ஈசனின் அமிர்த கரைசல் நீ
ஈகையில் உனை வெல்ல யாரினி

உண்டி தருவாய் உயர்வு தருவாய்
உறங்க பாயும் உழைக்க வழியும் தருவாய்
ஊத நல்ல குழலாவாய்
ஊரெல்லாம் ஒளியாவாய்

எழுத்தறிய ஏடு தந்தாய்
எண்ணற்ற பயனும் தந்தாய்
ஏழைகளை வாழவைப்பாய்
ஏடகமே மேன்மை கொண்டாய்

ஐயமற்ற வாழ்வு தந்தாய்
ஐக்கியத்தை வளர்த்து நின்றாய்
ஐம்பூதங்களிலும் நீ இருப்பாய்
ஐம்புலன்களையும் அடக்கி வைப்பாய்

ஒற்றையாய் உயர்ந்த போதும்
ஒழுங்கான தோப்பானாய்
ஓலையால் குடிசை தந்தாய்
ஓராயிரம் பண்டம் தந்தாய்

ஔவை கைகளிலும் நீ தவழ்ந்தாய்
ஔடதங்கள் பலவாகிப் பிணி தீர்த்தாய்
அஃதே நீ சிலிர்ப்பாய்
அஃறிணை அல்ல நீயே.................

ஆக்கம்:
SP சாந்தா
பழம்பாசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாபூசணம் *சி.சபாரத்தினம்* -JP.
ஓய்வுநிலை கூ. அ.அலுவலர்.
முன்னாள் பொதுமுகாமையாளர்.
கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

# பனை வளமும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும்

## - ஒரு பார்வை -



பனை மரம் என்பது யாழ். மாவட்ட மக்கள் அனைவராலும் நன்கு அறியப் பட்ட ஒரு மரமாகும். இம்மரத்தை யாரும் நட்டு வளர்க்காமல், இம்மாவட்ட மக்களுடன் சேர்ந்து பிறந்து விட்ட மரமாகும். அதற்காக கிழக்கு மாகாணத்தில் பனை மரங்கள் இல்லை என்ற அர்த்தமில்லை. வடமாகாணம் யாழ். மாவட்டத்தின் பரம்பல் அளவுக்கு வேறு மாவட்டங்களில் இல்லை என்பதே கருத்தாகும். இதனால் வடமாகாணத்தின் அடையாளச் சின்னமாக பனைமரம் விளங்குகின்றது.

சங்க காலத்து இலக்கியங்களில் பனையின் சிறப்புக்கள் பற்றி பல்வேறு செய்யுள்களில் வியந்து கூறப்பட்டுள்ளது. மிகச்சிறிய விடயமொன்றுக்கு உதாரணம் கூறும்போது, "தினை" என்றும், பெரிய விடயமொன்றுக்கு உதாரணம் கூறும்போது "பனை" என்றும் பல செய்யுள்களில் கூறப்பட்டுள்ளது. வள்ளுவன் தன் குறளில் "தினைத்துணை நன்றி செய்யினும் (அதனை) பனைத்துணையாகக் கொள்வார் பயன்தெரிவார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

தேவலோகத்தில் கேட்டதை எல்லாம் கொடுக்கும் ஒரு மரம் இருந்ததாகவும் அதற்கு "கற்பகதரு" என்று பெயர் இருந்ததாகவும் நூல்களில் காணப்படும் அதேசமயம், பூவுலகத்திலும் அதற்கு இணையாக ஒரு மரம் கற்பகதரு என்ற பெயருடன் இருந்ததாகவும், அது "பனை மரம்" என்றும் சிறப்புடன் கூறப்பட்டுள்ளது. பயன்பாட்டில் அதிலிருந்து பெறுமதிமிக்க பல பயன்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதே அதன் கருத்தாகும்.

இந்தியப் புலவர் குடந்தை அருணாசலத்தின் "தால விலாசம்" என்ற நேரிசை வெண்பாவில்,

"நட்டாயிரமாண்டு பூமியிலே நின்று
நல்ல பயன்களுதவிடுமாம்
பட்டாயிரமாண்டு பாழடையாதென்று
பழமொழி கூறுவார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறுவர். இதனை சுருக்கமாக "நட்டாலும் ஆயிரம், பட்டாலும் ஆயிரம்" என்று கூறுவர். இப்படி பெறுமதிமிக்க பனை மரங்களில் பெரும்பகுதி யுத்த சூழலின்போது அழிவடைந்துவிட்டமை குறிப்பிடத்தக்கது. அதன்பின்னர் எடுக்கப்பட்ட ஒரு புள்ளிவிபரத்தின்படி யாழ் மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியாக அதிக எண்ணிக்கையில் பனை மரங்கள் தென்மராட்சியிலும் (396,770) அடுத்ததாக வேலணையிலும் (160,544) ஆகக்குறைந்த பனை மரங்கள் யாழ்ப்பாணத்திலும் (2,434) உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. பனை மரங்கள் அழிவடைவதற்கு முன்பும் தென்மராட்சியிலேயே அதிகளவு பனைமரங்கள் காணப் பட்டன. பனை மரத்தின் பயனை முழுமையாக பாவித்தவர்கள் தென்மராட்சி மக்கள் என்றால் அது மிகப்பொருத்தமாகும். தென்மராட்சி கவிஞன் ஒருவன் பாடிய கவிதையில் குறிப்பிடப்பட்டுள்ள வரிகளாக,

"பஞ்சம் பசி வந்தாலும் பனைவளம் சோறு போடும்" என்று குறிப்பிட்டுள்ளான்.

மேலும்,

" உண்ணும் உணவுக்கும்
உழைப்புக்கும் துணை நின்றேன்
படுத்துறங்கும் வீடெல்லாம்
பலதிலுமே நானிருந்தேன்"

என்று பனை கூறுவதுபோலவே கூறியிருந்தான். பனை வளத்தின் பயன்பாட்டை தமிழ் மக்களுக்கு விளக்கவேண்டிய அவசியம் கிடையாது. ஆங்கிலேயர் காலத்தில் தேநீர் அறிமுகப்படுத்தப்பட்டபோது சீனிக்குப் பதிலாக பனை வெல்லத்தை தமிழ் மக்கள் பாவித்தனர். அப்போது அதனை பனங்கட்டி என்று அழைத்தனர். அதுமட்டுமல்ல சிறிய இனிப்பு உணவுகள் தயாரிக்கும்போது பனங்கட்டி, பாணி என்பவற்றைச் சேர்த்து சுவையாகத் தயாரித்தனர். பாணி சேர்த்து தயாரிக்கப்பட்ட ஆகாரங்கள் பாணி ஆகாரங்கள் என அழைக்கப்பட்டு காலப்போக்கில் பணியாரம் (பாணி +ஆகாரம்) என்ற பெயரைப் பெற்றுக்கொண்டது. பல வகையான இனிப்புப் பதார்த்தங்களும் பணியாரம் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்பட்டது.

பனை மரத்திலிருந்து பெறப்படும் பனங்கள்ளும் பனங்கள்ளினை பதநீராக்கி (கருப்பநீர்) அதிலிருந்து பனங்கட்டியும் பனங்கிழங்கிலிருந்து ஒடியல், புழுக்கொடியலும், பனை ஓலையிலிருந்து பாய், கடகம், பெட்டி, உறி போன்ற சில உற்பத்திப் பொருட்களும் மட்டுமே பெறப்பட்டது. அத்துடன் பனையோலை வீடு வேயவும் மாட்டு தீவனத்திற்கும் பயன்படுத்தப்பட்டது.

பனையை நம்பி வாழ்ந்த மக்களின் வாழ்க்கைத் தரம் பின்தங்கியே காணப்பட்டது. 1972ம் ஆண்டு அவர்களின் வாழ்க்கையில் உதயசூரியன் தோன்றிய காலம் என்று குறிப்பிடலாம். திரு N.M.பெரேரா நிதி அமைச்சராக இருந்தபோது குத்தகை தவறணை முறை ஆரம்பிக்கப்பட்டது. அது தனியார் கைகளுக்கு போய்விடக்கூடாது என்றும், கூட்டுறவு முறையில் அமைக்கப்படும் சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்றும் அமரர் செனட்டர் நல்லையா அண்ணன், கற்பகக் காவலர் திரு க.நடராசா (முந்நாள் பனை அபிவிருத்திச் சபை தலைவர்) அவர்கள் கோரிக்கை வைத்தனர். அவர்களின் கோரிக்கை வெற்றியளித்தது. ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தொழிற்பரப்புக்கும் ஒவ்வொரு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டது. சின்னாபின்னமாக சிதறியிருந்த சீவல் தொழிலாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் ஒன்றிணைக்கப்பட்டு நிறுவனமயப்படுத்தப்பட்டனர். இந்நிறுவன அமைப்பு பனந்தொழிலால் பயன்பெற்ற அனைவரையும் ஒன்றிணைத்து ஒரு மாபெரும் திரண்ட சக்தியாக மாற்றியது.

இருந்தபோதும் அங்கத்தவர்களால் வழங்கப்பட்ட மொத்தக் கள்ளையும் விற்பனை செய்ய முடியாமல் அகற்றவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் அவர்களின் வருமானம் குறைந்தது. 1974ம் ஆண்டில் உலகச் சந்தையில் சீனியின் விலை அதிகரித்தமை இச்சங்கங்களின் வளர்ச்சிக்கு ஓர் படிக்கல்லாக அமைந்தது. மீதப்படும் கள்ளை பதநீராக மாற்றி வெல்ல உற்பத்தியைச் சங்கங்கள் மேற்கொண்டன. யாழ். மாவட்டத்தில் 71 வெல்ல உற்பத்தித் தொழிற்சாலைகளையும் 03 சீனி உற்பத்தித் தொழிற்சாலைகளையும் உருவாக்கி செயற்பட்டன. இதன்மூலம் சங்கங்கள் அதிக வருமானத்தைப் பெற்றுக்கொண்டன. இதன் பின்னர் 1977ல் ஆட்சிக்கு வந்த புதிய அரசின் தாராள இறக்குமதி கொள்கை காரணமாக சீனியின் விலை மீண்டும் வீழ்ச்சி கண்டது. இதனால் தொடர்ந்தும் வெல்ல உற்பத்தியை தொடரமுடியாத நிலை ஏற்பட்டது.

எனவே மீதப்படும் கள்ளில் ஒரு பகுதி பதநீராக வெல்ல உற்பத்திக்கும், மறுபகுதி சாராயம் வடிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டு சாராய உற்பத்தியில் கவனம் செலுத்தப்பட்டு அதன் விளைவாக 1974ம் ஆண்டில் உலகின் முதலாவது பனஞ்சாராய வடிசாலை யாழ்ப்பாணம் கைதடியில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வடிசாலை யாழ்ப்பாணத்தில் மீதப்படும் கள் முழுவதையும் வடிக்கும் ஆக்க சக்தியை கொண்டிருக்கவில்லை. எனவே சங்கங்கள் தனித்தனியாக தாமாகவே செறிவு குறைந்த மதுசாரத்தை (தங்கொட்டுவ சிஸ்டம்) வடித்து சேமிக்கத் தொடங் கின. இந்நிலை பிற்பட்ட காலப்பகுதியில் திக்கம், சங்கானை, வரணி போன்ற இடங்களில் வடிசாலை அமைவதற்கு ஏதுவான காரணியாக அமைந்தது.

மேலும் மீதப்படும் கள்ளின் இன்னொரு பகுதி உடனுக்குடன் போத்தலில் அடைக்கப் பட்டு “யாழ் றா” என்ற பெயரில் விற்பனை செய்யப்பட்டது. இப்போத்தல் கள்ளிற்கு தென்னிலங் கையில் பெரும் வரவேற்பு இருந்தது. யாழ்ப்பாணத்து பனங்கள் என்று மதுப்பிரியர்கள் ஆவலு டன் பருகினார்கள். கள்ளை மட்டும் உற்பத்தி செய்யும் நோக்குடன் கள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம் என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கங்கள் 1975ம் ஆண்டில் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் என்று தமது பெயரை மாற்றிக்கொண்டன.

பனையின் பயன்பாடுகளை விஸ்தரிக்கும் நோக்குடன் 1978ம் ஆண்டு பனை அபிவி ருத்திச் சபை ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சபை ஆரம்பிக்கப்படும் முன்னரே பனையின் பயன் பாடுகள் உணரப்பட்டு அதற்கான செயற்பாடுகளை இந்த தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொள்ளத் தொடங்கியபோதும் அதற்கான நிதி வசதியை இச்சங்கங்கள் கொண்டிருக்கவில்லை. ஆனால் மிக அவசியம் என்று கருதப்பட்ட அனைத்தையும் இச்சங் கங்கள் செயற்படுத்தி வந்தமை பெருமைக்குரியதாகும்.

மேலும் யாழ். மாவட்டத்தின் 19 பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் தமது செயற்பாடுகளை தனித்தனியாகவே செயற்படுத்தி வந்தன. இச்சங்கங் களின் செயற்பாடுகளை ஒன்றிணைத்து ஒழுங்கமைக்க வேண்டும் என்பதுடன் செயற்பாடுகள் ஒரே மாதிரியாக வேறுபாடின்றி அதாவது பொருட்களின் தரம், அளவு, விலை என்பனவும், உற்பத்தித்திறன் வித்தியாசமின்றி அமையவேண்டும் என்பதனையும், எதிர்காலத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்கள், புதிய முயற்சிகள் எப்படி அமையவேண்டும் என்பதை அடிப்படையாக வைத்து 1979ம் ஆண்டு வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என்ற பெயரில் ஓர் இரண்டாம்படி சங்கம் உருவாக்கப்பட்டது. (இது தற்போது யாழ் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.)

இதன் செயற்பாடுகளினால் இச்சங்கங்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு உச்ச நிலைகளை அடைந்தன. வெறுமனே உற்பத்தி, விற்பனையுடன் நின்றுவிடாமல் பல சமூக நலத்திட்டங்களை உருவாக்க காரணமாக அமைந்தன. அந்த வகையில் சமாசத்தின் திட்டங்களிற் சில.....

### 01. அங்கத்தவர் நலத்திட்டங்கள்

இச்சங்கங்களை நம்பி தொடர்ந்து செயற்பட்டுவரும் அங்கத்தவர்கள் விபத்துக்குட்படும் போது அவர்களுக்கான விபத்து நிதித் திட்டங்கள், இடர்கள் ஏற்படும்போது இடர்காலக் கடன்கள், அவர்கள் உழைக்கும்போதே சேமிப்பதற்கான சேமிப்புத் திட்டக் கணக்குகள், பண்டிகைக்கால மானியங்கள், மரணமடையும்போது மரணக் கொடுப்பனவுகள், ஓய்வுபெறும்போது ஓய்வூதியக் கொடுப்பனவுகள் போன்ற திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

### 02. பிள்ளைகளின் கல்வி நலத்திட்டங்கள்

பாலர் பாடசாலைகளை சங்க மட்டத்தில் உருவாக்கி அவர்களுக்கான கல்வி உபகரணங்கள், புலமைப் பரிசில் திட்டங்கள், ஊக்குவிப்பு திட்டங்கள், வறிய மாணவர்களுக்கான நிதியுதவி போன்ற திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

### 03. அங்கத்தவர்கள், பணியாளர்கள் பயிற்சி

அங்கத்தவர்கள், பணியாளர்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்கான பயிற்சி கருத்தரங்குகள் அறிவுறுத்தல்கள் சித்த வைத்திய சேவைகள் என்பன.

### 04. உற்பத்தி நடவடிக்கைகள்

கள் உற்பத்தி, போத்தல் அடைப்புக்கள், பதநீர், பனைவெல்லம், கல்லாக்காரம், மதுசாரம், சாராயம், ஒடியல், அவித்த ஒடியல் (புளுக்கொடியல்), பனாட்டு, பாணிப்பனாட்டு, பழப்பாகு (ஜாம்), கைவினைப் பொருட்களான பாய், கடகம், பெட்டி, உறி, திரிகணை போன்ற உற்பத்திப் பொருட்கள் இச்சங்கங்களின் பிரதான உற்பத்திகளாகும். இந்த உற்பத்தி பொருட்களைச் சந்தைப்படுத்திக் கொடுக்கும் முயற்சிகளிலும் சமாசம் ஈடுபட்டுள்ளது.

சமாசத்தின் செயற்பாடுகள் சங்க நலன்களை மட்டுமன்றி சமூக நலன்களையும் உள்ளடக்கியுள்ளது.

சங்க ஊழியர், உறுப்பினர்களின் அறிவுத்திறன், தொழில்நுட்ப அறிவு, சமாசத்தின் செயற்பாட்டுத் திறன், கூட்டுறவுத் திணைக்களம், பனை அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் வழிகாட்டல்கள், ஆலோசனைகள் அனைத்தும் சேர்ந்து இச்சங்கங்களை உச்ச நிலைக்கு உயர்த்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சங்கங்கள் கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்டுள்ளதால், தம்மைத்தாமே ஆளுகின்ற நிலையில் இதன் எஜமானர்களாகவும் அவர்களே உள்ளனர். தமக்கு பொருத்தமில்லாதவற்றை தாமே நீக்கிவிடவும், பொருத்தமானவற்றைச் சேர்த்துக்கொள்ளவும் பூரண அதிகாரத்தைக் கொண்டுள்ளனர்.

சிறிது காலத்திற்கு முன்னர் கேலிப் பொருட்களாக தோற்றமளித்த பனம்பொருள் உற்பத்திப் பொருட்கள் இன்று கேள்விப் பொருட்களாக தோற்றமளிப்பதைக் கண்டு அனைவரும் பெருமைகொள்ள வேண்டும்.

### அபிவிருத்தி தொடர்பில் சில ஆலோசனைகள்

- கிராமங்கள்தோறும் சின்னாபின்னமாக சிதறுண்டு பரவியிருக்கும் பனைவளத்தை ஒன்று திரட்டி அவற்றை குடிசைக் கைத்தொழிலாக்கி பல்வேறு உற்பத்திப் பொருட்களை உருவாக்க, சங்க மட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- அவற்றை சமாசம் பதப்படுத்தி, தரப்படுத்தி நவீனமயப்படுத்தி மக்களின் பாவனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.
- மக்களின் அன்றாட உணவுடன் இப் பனம் பண்டங்களையும் ஏற்றுக்கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.
- விருந்துகளின்போது இந்த உணவுப் பண்டங்களையும் சிறிதளவேனும் சேர்த்துக் கொள்ளும் கட்டாயத்தையும், பழக்கத்தையும் உருவாக்க வேண்டும்.
- சிறுவர்கள் விரும்பி உண்டு சுவைத்து மகிழக்கூடிய இனிப்பு பதார்த்தங்களை தயாரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதனால் பனை வளம் முழுமையான பாவனைக்குட்படுத்தப்படும், புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாகும். நாடு கடுமையான பஞ்சத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கும் இவ் வேளையில் மக்களின் உணவுத் தேவையின் ஒரு பகுதியைத்தானும் பூர்த்தி செய்யமுடியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாஷாந் - பழம்பாசி

# ஏடகமே வாழி நீ!



நின்று நெடு வளர்ந்து
நீள் வானைத் தினம் பார்த்து
நிலா மகளைத் தினம் போர்த்து
நிறைந்த பயன்தரும்
நினைப்பாட வார்த்தையில்லை!

நெடிது வளர்ந்தாலும்
நோய்நொடி தீர்த்திடும்
அமுத சுரபி நீயல்லவா!
அவனியில் உதித்த அற்புதமல்லவா!

வளர்ந்து வளர்ந்து போகையில்
வடலி என்றும் சொல்கிறார்
வடலித் தோப்பினிலே
வளர்க்கிறாய் காதலை

தளர்ந்து தளர்ந்து செல்லாமல்
தமிழ் வீரம் காக்கிறாய்
தாவித் தாவி உன்னையே
தளிர்க் கரத்தைப் பற்றியே
உச்சிதனைத் தொட்டல்லவோ
ஊறும் கள்ளை எடுக்கிறார்
உண்மையாக உழைக்கிறார்
ஊருக்கெல்லாம் அளிக்கிறார்
கள்ளினிலே அமுதம் தந்தாய்
கல்லாக்காரமெனும் ஔடதமும் தந்தாய்
காவியங்கள் யாவும் நீயே
காசினியின் கற்பகதருவும் நீயே

நுங்கின் சுவை அறிவீரா!
நுனி நாக்கில் ஊறுதுகாண்
பனங்களியின் பண்டங்கள்
பாரெல்லாம் பரவுது காண்
பனாட்டதன் சுவையினிலே
பன்னாடும் சிலிர்க்குது பார்

ஓலையிலே பாயிழைத்தார்
ஓடியற்கூழ் சமைத்தார்
சாலையிலே வரிசையாய்
சாதனைகள் படைப்பதைப்பார்

ஏழை வாழக் குடிலாவாய்
ஏற்றமுற ஏடாவாய்
எத்திசைக்கும் புகழ் பரப்பும்
ஏடகமே நீ வாழி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா.செபஸ்தியாம்பிள்ளை,
பொதுமுகாமையாளர்,
ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
புதுக்குடியிருப்பு

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பொருளாதார நிலை!

பழம்பெரும் இயற்கை வளமான பனை வளம் ஓர் இயற்கைப் பாதுகாப்பு அரணாகவும் பொருளாதார வளமாகவும் தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்து எங்கள் வாழ்வுக்கு வழி காட்டிவரும் தேசிய சொத்தாக பனை காணப்படுகிறது. கற்பகதருவான பனைவளம் இயற்கை அனர்த்தங்களிலிருந்து மக்களை பாதுகாக்கவும் மக்களுக்கும், கால்நடைகளுக்கும் உணவாகவும் கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கும் பனைவளம் உதவுவதுடன் பனைசார் உணவுப் பொருட்களையும், உணவல்லாத அழகுசாதன கைப்பணிப் பொருட்களையும் உற்பத்தி செய்து உள்நாட்டிலும் விநியோகம் செய்து வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்வதன்மூலம் அந்நியச் செலவாணியை சம்பாதித்து பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் இயற்கை கொடையே பனை வளமாகும்.

பனையிலிருந்து 801 வகையான பொருட்களை உற்பத்தி செய்யலாம் என பனைசார் ஆராய்ச்சி நூல்கள் மூலமாக அறியமுடிந்தபோதும் முல்லை மாவட்டத்தில் பனைசார் உற்பத்தி, விற்பனை தொடர்பில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பொருளாதார நிலை தொடர்பில் நாம் எடுத்து நோக்குவதாயின், 2009ம் ஆண்டுக்கு முன் குறிப்பிட்ட வளர்ச்சியுடன் இருந்த சங்கங்கள் யுத்த காலத்தில் சிறுதுளி பெருவெள்ளம் என்பதற்கமைய சிறுகச் சிறுகச் சேர்த்த சொத்துக்களை இடப்பெயர்வின்போது முழுமையாக இழந்த சங்கங்களே முல்லை மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள். இதன் பிற்பாடு 2010ம் ஆண்டுக்குப் பின் நாட்டு நிலைமை சுமுகமாக சங்கங்கள் தமது எல்லைப் பிரதேசத்தில் மீள் குடியமர்வு மக்கள் மத்தியில் அடிப்படை வசதியின்றி தற்காலிக கொட்டில்களில் அலுவலகம் அமைத்து அங்கத்தவர், பணியாளர்களின் கூட்டுறவு மனப்பான்மையால் கிளைகளை அமைத்து செயற்பாடுகளை மெல்ல மெல்ல ஆரம்பித்து அங்கத்தவர்கள், பணியாளர்களின் நலனுடன் சமூக நலன்களையும் கருத்திற்கொண்டு புதிய நிலையான அலுவலகங்களை அமைத்து மிளிர்ச்சியுடன் இயங்கிவரும் சங்கங்கள் பனைசார் உணவு உற்பத்தி, உணவல்லாத கைப்பணி உற்பத்திகளை தரமான முறையில் செய்வதற்கான தொழில்நுட்ப பயிற்சிகளைப் பெற்று தரமான உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து உள்நாட்டில் விற்பனை செய்து வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்யும் சங்கங்களாக முல்லை மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மாறியுள்ளன என்பதனை குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லை மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் புதுக்குடியிருப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கமானது பனைசார் உணவு, உணவல்லாத உற்பத்தி களுக்கான தொழில்நுட்ப பயிற்சிகளைப் பெற்று உற்பத்திப் பொருட்களை உள்நாட்டிலும் விற் பனை செய்து வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்து பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டு றவுச் சங்கங்களின் வரலாற்றில் முதல் தடவையாக 2021ம் ஆண்டில் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவில் மாகாண மட்டத்தில் முதல் நிலை பெற்று மாண்புமிகு ஜனாதிபதி அவர்களிடம் இருந்து தங்கப் பதக்கத்தைப் பெற்று அழியாத தடத்தைப் பதித்து பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பெருமையை தேடிக்கொடுத்து வளர் ச்சியையும் எடுத்துக்காட்டியுள்ளது. எதிர்காலத்தில் ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள் எல்லாம் இந் நிலையினை அடைவதன்மூலம் அங்கத்தவர், பணியாளரின் வாழ்வாதாரம் உயர்ந்து சமூக அந்தஸ்துடன் பொருளாதார வளர்ச்சியில் முன் நிற்க முடியும்.

இன்று வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தி என்ற பெயரில் பனை மரங்கள் சிறு வடலி தொடக்கம் வரலாற்றைச் சித்தரித்து நிற்கும் முதிர்வுப் பனைகள் வரை கட்டுப்பாடுகளின்றி அழிக்கப்பட்டு வருவதும் அதனைத் தடுக்காது போவதும் மிகவும் வேதனைக்குரியது. பொரு ளாதார வளமாக பலராலும் எடுத்துக்கூறப்படும் கற்பகதருவான பனை வளம் எதிர்காலத்தில் அழிந்துபோகுமோ எனச் சிந்திக்க தூண்டுகின்றது.

01 பனை எங்கள் சூழல்!

02. பனை எங்கள் பண்பாடு!

03. பனை எங்கள் பொருளாதாரம்

எனும் கருப்பொருளுடன் ப.தெ.வ.அ.கூ.சங்கங்களாலும், கூட்டுறவுத் திணைக்களத்தாலும் வருடாந்தம் யூலை மாதம் நடாத்தப்படும் பனை சார் கண்காட்சியின் பின்னர் 22ம் திகதி வெளியாகும் தாலம் ஓலை 04இன் மூலமாக துறைசார் உயர் அரச அதிகாரிகளிடமும், சமூக ஆர்வலர்களிடமும், அரசியல்வாதிகளிடமும் அன்பாகவும் தாழ்மையாகவும் வேண்டுவது, "பனைவளம் அழிக்கப்படுவதை நிறுத்தி திட்டமிட்டு இடங்களை தெரிவுசெய்து இயற்கைப் பொருளாதார வளமான பனை வளத்தினை நாட்டி பெருக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துதருவதன் மூலமாக சமூக, பொருளாதார வளர்ச்சியை மேலும் அதிகரிக்க முடியும்" என்பதேயாகும்.

*" பனைவளம் காப்போம்! பயன்பல பெறுவோம்! "*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திடுவோம் கற்பகதருவை!



பி.பிறேமதாசன்
வடமராட்சி கிழக்கு
ப.தெ.வ.அ.கூ.சங்கம்

ஆண்டவன் அருளிய
அக்ஷயபாத்திரம் இது
அனைத்தையும் எமக்கென
அள்ளித்தந்திடும் விருட்சம்
காத்திட வேண்டுமிதை
கண்ணுக்கு நிகராக
காத்திட தவறிடில்
கவலை கொள்வாய் பிந்நாளில்
வீட்டிற்கு மரமாக
வீட்டை வேய்ந்திட
கூரைக்கு ஓலையாக
கூடி வாழ்ந்திட தந்திடும்
கற்பகதருவை காத்திட வேண்டுமையா!

உண்டு மகிழ்ந்திட
உணவுகள் பல தரும்
படுத்து உறங்கிட
பாயும் தந்திடும்
கோடைக் காலமதில்
கொழுத்தும் வெயில்தனில்
தலைக்கு மேலிருந்து
தொப்பியாகக் காத்திடும்
கற்பகதருவைக் காத்திட வேண்டுமையா!

வீசிடாக் காற்றினையே
விசை கொண்டு அசைத்து
வியர்வைதனைப் போக்கிடவே
விசிறியாகவும் உதவிடும்
கற்பகதருவை காத்திட வேண்டுமையா!
உறவுகள் அனைத்தும்
ஒன்றாய் கூடியிருந்து
உண்டு மகிழ்ந்திடவே
ஓடியற்கூழும் தந்திடும்
கற்பகதருவை காத்திடவேண்டுமையா!

பனங்கிழங்கும் பூரானும்
பனைவெல்லம் தானதுவும்
உடலினை உறுதியாக்க
உண்டிட தந்திடும்
கற்பகதருவை காத்திடவேண்டுமையா!

வறுமைதனைப் போக்கி
வாழ்வளிக்கும் நல்மரமாம்
கற்பகதரு இதனை இங்கு
காத்திட வேண்டுமையா!
விலைவாசி ஏறித்தினம்
வீதியிலே போராட்டம்
எரிபொருள் இல்லாது
எங்கும் இருள்மயமே
காரிருளுக்கு ஒளி கொடுக்க
காவோலையும் தானுண்டு
பசித்திட்ட வயிறுதனையே
பசியாற்றிடவே இங்கு
பனாட்டும் தானுண்டு
இத்தனையும் எமக்களிக்கும்
கற்பகதரு இதனை
எத்துயர் வந்தாலும்
காத்திட வேண்டுமையா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை எங்கள் பண்பாடு!

ஜானுஷா
முல்லை கிழக்கு
ப.தெ.வ.அ.கூ.சங்கம்

உலகிலுள்ள மொழிகளில் மூத்த மொழி நம் தமிழ்மொழி ஆகும். எம் செந்தமிழ் எழுத்துக்கள் முதன் முதலில் எழுதப்பட்டது பனை ஓலையில்தான். அதனாலேயே பனை மரம் எங்கள் அடையாளமாக உள்ளது. தமிழர்கள் வாழ்ந்த இடங்களில் எல்லாம் குறிப்பாக இலங்கை, இந்தியா, மலேசியா, மொரிசியஸ்தீவு, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் எல்லாம் தமிழர்களின் அடையாளமாக பனை மரமே காணப்படுகின்றது. இலங்கை நாட்டின் வடக்கு மாகாணத்தின் சின்னமாகவும் எமது பண்பாட்டு மரமே காணப்படுகின்றது.



நம்முன்னோர்கள் பனை மரத்தை "கற்பக விருட்சம்" என்று பெயரிட்டு அழைத்தனர். கடவுளுக்கு இணையாக கற்பக விருட்சத்தை வழிபடும் பாரம்பரியமுறை சில இடங்களில் இன்றுவரை காணப்படுகின்றது. எங்கள் பண்பாட்டு விருட்சத்தினை உணவு நிலையில் மட்டுமன்றி உணர்வு நிலையிலும் நம்மோடு இணைத்து வைத்துள்ளோம். பனை புல்லினத்தைச் சேர்ந்த ஒரு தாவரப் பேரினம். இதனை அறிவியல் வகைப்பாட்டில் போரசஸ் (Borassus) எனும் பேரினத்தில் வகைப்படுத்தி உள்ளனர்.

புராதன காலம் முதல் இன்றுவரை மனிதர்களின் பொருளாதாரத்திலும் உணவுப் பழக்கத்திலும் முக்கியம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. பனை மரத்தின் வருமானம்மூலம் தமது வாழ்க்கையை நடாத்தும் குடும்பங்கள் பலவற்றை நாம் இன்றும் காணக்கூடியதாக உள்ளது. பனை மரத்தின் அனைத்து பாகங்களினாலும் நாம் பயன்பெறுகின்றோம். இம் மரம் ஆண்பனை, பெண்பனை என்று பாலினத்தை கொண்டுள்ளதும் இதன் சிறப்பம்சமாகும். சுமார் 60 - 70 ஆண்டுகளுக்கு பின்னரே இது முதிர்ச்சியடைகின்றது.

எமது முன்னோர்களது பாரம்பரியத்தினையும் பண்பாட்டையும் கடைப்பிடிப்பதுபோல பனை மரங்களை அழிக்காது பாதுகாப்பதோடு அதன் இனத்தை மேலும் பெருக்கி எமது பண்பாடாக பேணுவதோடு எமது சந்ததியினருக்கும் பண்பாட்டு மரமாக இருக்க வழி வகுப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த மருத்துவத்தில் பனை !

**செல்வி பிரதா பிரபுடதேவன்,**
மாணவி,
சித்த மருத்துவ அலகு,
யாழ். பல்கலைக்கழகம்.



இலங்கையில் தமிழர்களின் வாழ்க்கை முறையானது பனையோடு இணைந்த பனைமரக் கலாச்சாரமாகவே அறியப்படுகிறது. நமது மூதாதையர் இதனை ஒரு முக்கிய உணவாகவும் பனையோடுள்ள தொடர்பினை தமது வாழ்க்கையின் முக்கிய அம்சமாகவும் பேணி வந்துள்ளனர். பனையை அவர்கள் வீடு கட்ட மரமாகவும், வேய ஓலையாகவும், பயன்படுத்திய ஓலையை விவசாயத்திற்குப் பசளையாகவும், வேலி அடைக்கும் பொருளாகவும், கிணற்றிற்குத் துலாவாகவும், கிணற்றிலிருந்து நீர் அள்ளும் பட்டையாகவும், பயிர்களுக்கு நீரூற்றும் பட்டையாகவும், ஆடு, மாடு போன்ற கால்நடைகளுக்கு ஓலை, குரும்பை, நுங்கு, பனம்பழம் போன்றன உணவாகவும், தமது நாளாந்த உணவாக புழுக்கொடியல், ஒடியலும் அது சார்ந்த உணவுப் பண்டங்களும், கிழங்கு, பனாட்டு, தேநீரிற்கு பனங்கட்டியும், மருந்துத் தேவைகளிற்கு பனங்கற்கண்டும் பயன்படுத்தி முழுத் தேவைகளுக்கும் பனையையே நம்பியிருந்த ஒரு வாழ்க்கை முறை இருந்தது. குறிப்பாகப் பனை செறிந்து வளரும் பகுதிகளில் முழுக்க முழுக்கப் பனையையே நம்பி வாழ்ந்த மக்கள் கூட்டமும் காணப்பட்டது.

உணவு, குடிபானம், உறையுள் போன்றவற்றிற்கு பனைமீது தங்கியிருந்த ஒரு கலாச்சாரம் யாழ்ப்பாணத்தில் இருந்தது என்பது யாவரும் அறிந்ததே. யாழ்ப்பாணக் கலாச்சாரம் தமிழ்மொழி, இந்துமதம் போன்வற்றுடன் எவ்வளவு இணைந்திருந்ததோ அதேயளவு பனையுடன் ஒன்றியும் இருந்து வருகிறது. Borassus Flabellifera எனும் தாவரவியற் பெயரைக் கொண்ட இம்மரம் வேர்முதல் நுனிவரை அனைத்துப் பாகங்களிலும் பயனை அள்ளித் தருகிறது. இதனால் கேட்டதெல்லாம் கொடுக்கும் கற்பகதரு என்று போற்றப்பட்டு வருகின்றது. இதனை கற்பகம் என்றும் தமிழினத்தின் வாழ்க்கையோடு இணைந்த மரம் என்றும் "பஞ்சம்போக்கி" என்றும் அழைப்பர்.

பசளைகளோ, கிருமிநாசினிகளோ எதுவும் பயன்படுத்தப்படாமல் செழித்து வளரும் பனை தரும் உணவுகளோ, பழங்களோ இரசாயனத் தாக்கங்களிலிருந்து தள்ளியிருக்கும் சேதன உணவாக அமைகின்றது. இன்று மேலைத்தேய நாடுகள் செயற்கைப் பசளை பயன்படுத்தப்படாத சேதன உணவுகளையே நாடுகின்றன. இதன் காரணமாக பனங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதநீர், பனங்களி போன்றவற்றிற்கும் அவற்றிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்களுக்கும் அதிக சந்தை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

எதுவிதமான இலக்கிய ஆராய்ச்சிகளோ, கலாச்சார ஆராய்ச்சிகளோ செய்யப்படும்போது பனை மரத்தின் ஓலையானது தட்டிக்கழிக்கப்பட முடியாத மிகவும் முக்கியத்துவம் பெறும் ஒரு பாகமாகும். தமிழ்க் காவியங்களான கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், தேவார திருவாசகங்கள் மற்றும் மகாபாரதம் அத்தனையும் பனை ஓலைச் சுவடிகளிலேயே எழுதப் பட்டன. இவ்வளவு பெருமை, சிறப்புமிக்க பனை மரத்திலிருந்து கிடைக்கும் மருத்துவ முக்கி யத்துவம் பற்றி நோக்கி அவற்றை எமது அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியது இன் றைய காலகட்டத்தில் முக்கியமானதொன்றாக அமைகின்றது.

பனையிலிருந்து பெறப்படும் பயன்பாடுகளை உணவு வகைகள், உணவு சாரா உற்பத்திகள் என இரண்டு வகைக்குள் உள்ளடக்கலாம். உணவு வகைகளினுள் சாற்று உற் பத்திகள், பனம்பழம் சார் உற்பத்திகள், கிழங்கு சார்ந்த உற்பத்திகள் என்பவற்றைக் கூறமுடியும். உணவு சாரா உற்பத்திகளினுள் ஓலை சார்ந்த உற்பத்திகள், பனை மரத்தண்டு சார் உற்பத்திகள், பனங்கொட்டை உற்பத்திகள் என்பவற்றை அடக்கமுடியும். மேற்கூறிய உற்பத்திகளின் மருத்துவ பயன்கள் பற்றி நோக்குவோம்.

யாழ்ப்பாணம்

## பனங்கள்



பனைகள் பொதுவாக தை, மாசி மாதத்தில் பூத்து ஆறு மாதங்கள் வரை அதாவது ஆவணி மாதம் வரையில் பாளையாக வளர்கின்றன. பெண் பனையின் பூக்களில் குரும்பை பிடித்து நுங்கு ஆகிப் பின்பு பழமாக பழுக்கின்றது. பூ பூத்து குரும்பை பிடிக்க ஆரம்பிக்கும் காலத்திலேயே இப் பாளை கள் எடுப்பதற்குப் பதப்படுத்தப்படுகின்றது. இதிலிருந்து கள் பெறப் படுகின்றது. இப்பனங்கள் மருத்துவ பயன்மிக்கதொரு பான மாகும் என்பது அகத்தியர் குண பாடத்தில் பின்வருமாறு கூறப் பட்டுள்ளது.

*விந்துதிர மூறுமதி வெப்புடனே தாகம்போம்*
*பந்தமாந் தாதுவுமோ பாரிக்கும் - உந்து பித்தந்*
*தோன்றும்பா டாணங்கள் சுத்தியுமாந் தோகை மின்னே*
*என்ற பனை மதுவிற்கே* (அ.கு)

அதாவது உடலுக்கு வன்மையும், ஆண்மையும் உண்டாகும், நீர் வேட்கை போகும், மேலும் மருந்துகள் செய்வதற்கான பாஷாணங்களை தூய்மை செய்ய பனங்கள் பயன்படும் என அகத்தியர் கூறியுள்ளார்.

உடன் கள்ளில் அத்தியாவசியமான அமினோ அமிலங்கள் உட்பட பல போஷணைக் கூறுகள் அடங்கியுள்ளன. அம்மை நோயின்போது உடன் எடுத்த கள்ளில் 1 - 2 மேசைக் கரண்டி பருகக் கொடுக்க குடலிலுள்ள அம்மைக் கொப்பளங்கள் ஆறும். கல்லீரலில் ஏற்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்களை குணப்படுத்தக் கூடியது. புளிப்பேறிய கள் மயக்கம் தரும். அறிவை மயக்கும் ஆனால் உடல் நலத்தைக் கொடுக்கும்.

## பதநீர்



கள், பதநீர் பெறுவதற்கு வேறுவேறான முறைகள் பின்பற்றப் படுவதில்லை. சாற்றினை சேமிக்கும் முட்டியிலேயே வித்தியாசம் உண்டு. அதாவது, முட்டிகளின் உட்புறத்தில் நீற்றுச் சுண்ணாம் பினை நன்றாகப் பூசி பின் சாறு சேகரிக்கப்படும். இது பதநீர் எனப் படும். சுண்ணாம்பு பூசுவதால் மதுவத் தாக்கங்கள் நடைபெறுவது தடுக்கப்படும். ஆகவே பதநீர் புளிக்காது. இது இனிப்புச் சுவையை உடையது.

பதநீரானது கல்சியம், பொஸ்பரஸ், நியாசின், அத்தியாவசிய அமிலோ அமிலங்கள், பொட்டாசியம், இரும்பு, விற்றமின்கள் போன்ற போசனைக் கூறுகளை அதிகம் கொண்டுள்ளது. இதனை அருந்துவதால் உடலுக்கு குளிர்ச்சி ஏற்படுவதோடு, நோய் எதிர்ப்பு ஆற்றலும் அதிகரிக்கின்றது. மூட்டுக்கள், என்புகள், பற்களைப் பலப்படுத்த உதவு கிறது. அம்மை நோயின்போது இதனை அருந்துவதால் நோய் தணியும். பதநீரை 48 நாட்கள் தொடர்ந்து குடித்து வந்தால் மேக நோய்கள் தணியும். இது உடல் மெலிந்தவர்களுக்கு சிறந்த ஊக்கம் தரும்.

சிறுநீரகம் தொடர்பான பிரச்சினைகளை குணப்படுத்தும், வெயில் காலங்களில் வரக்கூடிய நீர்க்கடுப்பு, சிறுநீர் வெளியேறும் பாதைகளில் வரக்கூடிய வலிகளை குணப்படுத்தும், மலச்சிக்கலைத் தீர்க்கும், கழிவகற்றியாகவும், வியர்வை நீக்கியாகவும் தொழிற்படுவதோடு, உடல் வீக்கம், வயிறு தொடர்பான பிரச்சினைகளை கட்டுப்படுத்தும். வெந்தயத்தை 50 கிராம் எடுத்து இலேசாக வறுத்து பொடி செய்து காலை, மாலை இருவேளை 50 மி.லீ. அளவு சூடாக்கிய பதநீரில் கலந்து அருந்திவர இரத்தக்கடுப்பு, மூலச்சூடு தணியும். பதநீரிலிருந்தே பனம்பாணி, பனங்கட்டி போன்றன உற்பத்தி செய்யப்படுகின்றன.

## நுங்கு



*நீர்வார் வியர்க்குருவை நீக்குமன லாக்குந்தோற்*

*சார்வா மயஞ்சீதந் தானொழிக்குஞ் - சேர்வார்*

*விழிக்கரையாந் துஞ்சளிக்கு மென்சுரத மானே!*

*கழிக்கரையாந் தாளியிளங்காய்* (அ.கு)

அதாவது நெய்தல் நிலப் பனையினது இளங்காயிலுள்ள நுங்கின் நீரானது வியர்க்குருவை நீக்கும், பசி யைத் தரும், தோலுடனே இருக்கும் நுங்கு சீதபேதியை விலக்கும் என்று அகத்தியர் குண பாடத்தில் கூறப்பட்டுள்ளது. நுங்கிற்கு சிறுநீர் பெருக்கி, உள் அழலாற்றி, உடல் உரமாக்கி போன்ற மருத்துவச் செய்கைகள் உள்ளன. உடலில் சர்க்கரையின் அளவை சீராக வைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுறுசுறுப்புடன் செய்றபட நுங்கு உதவுகின்றது. தாகத்தை தணிக்கும். இதில் விற்றமின் D, இரும்பு, கல்சியம், நாகம், பொட்டாசியம் போன்ற சத்துக்கள் உள்ளன. உடல் வெப்பத்தைத் தணிக்கிறது.

பனை நுங்கிற்கு கொழுப்பைக் கட்டுப்படுத்தி உடல் எடையை குறைக்கும் ஆற்றல் உண்டு. நுங்கானது மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு இரண்டிற்கும் மருந்தாகப் பயன்படும். இரத்தச் சோகை உள்ளவர்கள் நுங்கைக் குடித்தால் நல்ல பலன் கிடைக்கும். நுங்கில் காணப்படும் ஒருவகை இரசாயனப் பொருள் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் கட்டிகள் வருவதைத் தடுக்கக்கூடியது. குடல் புண்ணை ஆற்றும். இந்த நுங்கின் நீரை உடலில் தடவ வியர்க்குரு மறையும். நுங்கு நீரில் மெல்லிய பருத்தி துணியை நனைத்து கண்கள் மேல் பற்றாக வைக்கும்போது கண்களில் ஏற்படும் சிவப்பு தன்மை மறையும். கண்களில் ஏற்படும் சோர்வு சரியாகும்.

## பனை வெல்லம் / பனங்கட்டி



*தெங்கின் வெல்லத்தாற் செரியாக் குணம் சோபை*

*யங்கமுறு நீரும் அதிகரிக்கும் - தங்குபனை*

*வெல்லத்தால் வாத பித்தம் வீறுகபம் சந்நிநோய்*

*வல்லருசி குன்மம் அறுமால்*

அதாவது தெங்கின் வெல்லத்தால் செரியா மந்தம், வீக்கம், நீரேற்றம் அதிகரிக்கும். பனை வெல்லத்தால் வாத பித்த தொந்தம், சிலேத்துமதோஷம், சந்நிபாதம், அரோசகம், வாத குன்மம் இவை தீரும் என்று கூறப்பட்டுள்ளது.

பனை வெல்லம் இரும்புச் சத்து நிறைந்தது. ஆகவே குருதிச் சோகைக்கு சிறந்த மருந்தாகும். வறட்டு இருமல், சளி நிலைமைகளின்போது பனை வெல்லம் சிறிது துண்டு உண்டுவர அவை நீங்கும். உடல் எடை குறைப்பிற்கு சிறந்த பலனைத் தரும். வெள்ளை சீனியைவிட உயர் அளவில் போசணையை கொண்டது. உடல் ஆரோக்கியத்தைப் பேணக் கூடியது. கல்சியம் அதிகளவில் காணப்படுவதால் என்புகளின் வலிமைக்கு மிகவும் உகந்தது. மாதவிடாய் காலங்களில் பெண்களுக்கு ஏற்படும் வயிற்று வலிக்கு நிவாரணம் அளிக்கின்றது. குளிர்காலத்தில் ஏற்படும் செரிமானப் பிரச்சினைகளை நீக்குவதோடு செரிமானத்திற்குரிய நொதியங்களை செயற்படுத்துகிறது. பனை வெல்லத்தை அன்றாட உணவில் சேர்த்துவர மூட்டுவலி குறையும்.

## பனங்கற்கண்டு / கல்லாக்காரம் (பதநீர் உற்பத்திகள்)



*மேக வனலுமிக வீசும சூரிகையால்*

*ஆக முறுகனலு மாறுங்காண் - மேகனத்தில்*

*தங்கி வரு நீர்ச்சுருக்குந் தாகவெப்ப முந்தணியும்*

*இங்கு பனங் கற்கண்டுக் கே* (அ.கு.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்கற்கண்டுக்கு மேகசுரம், மசூரிகையின் வெப்பம், நீர்ச்சுருக்கு, உஷ்ணதாகம் இவை நீங்கும்.

கல்சியம், பொஸ்பரஸ் உயர் அளவில் காணப்படுவதால் என்பு, பல் வளர்ச்சிக்கு உதவு கிறது. உடலில் குருதியில் சீனியின் அளவைக் கூட்டாது. ஆகவே நீரிழிவு நோயாளர்களும் இதனைப் பயன்படுத்தலாம்.

பனை மரத்திலிருந்து கிடைக்கும் உணவுப் பொருட்கள் குளிர்ச்சித் தன்மை வாய்ந்தது என்றாலும் குளிர்காலங்களில் ஏற்படும் ஜலதோஷத்தால் நெஞ்சு சளி, இருமல், தொண்டைக் கரகரப்பு ஆகியவற்றைப் போக்குவதில் வல்லமை வாய்ந்தது. சிறிதளவு பனங்கற்கண்டை உமிழ்ந்து சாப்பிட்டால் இப்பிரச்சினைகள் தீரும்.

உடலுக்குத் தேவையான நிறைந்த சத்துக்களை கொண்டுள்ளதால் இதனை உண் ணும்போது உடல் வலுப்பெறும். நோயெதிர்ப்புச் சக்தி அதிகரிக்க பனங்கற்கண்டை பாதாம் மற்றும் மிளகுத் தூளுடன் உண்ணலாம். கர்ப்பிணிப் பெண்கள் பனங்கற்கண்டைச் சாப்பிட்டு வந்தால் மகப்பேறு காலத்தில் ஏற்படும் மலச்சிக்கல், வயிற்றுப்புண் குறைவடையும். இரத்த அழுத்தத்தை சீராக்குகிறது. நீண்ட நாட்களாக மாறாத இருமலுக்குக்கூட பனங்கற்கண்டு மருந்தாகச் செயற்படுகின்றது.

## பனங்கிழங்கு



*பனங்கிழங்கால் அத்திவெப்பும் பன்மேகமும் போகும்*
*இனும் குறிர்ச்சியோடு அழகும் எய்தும்* (அ.கு.)

பனங்கிழங்கால் அஸ்தி, சூடு, பித்தமேகம் முதலிய மேகங்களும் போகும். குளிர்ச்சியும் வனப்பும் உண்டாகும். பச்சைக் கிழங்கின் எடையில் 0.45 வீதம் கொழுப்பு காணப் படும். இது மனிதனின் இரத்தத்தில் காணப்படும் கொலஸ்திரோல் எனப்படும் கொழுப்பினை யும் இருதய நோய்களையும் குறைக்கவல்லது.

## புழுக்கொடியல்



பனங்கிழங்கை நீரில் அவித்து அதனை இரண்டாகக் கிழித்து அதிலுள்ள தும்பை நீக்கி பின் உலர்த்தி பெறப்படும். இதை நேரடியாகவே உண்ண லாம். குளிர்காலத்தில் உடல் வெப்பத்தைச் சீராக வைத்திருக்க உதவும். பூச்சிகளை அழிக்கும் ஆற்றலும் பனங் கிழங்கில் உண்டு. இதனை பொடித்து பனைவெல்லம் மற்றும் தேங்காய்சேர்த் துண்ண உடலுக்கு ஊட்டமளிக்கும்.

## பச்சை ஒடியல்

பச்சைக் கிழங்கினை இரண்டு துண்டுகளாகக் கிழித்து உலர்த்தி அவிக்காமல் பச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாகவே வெயிலில் காயப்போட்டு எடுப்பதாகும். ஒடியல் யாழ்ப்பாண மக்களின் பிரதான உணவாக இருந்து வந்தது. இது மாப்பொருளும் நார்ச்சத்தும் நிறையப்பெற்ற உணவாகும். ஆனால் புரதமும் கொழுப்பும் ஓரளவு குறைவாகவே காணப்படும். சோடியம், பொட்டாசியம், கல்சியம், மக்னீசியம், இரும்பு போன்ற கனியுப்புகளை அதிகம் கொண்டுள்ளது. நாளாந்த உணவில் எவ்வாறு அரிசியும் கோதுமையும் சேர்த்துக்கொள்ளப்படுகிறதோ அதேபோல ஒடியலினையும் சேர்த்துக்கொள்ளமுடியும்.

போதியளவு நார்ச்சத்து உள்ளதால் சமிபாட்டினை விரைவுபடுத்தி மலச்சிக்கல் ஏற்படுவதிலிருந்து தடுக்கின்றது. ஒடியல் மாவிலிருந்து ஒடியல் கூழ், ஒடியல் பிட்டு போன்ற உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. இவை ஊட்டச்சத்து நிறைந்தவை.

## பனம்பழம்



பனம்பழத்தைச் சுட்டுச் சாப்பிடும் வழமை நம்மவர்களிடையே காணப்படுகின்றது. இப்பழத்தை சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் சாப்பிடலாம். பனம்பழச்சாற்றில் நீர்ச்சத்து, புரதம், கொழுப்புச் சத்து, உலோக உப்புக்கள், விற்றமின் C மற்றும் கரோட்டின் என்பன காணப்படுகின்றன. கண் பார்வை திறனை அதிகரிக்கும் கரோட்டின் இதில் அதிகமுள்ளதால் பார்வை திறனை அதிகரிக்கும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. பனம்பழ சாற்றை சரும நோய்களிற்கு பூசிவர நல்ல பயன்கிடைக்கும். இனிப்பு சுவையுள்ள பழமாக இருந்தாலும் நீரிழிவு நோயாளர்களும் இதனைச் சாப்பிடலாம்.

பனம்பழச் சாற்றுடன் மாவு சேர்த்து பிசைந்து பலகாரம் செய்து சாப்பிடுவார்கள். இது உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் சிறந்தது. புற்றுநோயை கட்டுப்படுத்தும் விற்றமின் A கரோட்டின் உள்ளது. நார்ச்சத்து அதிகமாக காணப்படுவதால் சமிபாட்டுக் கோளாறுகளைச் சீராக்கும். அப்பிள், தோடம்பழம், பப்பாசி போன்றவற்றை விட கூடியளவில் பெக்ரினை பனம்பழம் கொண்டுள்ளமை ஆராய்ச்சியின் முடிவு. நோயாளிகள் பனாட்டினை உண்பது சிறந்தது.



பனாட்டு என்பது பனங்களியிலிருந்து தும்பை நீக்கி பின் அதை வெயிலில் காயவைத்து இப்படி ஆறு / ஏழு நாட்கள் செய்து பெறப்படுகிறது. நிறைந்த மருத்துவ சத்துக்களை கொண்டது. பொதுவாக மழைக் காலங்களில் உண்ணுவார்கள்.

இவற்றைவிட பனங்களியிலிருந்து ஜாம், கோடியல், பனம்பானம் முதலியனவும் தயாரிக்கப்படுகின்றன. செயற்கையான பானங்களைவிட இவை போசணை மிக்கதும் இலகுவாகக் கிடைக்கக்கூடியதுமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனம்பழத்தை அதிகமாக உண்டால் கரப்பான், அழுகிய சிரங்கு, பித்த நோய்கள் ஏற்படும் என்று மருத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ளது. ஆகவே இதனை அளவோடு உண்ண வேண்டும்.

பனையின் பூவானது வாதகுன்மம், மூத்திரச்சிக்கல், சுரம் முதலியவற்றை போக்கக்கூடியது. பனையின் குருத்து உண்பதால் இரத்தமூலம், பேதி என்பன ஏற்படும். பனை ஓலை, மட்டை இவைகளை சுட்ட சாம்பலிலிருந்து ஓர்வித உப்பு எடுத்து குறைந்த அளவில் வயிற்றுப்புண் நோய்களுக்கு கொடுக்கலாம். மட்டைச்சாறு கண் நோய்களை அகற்றும். பூவைச் சுட்ட சாம்பல் துர்மாமிசத்தை போக்கும். மலக்கட்டை நீக்கும்.

இவ்வாறு பனை மரத்தின் பயன்களை கூறிக்கொண்டே போகலாம்.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்

கொள்வர் பயன்தெரிவார்"

என்ற நன்றியின் பயனோடு பனையின் பயனை ஒப்பிட்டு வள்ளுவர் கூறியதிலிருந்து பனையின் மேம்பட்ட சிறப்புத் தன்மை விளங்குகின்றது.

"தென்னையை விதைத்தவன் தின்றுவிட்டுச் சாவான்

பனையை விதைத்தவன் பார்த்துவிட்டுச் சாவான்"

இந்தப் பழமொழியைக் கூறியே நம் மக்கள் பனை விதைப் பவனைக் கைவிட்டு விட்டனர். இதிலுள்ள உண்மை என்னவெனில், தென்னையை விதைப் பவன் அது குறுகிய காலத்தில் தரும் பலன்களை அனுபவித்து உண்டு வயதாகி சாவான். ஆனால் பனை விதைத்தவன் பனையின் நற்பலன்களால் தன்னுடைய சந்ததியர் வளமாக வாழ்வதை பார்த்துவிட்டுச் சாவான் என்பதே உண்மை.

எனவே, எண்ணிலடங்கா பலன்களை தந்த பனை மரங்களை வாழையடி வாழை யாக நமது அடுத்த தலைமுறைகளும் பயன்படுத்தும் வகையில் பாதுகாப்பாக வளர்ப்பதுதான் பனை மரங்களிற்கு நாம் செய்யும் கைம்மாறு. பனையிலிருந்து கிடைக்கும் அனைத்து பலன்களையும் நாமும் அனுபவித்து நம் எதிர்கால சந்ததியும் அனுபவிக்கக்கூடிய வகையில் பராமரிப்பது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

" பனை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்"

✡✡✡✡✡✡✡✡


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுநகர் அச்சுதன்

# பூமித்தாயின் கற்பக விருட்சமே !



தேவலோகத்தின் கொடையாளி போலவே
பூலோகத்தின் கொடையாளி தாலமே!
வேண்டிய வரம் தன்னை கொடுத்திடும் கற்பகம் போலவே
பல்வகைத் தேவைகள் நிறைவேற்றிடும் தாலமே !

சூழலின் தனித்துவமாக ஒற்றைப் பனையெனவும் - இருள்
சூழ்ந்த காடுபோல் கூட்டமாகவும்
வாழ்ந்திடும் வரம் பல பெற்றிட்ட செல்வமே!
வையகம் முழுவதும் உன்புகழ் ஓங்குமே!



தமிழர்தம் வாழ்விலே ஒன்றிட்ட விருட்சமே!
தமிழுக்கோர் பெருமைகள் சேர்த்திட ஏடு தந்தாயே !
தரணியில் சுவை மிக பண்டங்கள் பல தந்தாய்
தாயென போற்றிடும் குணம் பல கொண்டாய்

போற்றும் உன்புகழ் பார்முழுதும் ஓங்க
தோற்றம் பெற்றதோ தாலவிலாசம்
ஏற்றமிகு வாழ்விற்கு ஏணியாய் நின்றாய் - புயற்
காற்றும் எம்மை சீண்டாமல் காவலாய் நின்றாய்

பண்பியல் வாழ்வினில் இரண்டறக் கலந்தாய்
வான்புகழ் ஓங்கிடச் சேவைகள் செய்தாய்
ஆடிப்பிறப்பினில் கொழுக்கட்டை தந்தாய்
தேடிப் பனங்கட்டிக் கூழ் காய்ச்ச வைத்தாய்

பாகங்கள் அனைத்தையும் பயனுள்ள தாக்கவே
பூமியில் தோன்றிய அரும் பெருஞ்செல்வமே!
மச்சக் கூடிதன் மகிமையை உணர்த்தினாய்
மகுட வாக்கியம் பல உருவாகிடச் செய்தாய்

புலவர்கள் கவிஞர்கள் நின்புகழ்பாட வைத்தாய்
புலம்பெயர் உறவுகள் உன்னை தேடிடச் செய்தாய்
பனைமரத்தாயே பரம்பரை வாழ வழிபல செய்தாய்
பண்பாடு காத்திட சின்னமாய் நின்றாய்

மன்னவர் போற்றிடும் மாபெரும் விருட்சமே!
கண்ணிமை போல் உன்னைக் காத்திட வேண்டுமே!
நின் புகழ் பாடிடும் வரமது வேண்டுமே!
பூமித்தாயின் கற்பக விருட்சமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தமருத்துவர் யோ.மதீசன்
பொதுமுகாமையாளர்,
சித்த மருந்துகள் உ.வி.வை.சே.கூ.சங்கம்.




# சித்த மருத்துவ நோக்கில் பனை!

## ஓர் பார்வை!

தமிழர்களின் வாழ்வியலோடு ஒன்றித்து நிற்கக் கூடிய வகையிலும் சித்தமருத்துவ நோக்கில் பயன்பல தருவதிலும் சிறப் பானதொரு அடையாளச் சின்னமாகப் பனை காணப்படுகிறது.

தாவரவியற் பெயர் : **Borassusflabellifer, linn**

வேறுபெயர்கள் : தாலம், கரும்புறம், ஏடகம், காமம், தருவிராகன், தாளி

இம் மரத்தின் இலைகள் (ஓலைகள்), மட்டை, பூ, வேர் இவைகள் அனைத்தும் மருத்துவத்தில் பயன்படுகின்றன.

### செய்கைகள் :

- இலை, மட்டை : துவர்ப்பி, ஆண்மை பெருக்கி.
- நுங்கு : சிறுநீர்பெருக்கி, உள்ளழலாற்றி, உடலுரமாக்கி.
- மது : சிறுநீர் பெருக்கி, குளிர்ச்சியுண்டாக்கி.
- கள் : வெப்பமுண்டாக்கி, தாபமகற்றி

### மருத்துவ குணங்கள்

- பனம் பூ வாதகுன்மம், பல்நோய்கள், பழையசுரம் என்பனவற்றை நீக்கும்.
- பனைநுங்கின் நீரானது வியர்க்குருவை நீக்கும், பசியைத்தரும், சீதக்கழிச் சலைப் போக்கும்.

"நீர்வார் வியர்குருவை நீக்குமனலாக் குந்தோந்
சார்வாமயஞ் சீதந் தானொழிக்குஞ் – சேர்வார்
விழிக்கரையாந் துஞ்சளிக்கு மென்சுரத மானே
கழிக்கரையாந் தாளியிளங்காய்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பனைஓலை விசிறியினால் வளிநோய்களும் அழல் நோய்களும் நீங்கும்.



"பனைவிசிறி தன்னாந் பருத்தொரு வாத
வினையுமைய நோயும் விலகுங் – கனைபித்த
நோயு மருசியென்ற நோயுங் குடியேகுந்
தேயுமிடை மாதே தெளி"

என்பது சித்தர் குறிப்பு.

- கள்ளினால் உடற்குவன்மையும் ஆண்மையும் உண்டாகும் நீர்வேட்கை போகும்.
- பனங்கற்கண்டினால் மேகசுரம், அம்மையின் வெப்பு, நீர்சுருக்கு, தாகம் இவைகள் போகும்.
- வெல்லம் – முக்குற்றத்தால் வரும் நோய்களும் போம்.



"............தங்குபனை வெல்லத்தால் வாதபித்தம் வீறுகபஞ்
சன்னிநோய் வல்லருசி துன்மமறு மால்" என்பது சித்தர் வாக்கு

- கிழங்கு – எலும்புச்சூடு போம், குளிர்ச்சியும் வனப்பும் உண்டாகும்.

## பொதுநோக்கு :–

இதன் பூவைப் பதப்படுத்தி அதன் முனைசீவி வாய்வளியாய் வடியும் நீரைக் குடுவைகளில் தங்கும்படி செய்து எடுப்பார்கள்.

இதற்குக் கள் என்பது பெயர். அக்குடுவையில் கொஞ்சம் சுண்ணாம்பு தடவினால் புளிக்காது. இதற்குப் பதநீர் அல்லது பனஞ்சாறு என்று கூறுவார்கள். புளிக்காத கள் பத நீரே மருத்துவத் தன்மை கொண்டது. பதநீரிலிருந்து வெல்லம், கற்கண்டு, சர்க்கரை முதலியவை தயாரிக்கின்றனர். இவையும் சித்தமருத்துவத்தில் முக்கிய இடம் வகிக் கின்றன.

கிழங்கை உலர்த்தி பொடிசெய்து அத்துடன் தேங்காய்ப்பால் சேர்த்து பிட்டவியல் செய்து உண்டுவர உடல் வன்மை பெறும்.

மேற்குறித்த வகையில் சித்தமருத்துவத்திலும் தமிழர் வாழ்வியலோடும் ஒன் றித்து பயணித்துக்கொண்டிருக்கும் உற்ற நண்பன், எமது வாழ்வியலின் தோழன் பனை என்று பெருமைகொள்வோம்.

**பனைவளர்ப்போம்! பயன்பல பெறுவோம்!!**

✡✡✡✡✡✡✡✡



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை எங்கள் வாழ்வியல்

கற்பகதரு மரத்தின் அவதாரம்!
தொன்மைத் தமிழை எழுத்தாணி கொண்டு
கற்பில் சுமந்த ஓலைச்சுவடியின் அதிகாரம்
ஓலைக் குடிலையும் – குளிர்
சோலையாக்கிய மரக்காலம் !

நுங்கு பதநீர் பனைவெல்லம்
பனங்கிழங்கு என
மெய்யான நோய் நீங்க
மெய்யான மெய் தந்த உண்கலம்
கற்காலம் தொட்டு தற்காலம் வரை
தமிழரின் உயிர்க்கலம்
பனைப் பெண்ணைக் காப்போம்
தமிழரின் உயிர் காப்போம் !



வேர்களின் தளம் போட்டு
மண்ணரிப்பினை தடுத்து – நீர்
ஊற்றுத்துணை காத்த படைக்கலம்
பகலும் இரவும் பல்லுயிர் பிராணிக்கு
தன்னுயிர் ஈரும் அடைக்கலம் !

வேர்வை நீக்க விசிறி
நீர்இறைக்க தோண்டி, காக்கட்டை
பொருள்சேர்க்க பெட்டி பெரிதாக கடகம்
படுத்துறங்க பாய் தவளும் குழந்தைக்கு தடுக்கு
நார் முடைந்த ஊஞ்சல், நடைவண்டி!

நி.நிதர்சினி.
முல்லை கிழக்கு ப.தெ.வ.
அ.கூ.சங்கம்

குருத்தோலை கொழுக்கட்டை என
நேராக தின்று சீரான நன்றுகள் தந்து
தமிழரின் வரலாறு அச்சில் ஏறும்வரை
புராணம் காத்தாள் தமிழுக்கு பிராணம் தந்தாள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுச் சங்கங்களின் இருப்பு எடுத்தல் !



கூட்டுறவுச் சங்கங்களில் பொருட்கள் கையாளப்படும் நிலையங்களில் இருப்பு பரிசீலித்தல் மிகவும் முக்கியமானதொன்றாகும்.

இதற்கு கூட்டுறவுத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படிவம் 22 / படிவம் 122 - இருப்பு எடுக்கும் தாள் பயன்பாட்டில் உள்ளது.

எந்தப் பொருள் இருப்பு பரிசீலனையை மேற்கொள்ளும் இடங்களிலும் இதன் பயன்பாடு சட்டப்படி செல்லுபடியானதாகும்.

**வை.கைலைநாதன்,**
**ஓய்வுநிலை கூ.அ.அலுவலர்,**
**சுழிபுரம்**

இப்படிவம் 22 (இருப்பு எடுக்கும் தாள்) பின்வரும் அமைப்பினைக் கொண்டிருக்கும்.

01. மேற் பாகம் 02. மத்திய பாகம் 03. கீழ்ப்பாகம்

**மேற் பாகம்** : இப்பகுதியில் தாள் இலக்கம், திகதி, ஸ்தாபனத்தின் பெயர், கிளை இலக்கம், இருப்பெடுத்தல் ஆரம்பித்த நேரம், முடிவடைந்த நேரம் என்பனவும், படிவம் 22இன் தொடர் இலக்கமும் அமையப்பெற்றிருக்கும். இவை இருப்பெடுத்தல் உத்தியோகத்தரால் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

**மத்திய பாகம்** : இப்பகுதியில் தொடர் இலக்கம், விபரம், தொகை (எண்ணிக்கை, அளவு, நிறை) என்பனவும், விரைவாக / சாதாரணமாக / குறைவாக ஒன்றின் கொள்விலை, மொத்த கொள்விலை, ஒன்றின் விற்கும் விலை, மொத்த விற்கும் விலை என்பனவும் இடம்பெற்றிருக்கும்.

இருப்பெடுக்கத் தொடங்கும்போது முதல் தாளில் அந்நிலையத்தின் பயன்பாட்டிலிருக்கும் சகல படிவங்களையும் ஒப்பமிட்டு முடிவுறுத்தி இறுதி விற்பனைச் சிட்டைகள் (கடன் / ரொக்கம்) இலக்கங்கள் குறிக்கப்பட வேண்டும். அத்தோடு கையிருப்புப் பணம் பரிசீலிக்கப்பட்டு உறுதிப்படுத்தி அந்நிலைய முகாமையாளரிடம் ஒப்பம் பெற்றுக்கொள்வதோடு, இருப்பெடுக்கச் செல்பவர் அதனை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தலைமை அலுவலகத்தில் அக் கையிருப்பு பணம் செலுத்தப்பட்டிருப்பின் படிவம் 10 இலக்கம், திகதி என்பன குறிப்பிட்டு இருப்பெடுக்கும் உத்தியோகத்தர் உறுதிப்படுத்தவேண்டும். இவ்வாறே இறுதித் தாளில் அக்கிளையில் பாவனையிலுள்ள அனைத்துப் பொருட்களையும் குறித்து கிளை முகாமையாளரின் உறுதிப்பாட்டுடன் இருப்பெடுக்கும் உத்தியோகத்தர் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த மத்திய பகுதியில் பொருட்கள் இருப்பெடுக்கும்போது தொடர் இலக்கம் ஒழுங்காக இடப்படுவதோடு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாள் மொத்தம், முந்திய தாள் மொத்தம், முழுமொத்தம் என்பன ஒழுங்காக குறிக்கப்படல் வேண்டும்.

**கீழ்ப் பாகம்** : மேற்படி இருப்புத் தாளில் குறிக்கப்பட்ட ......... தொடக்கம் ........ வரையானவை எண்ணியும் அளந்தும் நிறுத்தும் இருப்பு பரிசீலனை செய்யப்பட்டு அவை யாவும் எனது பொறுப்பிலும் பாதுகாப்பிலும் இருப்பதென்பதை அந்த நிலைய முகாமையாளர் உறுதிப் படுத்தல் வேண்டும்.

பொறுப்பு மாற்றப்படும்போது பொறுப்பு எடுப்பவர் மேற்குறிப்பிட்ட ....... தொடக்கம் ....... வரையானவை சரிவர எண்ணியும் அளந்தும் நிறுத்தும் பொறுப்பேற்றுக்கொண்டேன் என் பதை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அத்துடன் பொருட்களை ஒப்படைப்பவரும் இருப் புத்தாளில் உள்ளபடி இருப்பு ஒப்படைக்கப்பட்டதனை உறுதிப்படுத்தி ஒப்பமிட்டு கொடுக்க வேண்டும்.

இருப்பு எடுக்கச் செல்லும் இருப்பு எடுத்தல் உத்தியோகத்தர் மேற்கூறியவை உண்மை யானவை என்பதனையும் இருப்பெடுப்பு சரிவர நடைபெற்றுள்ளது என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்வதோடு மேற்பார்வை உத்தியோகத்தர்கள், கிளைக்குழு உத்தியோகத்தர்கள் என்பவர்களிடமும் ஒப்பம் பெறல் வேண்டும்.

❖ எந்த வேளையில் இருப்பு பரிசீலனை மேற்கொண்டாலும் இப்படிவம் 22 பயன் படுத்துவதனை உறுதிப்படுத்திக்கொள்வது இருப்பு எடுக்கச் செல்கின்றவர்களது கடமையாகும்.

இருப்பு பரிசீலனை பின்வரும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படலாம்.

- திடீர் இருப்பு பரிசீலனை.
- மாதாந்த இருப்பு பரிசீலனை.
- காலாண்டு இருப்பு பரிசீலனை.
- அரையாண்டு இருப்பு பரிசீலனை.
- வருடாந்த இருப்பு பரிசீலனை.
- பணியாளர் மாறும் போது மேற்கொள்ளும் இருப்பு பரிசீலனை.
- களவு / கொள்ளை / இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் போது அனர்த்தம் ஏற்பட்ட நிலையத்திலுள்ள இருப்பின் அளவை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் இருப்பு பரிசீலனை.

❖ இருப்பு எடுத்தல் நடவடிக்கையை மூன்று கட்டமாக அவதானித்து நோக்கலாம்.

01. இருப்பு எடுத்தல் நடவடிக்கைக்கு முன்னர்.
02. இருப்பு எடுத்தல் நடவடிக்கையின்போது.
03. இருப்பு எடுத்தல் நடவடிக்கைக்கு பின்னர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01) இருப்பு எடுக்கும் நடவடிக்கைக்கு முன்னர்

தலைமை அலுவலகத்தில் இருப்பு எடுத்தலை தீர்மானிப்பவர்கள்,

- இயக்குனர் சபை
- பொதுமுகாமையாளர்
- கணக்காளர்
- கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள்.

அவதானிப்பு :-

கிளைப் படிவங்கள் பரிசீலிப்பவர் தகவல்கள், கிளை மேற்பார்வையாளர் தகவல்களை கருத்திற்கொள்ள வேண்டும். (பொதுமுகாமையாளர், கணக்காளர்)

அதிகாரம் அளிப்பவர் - பொதுமுகாமையாளர் (எழுத்துமூலமாக)

கிளைக்குழுவுக்குத் தகவல் கொடுத்தல் வேண்டும். திடீர் இருப்பு எடுப்பாராயின் இருப்பு எடுப்பவர் ஊடாக எழுத்து மூலமானதாக இருத்தல் வேண்டும்.

இருப்பு எடுத்தலை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள் :-

☆ கிளை / களஞ்சியப் பொறுப்பாளர்களுக்கு மேற்பட்ட சிரேஷ்ட உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும் .

☆ அவர் காரியாலய காகிதாதிப் பொறுப்பானவரிடம் இருந்து பெற்றுச் செல்லும் படிவம் 22இன் இலக்கங்களை எழுத்துமூலம் குறித்து ஒப்பம் இட்டுக்கொள்ளல்.

☆ மீதிப்படிவம் ஒப்படைக்கும்போதும் அவ்வாறான நடவடிக்கையினை மேற்கொள்ளல்.

☆ இருப்பு எடுத்தல் உபகரணம், தேவையான ஆட்கள் என்பவற்றை தயார்படுத்தல் வேண்டும்.

☆ திடீர் இருப்பு எடுத்தலாயின் ரகசியம் பேணப்படல் வேண்டும்.

☆ பொருட்களின் கொள்விலை, விற்பனை விலைப் பட்டியல்களைப் பெற்றுக் கொள்ளல்.

☆ வருடாந்த இருப்பு எடுத்தலாயின் இருப்பு எடுக்க முன்னர் சகல கிளைகளிலும் கழிவீடு செய்யப்படவேண்டிய பொருட்களை படிவம் 17இன் மூலம் கழித்து அதற்கான பதிவுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டு இருத்தல் வேண்டும்.

☆ ஏனைய இருப்பு எடுத்தலின்போது கழிவுகள், விற்கமுடியாதவற்றை தனித் தனியான படிவம் 22இல் குறித்துக்கொள்ளல் வேண்டும். இது பற்றி பொதுமுகாமையாளருக்கு விசேட அறிக்கை இடல் வேண்டும்.

☆ கிளைகள் / களஞ்சியங்களில் களவு, கொள்ளை, இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டு இருப்பு எடுக்க அனுப்பப்படுபவர்கள் புத்திசாதுரியமாக நடந்துகொள்ளல் வேண்டும். களவு எனத் தீர்மானித்தால் உடன் முகாமைக்கு தெரியப்படுத்தி கிளைமுகாமையாளர் ஊடாக பொலிஸில் முறைப்படி முறையீடு செய்து பொலிஸ் களவு இடம்பெற்றுள்ளமைக்கான பரிசீலனை செய்தபின்பு இருப்பை மேற்கொள்ளவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02) இருப்பு எடுக்கும்போது

இருப்பு எடுக்கச் செல்லும் உத்தியோகத்தர் கவனிக்கவேண்டியவை,

- ✯ விலைப்பட்டியலினை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளல்.
- ✯ சகல விடயங்களையும் குறிப்புப் புத்தகத்தில் முதலாவதாக எழுதி சரியென உறுதிப்படுத்தியபின் உடனுக்குடன் படிவம் 22இல் குறித்தல்.
- ✯ உபயோகத்தில் உள்ள அனைத்துப் படிவங்களையும் கேட்டுப்பெறல்.
- ✯ சகல படிவங்களின் இறுதிச் சிட்டைகளிலும் ஒப்பம், திகதி இட்டுக்கொள்ளல்.
- ✯ கையிருப்பிலுள்ள காசு மற்றும் காசோலைகளை அதற்குப் பொறுப்பிற்குரியவர் முன்னிலையில் பரிசீலனை செய்து அதனை உறுதிப்படுத்தி ஒப்பம்பெற்ற பின்னர் குறித்த காசு மற்றும் காசோலைகளை உரியவரிடம் மீளவும் ஒப்படைத்தல் வேண்டும்.
- ✯ கிளையில் வெவ்வேறு பகுதிகளில் தனித்தனியாக இருக்கும் ஒரே வகையான பொருட்களை ஒன்றாக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.
- ✯ நுகர்ச்சி விநியோகம், நிவாரண விநியோகப் பொருட்களை தனித்தனியாக வைத்திருத்தல்.
- ✯ விரைவாக விற்பனைப்படுத்தல், மெதுவாக விற்பனைப்படுத்தல், முடிவுத் திகதி நெருங்கிய பொருட்களை பற்றியும், நீண்டகாலமாக இருப்பில் இருப்பவை பற்றியும் முகாமையாளரிடம் கேட்டுக் குறித்துக்கொள்ளல்.
- ✯ நிறுவைப் பொருட்கள் / எண்ணும் பொருட்கள் / அளவுப் பொருட்கள் தனித்தனியாக ஒழுங்குபடுத்தி வைத்தால் இருப்பு எடுத்தல் மேற்கொள்ள இலகுவாக இருக்கும்.
- ✯ நேரம், காலம், சூழ்நிலைக்கு ஏற்ப தராசு போன்றவற்றை கருத்திற்கொண்டு முதல் எடுப்பவை இறுதியில் எடுப்பவற்றை தீர்மானித்தல் வேண்டும்.
- ✯ இருப்பு எடுக்கும் உத்தியோகத்தர் சகல பொருட்களையும் நேரில் பார்த்து உறுதிப்படுத்தல் வேண்டும். சொல்பவற்றை கேட்டு எழுதுபவராக இருத்தல் கூடாது.
- ✯ பொறுப்பு மாற்றும் சந்தர்ப்பங்களில் பொறுப்பு ஏற்பவர் திருப்திப்படும் அளவுக்கு இடம் அளித்தல் (எண்ணுதல், நிறுத்தல், அளத்தல்)
- ✯ இருப்பு எடுப்பு மேற்பார்வை உத்தியோகத்தரை,
  - ✍ பொதுமுகாமையாளர் நியமிக்கலாம்.
  - ✍ கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் (C.D.O) மேற்பார்வை செய்யலாம். - விசேடமாக கவனிக்கவேண்டிய நிலை ஏற்படின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தலாம்.

  இவர்களிடம் ஏதும் அவதானிப்பு இருந்தால் எழுத்துமூலம் முகாமைக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.
- ✯ ஏற்கனவே பெறப்பட்ட விலைப்பட்டியலின்படி கொள்விலை, விற்பனை விலை குறித்துக் கொள்ளுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✯ இருப்பு எடுத்தலுக்கு சமர்ப்பிக்கும் பொருட்கள் சங்கத்தால் வழங்கப்பட்டதை உறுதிப்படுத்திக்கொள்ளல்.
- ✯ சிறிய உரொக்க முற்பணக் கொள்வனவுகளில் மீதி இருப்பாக இருந்தவற்றை தனியாக இருப்பெடுத்தல் வேண்டும். விற்பனை செய்ய முடியாதவற்றை படிவம் 22இல் சேர்க்கக்கூடாது.
- ✯ இருப்பு எடுத்த பொருட்களை வேறுபடுத்தி வைத்திருத்தல் வேண்டும்.
- ✯ இருப்பு எடுக்கும்போது அளவுகள், வகைகள், விலைகள் என்பன சரியாக பரிசீலித்ததை உறுதிப்படுத்திக் குறித்துக்கொள்ள வேண்டும். புடைவை இருப்பெடுக்கும்போது மிகக் கவனமாக இவற்றை பரசீலனை செய்யவேண்டும்.
- ✯ எரிபொருளாயின் அடிமட்ட இருப்பினை உறுதிப்படுத்தல் வேண்டும் (எரிபொருட்கள் விற்று முடிந்த வேளைகளில் அடிமட்ட இருப்பினை மேற்கொண்டு உறுதிப்படுத்தல் சிறந்ததாகும். )
- ✯ குறித்துக்கொண்ட இருப்புக்களை ஒவ்வொன்றாக சரிபார்த்து (முகாமையாளர், பொறுப்பு மாற்றமாயின் பொறுப்பு பெறுபவர்) இருப்பு எடுக்கும் உத்தியோகத்தர் படிவம் 22இல் குறித்துக்கொள்ள வேண்டும்.
- ✯ இருப்பு எடுத்தல் மேற்பார்வைக்கு செல்பவர் இருப்பு எடுக்கும் கிளைக்கு தான் சென்ற நேரம், அங்கு சென்று தான் பரீட்சித்த பொருள் விபரம் வேறு ஏதாவது அவதானிப்புக்கள் போன்றவற்றையும் அறிவுறுத்தப்பட்ட விடயங்களையும் முகாமைக்கு அறிக்கை செய்தல் வேண்டும்.
- ✯ ஒவ்வோர் படிவம் 22 தாள்கள் பூர்த்திசெய்யப்பட்ட பின் சரிபார்த்து ஒப்பமிடல் வேண்டும். (கிளைமுகாமையாளர், பொறுப்பு ஏற்பவர், இருப்பெடுத்தல் உத்தியோகத்தர், கிளைக்குழு உறுப்பினர்கள்.)
- ✯ இருப்பெடுத்தல் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் மொத்தக் கொள்விலை, மொத்த விற்பனை விலை பதிவு செய்யப்படக்கூடாது.
- ✯ முழுப் பொருட்களும் இருப்புத் தாள் 22 இல் எழுதி மீண்டும் சரிபார்த்து 1 தொடக்கம் .......... வரையானவை எனது பொறுப்பில் உள்ள, அல்லது சரிவரப் பெற்றுக்கொண்டேன் என படிவம் 22இன் கீழ்ப் பாகத்தில் எழுதி உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.
- ✯ ஏனைய இருப்புக்கள் : -
  - ✍ படிவங்கள் - குறித்த நிலையத்தில் உபயோகத்திலுள்ள படிவங்கள் இலக்க அடிப்படையில் படிவம் 22இல் குறித்துக்கொள்ளல் வேண்டும்.
  - ✍ தளபாடம் / உபகரணம் - பாவனையிலுள்ள சங்கத்திற்குச் சொந்த மானவை இறுதியாக இருப்பெடுக்கப்பட்ட படிவம் 22 உடன் ஒப்பிட்டு குறித்துக்கொள்ளல் வேண்டும்.

    - தளபாட உபகரணங்களில் ஏதாவது உள்வரவுகள், வெளியேற் றங்கள் இருந்தால் அதனை அக்கிளை முகாமையாளரிடம் கேட்டு அதற்கான சான்றுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

    - இறுதியாக இருப்பு எடுக்கப்பட்ட படிவம் 22இல் குறிப்பிடப்பட்ட தளபாட, உபகரணங்கள் காணப்படாவிட்டால் (சேதம், இழப்பு) அவற்றைக் குறிப்பிட்டு தலைமை அலுவலகத்திற்கு அறிக்கையிடும் பொறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பு எடுத்தல் உத்தியோகத்தருக்கு உரியதாகும்.

✍ இறுதியாக சகல படிவம் 22இலும் ஒப்பங்கள் இடப்பட்டனவா என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

☆ ஒரு நாளில் இருப்பு எடுத்தல் முடியாவிடின் இரட்டை பூட்டு அடிப்படையில் இருப்பு எடுக்கும் உத்தியோகத்தரும், கிளை முகாமையாளரும், பொறுப்பு மாற்றமாயின் மூவரும் பொறுப்பேற்றல் வேண்டும்.

**03) இருப்பு எடுத்த பின்பு :-**

❖ இருப்பு எடுக்கும் தாளின்,

✎ முதல் பிரதி கூட்டுறவு அலுவலகத்திற்கும் (நிதி வருட இருப்பு எடுத்தலின்போது/ கூ.அ. உத்தியோகத்தர் இருப்பு எடுக்கும்போது.)

✎ இரண்டாவது பிரதி சம்பந்தப்பட்ட தலைமை அலுவலகத்திற்கும்

✎ மூன்றாவது பிரதி குறித்த நிலைய கிளை முகாமையாளருக்கும்,

✎ நான்காவது பிரதி இருப்பு பொறுப்பு மாற்றிக் கையளிக்கும் சந்தர்ப்பத்தில் பொறுப்பினை கையேற்பவருக்கும் வழங்கப்படல் வேண்டும்.

❖ இருப்பு எடுக்கும் உத்தியோகத்தர் தன்னிடம் உள்ள இரண்டாவது பிரதியை சரிவரப் பெருக்கி கொள்விலை, விற்பனை விலை தொகைகள் இட்டு அக் கிளையில் ஏதாவது அவதானிப்புக்கள் இருப்பின் அது தொடர்பான அறிக்கையுடன் தலைமை அலுவலகத்திற்கு ஒப்படைக்க வேண்டும்.

❖ இதனைப் பெற்ற கணக்காளர் அக்கிளைக் கணக்குப் படிவப் பரிசீலனை மேற் கொள்ளும் இலிகிதருக்கு எழுத்துமூலம் ஒப்படைத்தல் வேண்டும்.

❖ கணக்கு படிவ இலிகிதர் நாளாந்த திகதிவரை பெறப்பட்ட படிவங்களை உடனுக் குடன் சரிபார்த்து வைத்தல் வேண்டும். இருப்பு படிவம் 22இனைப் பரிசீலனை செய்தபின் சோர்வுக் கணக்கு (பொருள் குறைவுக் கணக்கு) தயாரித்து கணக்கா ளருக்கு விரைவாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

❖ கணக்காளர் அதனை உறுதிப்படுத்தி பொதுமுகாமையாளருக்க சமர்ப்பித்தல் வேண்டும்.

❖ பொதுமுகாமையாளர் இயக்குனர் சபைக்கு சமர்ப்பித்து வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

❖ இயக்குனர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட சோர்வுக் கணக்குகள் உரிய கிளை முகாமையாளருக்கு சமர்ப்பித்து அவரது ஒப்பம் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் உரியவருக்கு அதன் ஒரு பிரதி வழங்கப்படல் வேண்டும்.

மேற்படி நடைமுறைகளை இருப்பெடுத்தலில் சரியாகக் கடைப்பிடிக்கும்போது இருப்பெடுத்தலில் ஏற்படுகின்ற சிக்கல்களை தவிர்ப்பதுடன், சங்கத்தின் வியாபார பொருள் இருப்புக்கள், சொத்துக்கள், தளபாடங்களின் சரியான பெறுமதியினையும் அளவிடுவதோடு அவை தொடர்பான உண்மைத் தன்மையையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

✡✡✡✡✡✡



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை எமது வாழ்வின் அடையாளம் !

M. நானுஜா,
எழுதுநர்,
ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
முல்லை மேற்கு.



தமிழகத்தின் தேசிய மரம் எதுவென்று எத்தனை பேர் அறிந்திருப் பீர்கள்? பனைமரத்துக்குத்தான் அந்தப் பெருமை என்பது பலருக்கும் ஆச்சரிய மூட்டும் தகவலாக இருக்கும். வளம்மிக்க தமிழ் பூமியில் எண்ணற்ற மரங்கள் விளைந்து செழிக்க அப்படி என்ன உயர்ச்சி இந்த பனை மரத்துக்கு என்ற கேள்வி எல்லோருக்குள்ளும் எழும் வாழையின் அத்தனை பாகங்களையும் பயன்படுத்த தெரிந்த தமிழ் இனம் வாழையை விடவும் கூடுதலாக பயன்படுத்திய மற்றொரு தாவரம் பனை என்பது மிகையாகாது.

தமிழின மதிப்புமிக்க சொத்துக்களான இலக்கியங்களை தனது பழுத்த இலைகளில் பல தலைமுறைகள் கடந்து தாங்கி வந்ததனால்தான் கற்பகதருவிற்கு இவ்வங்கீகாரம் கிடைத்தது. போரரஸ் எனும் தாவர இனத்தைச் சார்ந்த பனைமரம் அதிகபட்சமாக 30m வரை வளரக்கூடியவை. இவை கிளைகளற்ற உச்சியில் கிட்டத்தட்ட 30-40 வட்டமான விசிறி வடிவ ஓலைகள் கொண்டவை ஆகும்.

கேட்டதை தரும் கற்பகதரு என்றே தமிழர்கள் இதனை அழைத்தனர். அதற்கான காரணமாக பழந்தமிழர் வீடுகளின் கூரைகளை கடும்வெப்பத்தின் பிடியில் காக்கும் பனை ஓலைகளைக் கொண்டு வேய்ந்தனர். அதற்கான உத்தரங்களை பனைமரங்களை கொண்டு உருவாக்கினர். அதுமட்டுமன்றி பனையின் குருத்துக்களில் செய்யப்பட்ட பெட்டிகளில் மக்கள் பல்வேறு பொருட்களை இட்டுவைத்தனர். பால் பொருட்கள் வைக்கப்பட்ட பானைகளை பனை உறிகளில் வைத்து தொங்க விட்டனர். பனை ஓலைகளில் செய்யப்பட்ட பாய்களில் இளைப்பாறினார்கள். இது மட்டுமன்றி சுளகு, துடைப்பான்கள், கயிறு, பனை விசிறி, காதணி, காற்றாடி, பனை ஓலை வெடி , வாசல் கால் மிதிகள், தடுக்குகள் என பனையால் நிறைந்தது தமிழர் வாழ்வு.

இவற்றையெல்லாம் தாண்டி பனை நுங்கு, பனை வெல்லம், பனங்கற்கண்டு, பனம் பழம், பதநீர், பனங்கிழங்கு என பனை தமிழர் வாழ்வில் தனது அத்தனை பாகங்களாலும் பின்னிப்பிணைந்தது. பனம்பழம் சிறந்த சத்துணவு. இதில் பீட்டா கரோட்டின் எனப்படும் விற்றமின் A சத்து அதிகமாக காணப்படுகின்றது. இது கண்பார்வைக்கு மிகவும் நல்லது.

தமிழர்கள் மிகுந்து வாழும் வடமாகாணத்தில் பனை மரங்கள் கூடல்களாக நிறைந்து காணப்பட்டமையால் வடமாகாணத்தின் அடையாளமாக கற்பகதரு போற்றப்படுகின்றது. தமிழர்கள் பனம்பழத்திலிருந்து பெறப்பட்ட கூழிலிருந்து ஜாம் (jam), குளிர்பானங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுப்பொருட்களை தயாரித்தனர். அதுமட்டுமன்றி பனம்பழத்திலிருந்து ஒருவித சலவைச் சவர்க்காரத்தை உருவாக்கினர். போர்க்காலங்களில் வேதியியல் பொருட்களால் ஆன சலவைச் சவர்க்காரங்கள் கிடைக்காதபோது பனம்பழங்களையே அதற்கு பதிலாக பயன்படுத்தினர். அதுமட்டுமன்றி பற்பசையும் கண்டுபிடித்து அதையும் பயன்பாட்டுக்கு கொண்டுவந்தனர்.

இதுமட்டுமன்றி பனையின் மூலம் பெறப்படும் உணவுகளைப் பற்றிய பண்பாடாக பனம் பழத்திலிருந்து களியைப் பிழிந்து வெயிலில் காயவிட்டு பனாட்டு எனப்படும் உணவுப்பொருள் செய்யப்படும். இது நீண்டகாலமாக வைத்து உண்ணத்தக்கது. பனம்பழத்தை சுட்டு வெல்லம் சேர்த்து சாப்பிடும் பண்பாடும் உண்டு என்பது நாம் அறிந்த ஒன்றே. பனங்கற்கண்டு சிறந்த சளி சம்பந்த நோய் நிவாரணியாக காணப்படுகின்றது. மாலை நேரத்திற்கு ஏற்ற உணவாக வேகவைத்த பனங்கிழங்கு உண்ணலாம். பாடகர்களின் குரல் வளம் காக்கும் உபாயமாக சுடவைத்த பாலில் பனங்கற்கண்டு சேர்த்து அருந்துவது சிறந்த மருந்து. (இதுமட்டுமன்றி இன்றைய பயன்பாட்டில் நுங்கு, பனங்கற்கண்டு, பதநீர் மட்டுமே உள்ளது)

பதநீர் நன்மைகளாக எலும்புகள் வலுவடைகின்றன, அம்மைநோய் கண்நோய் தடுக்கின்றது, வயிற்றுப்புண், வயிற்றெரிச்சல் குறைக்கப்படுகின்றது. கல்சியம், பொஸ்பரஸ், விட்டமின், இரும்புச் சத்து அடங்கியுள்ளதால் பற்கள் உறுதிப்படுத்தப்படுகின்றது. உடல் வெப்பத்தைத் தணிக்கின்றது. இதன்மூலம் சுவையான பானம் மட்டுமன்றி, உடலுக்கு ஆரோக்கியமானதாகவும் காணப்படுகின்றது.

பனை ஒலை கீழ்வரும் மூன்று பகுதிகளைக் கொண்டது.

1. ஓலை
2. மட்டை
3. பத்தல் (கங்கு மட்டை)

பத்தல் என்பது பட்டையின் அடிப்பகுதியில் கறுப்பாக இருப்பதாகும் ஆதிகாலத்தில் கிராமவாசிகள் பத்தல்களை வெட்டி செருப்பாக அணிவார்கள். இதை அணிந்துகொண்டு செல்லும்போது மிருதுவாக இருப்பதோடு நீண்டகால பாவனை உடையதாக இருக்கும். வளரும் பருவத்திலுள்ள வடலிப்பனையின் பத்தல்களில் அடிப்பாகத்தில் கறுப்பாக கம்பி போன்ற உறுதியுடன் இருக்கும் பகுதிக்கு தும்பு என்ற பெயர். இதிலிருந்துதான் கப்பல், இயந்திரங்களை சுத்தப்படுத்தும் துடைப்பான்களை செய்தார்கள்.

அடுத்து பண்டைய பண்பாடான ஓலைச் சுவடியை உருவாக்குவது மிகவும் சிறப்பு வாய்ந்தது. பனை ஓலைகளை தேவையான அளவில் கத்தரித்துக் கொள்வர். இவ்வாறு கத்தரிக்கப்பட்ட ஏடுகள் மிகவும் நன்றாக உலர்த்தப்பட்டு ஈரமின்றி நன்றாக காய்ந்த பிறகு அவற்றினை தண்ணீரில் இட்டு வேக வைத்துக்கொள்வார்கள். இவ்வாறு இலை கொதிக்க வைக்கப்படுவதால் ஏடுகளில் ஒரு இலகுத்தன்மை ஏற்படுகின்றது. பிறகு ஓலைகள் மறுபடியும் காயவைக்கப்படும். காய்ந்த பிறகு கனமான சங்கு கொண்டு ஓலைகளை நன்றாக தேய்ப்பார்கள். இப்படி செய்வதால் ஏட்டிற்கு பளபளப்பு ஏற்படும். நேராக தகடுபோல் ஆகிவிடும். ஏடு எழுதுவதற்கு ஏற்றநிலையை அடைந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை எமது வாழ்வின் அடையாளம் மட்டுமல்ல பண்பாடு என்பதனை

"திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக்கு அறுகிட வந்து நின்றார் மணப்பந்தலிலே
சங்கொக்க வெண்குருத்து ஈன்று பச்சோலை சலசலத்து
கொங்கிற் குறத்தி குவிமுலை போலக் குரும்பைவிட்டு
நுங்குக்கண் முற்றி அடிக்கண் கறுத்து நுனி சிவந்து
பங்குக்கு மூன்று பழம்தரவேண்டும் பனந்துண்டமே "

என்ற ஔவையாரின் பாடலை வைத்து நாம் அறிந்து கொள்ளலாம். இத்தோடு போருக்கு செல்லும் மன்னர்கள் வெற்றியை உறுதி செய்யும் முகமாக பனம் பூவை சூடிச் சென்றனர்.

திருக்குறளில் இரண்டு மரங்கள் இடம்பெற்றன. அதில் ஒன்று மூங்கில், மற்றையது பனை ஆகும்.

**" தினைத் துணை நன்றி செயினும்**
**பனைத்துணையாக கொள்வர் பயன்தெரிவார் "**

என்ற குறட்பாவின் மூலம் பனை எமது பண்பாடு என்பது கல்மேல் எழுத்தாக உணர்த்தப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனையும் பண்பாடும்!

நா.தர்சனா
பூநகரி ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
பூநகரி



பனம் விதை விதைத்ததும் - விளைந்து
நல்ல பனங்கிழங்கு கிடைத்தது
மிளகுத்தூளைத் தொட்டும்
தேங்காய்ச் சொட்டைக்
கடித்தும் உண்ணும் சுவை
எங்கள் பண்பாடு!

பனையோலையால் வீடுவேய்ந்தும்- பின்
பனையோலையால் வேலியடைப்பதும்
எங்கள் பண்பாடு!
அரிமரம் எடுப்பதும் அதைவிட
இடியப்பத்தட்டும் நீற்றுப்பெட்டியும் செய்து
விற்பதும் சமைப்பதும் எங்கள் பண்பாடு!

பனம் பலகாரமும் ஒடியற்கூழும் காய்ச்சி
பனையோலையினால் குடிப்பதும்
எங்கள் பண்பாடு!
பனங்கள்ளுக்குள் வெங்காயம் மிளகாயிட்டு
இளசுகாரம் பெரிசுகாரம் குடித்துகுசிப்பதும்
உடற்சூட்டைத் தணிப்பதும் எங்கள் பண்பாடு
பனை எங்கள் பண்பாடு!

நுங்குதொட்டு பனங்காய் பனையோலை
விசிறி தொப்பி கூடைஎனப் பலபொருட்கள்
பனங்காய் சுட்டுச் சூப்பும் சுவைதான் என்ன
பனைஎங்கள் பாரம்பரிய பண்பாடு!

பனம்பாயில் நீட்டிநிமிர்ந்து கிடப்பதும்
விசிறியால் விசுக்குவதும் தனிச் சுகம்தான்
பனங்கட்டி பனம்பாணி பனங்கிழங்கு
ஒடியல் சுளகு இன்னும் எத்தனை வளங்கள்
சுற்றி அள்ளித்தரும் பொருட்கள்
பனைஎங்கள் பண்பாடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனையாண்மை!

**கலாநிதி மோசஸ் செல்வகுமார்,**
இணைப் பேராசிரியர்,
ஆசிய மகளிர் பல்கலைக்கழகம்,
பங்களாதேஷ்,
ஆராய்ச்சி ஆலோசகர்,
பனை ஆராய்ச்சி நிறுவகம்,
இலங்கை.

கரியநிறத் தண்டினை தனது உடலாகவும், பச்சைநிற இலைகளையும், மஞ்சள் பச்சை, மண்நிறம் கறுப்பு மற்றும் சிவப்பு கலந்த பன்னாடை, கொக்காரை, பாளை என்பவற்றினால் அமையப்பெற்ற தலைப்பகுதியினையும் உடைய பனை எனும் அழகிய மரம் பல பயன்தந்து சூழலையும் உயிர்களையும் வாழவைக்கும் அற்புதப் படைப்பாகும்.



வரட்சி நிலங்களில் குறிப்பாக மணல் திட்டுகளாக உள்ள பகுதிகளில் இதன் பரம்பல் அதிகமாகக் காணப்படு கின்றது. பனையின் சிறப்பெனக் கருதப் படுவது யாதெனில், எவ்வளவு உயரமாக உள்ளதோ அவ்வளவுக்கு அதன் வேர் ஆழ் பகுதிக்குச் சென்று நீரினைச் சேமிக்கின்றது. நமது முன்னோர்களின் வாழ்வியல்பில் இன்றியமையாத ஒன்றாக பனை அமைந்துள்ளதனை இலக்கியங்கள் ஊடாகவும், செய்யுள்கள் ஊடாகவும் அறியப்பட்டுள்ளது.

பனை மரமானது தமிழகத்தின் மாநிலமரம் என்ற பெருமைக்குரியது! இப்பனை மரத்தின் உறுப்பு ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயனைத் தரக்கூடியது. இதனால் பனைக்குக் "கற்பகவிருட்சம்" என்று நமது முன்னோர்கள் பெயரிட்டுள்ளதாக, ஆய்வாளர் அ.சிவசுப்பிரமணியன் தமது "பனை மரமே! பனை மரமே!" என்ற ஆய்வு நூலில் ஒரு தகவலைத் தருகிறார். தமிழ்ப் பல்கலைக்கழக மரப்பெயர் அகரவரிசை நூலில் 101 பெயர்களால் பனைமரம் சுட்டப்படுகிறது

> தமது உயிரைத் துச்சமாக மதித்து காலை, மாலை என இருவேளைகள் பனையில் ஏறி, இறங்கும் இவர்கள் பனை வீரர்களே!

பனையின் ஒட்டுமொத்தப் பயன்களை எமக்கு ஈய்ந்தவர்கள் பனைத் தொழிலாளர்களாகும். கிளைகளற்று அடி பெருத்து நுனிசிறுத்து 60 அடி உயரம்வரை உயர்ந்து, வாள் போன்ற கருக்குகளும், தோலை உரசும் பட்டைகளும் கொண்டு நிற்கும் பனையில் ஏறி தலைப் பகுதியிலுள்ள பதநீர், பனம்பால் (கள்ளு), ஓலை என்பவற்றினை பதம் பார்த்து எடுத்து கீழ்க்கொண்டுவருவது என்பது மிகச் துணிச்சலான செயலாகும். தமது உயிரைத் துச்சமாக மதித்து காலை, மாலை என இருவேளைகள் ஏறி இறங்கும் இவர்கள் பனை வீரர்களே.

## பனையாண்மை எனும் தற்சார்பு வாழ்வியல்

பனைசார் தொழில்களை மேற்கொள்வோர் வாழ்வியல்பினை பனையாண்மை எனும் தற்சார்பு வாழ்வியல் எனக்குறிப்பிடப்படுகின்றது. இவ் வாழ்வியல்பைக் அடிப்படையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட மக்கள் கடின உழைப்பாளிகள் ஆவர்.

வட்டுப்பகுதியில் உள்ள பூந்துணர்கள் வெளிவந்ததும் அதனை பனை வீரர்கள் பதப்படுத்தி பனஞ்சாற்றினை மண்ணினால் செய்த சிறிய பானையில் (முட்டி) சேகரித்துப் பெற்றுக்கொள்வர். இம் முட்டிகளில் பனஞ்சாறு நொதிக்காமல் பாதுகாக்க சுண்ணாம்பினை உள் பானையில் பூசிவைப்பர். இத் தொழில்நுட்பத்தினூடாக "பதநீர்" என அழைக்கப்படும் இனிப்புச் சுவையுடைய மென்பானம் இயற்கையாகக் கிடைக்கப் பெறுகின்றது. இத் தொழில்நுட்பத்தினை பனை ஏற்றத்தொழில் எனக் குறிப்பிடுகின்றனர். பதநீரினை வெப்பமேற்றி பதப்படுத்தி பனம்பாணி, பனை வெல்லம், பனங்கற்கண்டு, சீனி என்பன பெறப்படுகின்றன.

பனம்பால் (பனங்கள்ளு) இனிப்பும் புளிப்பும் கலந்த சுவையுடையது. இது அதிகமாக அருந்தினால் மது என்ற பதத்திற்கு ஒப்பானதாக அமைந்துவிடும். இதிலிருந்து சாராயம், வினாகிரி போன்றவை உற்பத்தி செய்யமுடியும்.



பனைத் தொழிலாளர்கள் எனகுறிப்பிடுபவர்கள் தமது வாழ்வாதாரமாக ஆண்கள் பனஞ்சாற்று உற்பத்தியை மேற்கொண்டுள்ளனர். பெண்கள் அதனைப் பதப்படுத்தும் பணியினையும், பனையோலையினால் பாவனைப் பொருட்களையும் உற்பத்திசெய்து வருகின்றனர். வேளாண்மை பனையாண்மையுடன் ஒப்பிடும்போது இலகு என்பதனால் அனேகர் வேளாண்மைக்கும் வேறு பணிகளுக்கும் மாற்றம் பெற்றுள்ளனர். பனையாண்மையை மேற்கொள்வோர் அருகி வருகின்றனர்.





பனைநிலச் சொந்தக்காரர் பனையாண்மையினருக்கு பனைகளைக் குத்தகைக்குக் கொடுத்து அவர்களின் ஊதியத்தினையும் குறைத்து, இடும் கட்டளைகள் அனைத்திற்கும் செவி சாய்க்கும் அடிமைகளாக மாற்றம் பெற்றனர். நாளடைவில் பல போராட்டங்களின் முன்னெடுப்பில் பல பரிணாமங்களில் இன்று பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பனை அபிவிருத்திச் சபை ஆகிய அமைப்புக்கள் பனைத் தொழிலாளர் வாழ்வியல் அபிவிருத்திக்கான செயற்றிட்டங்களை செயற்படுத்தி வருகின்றன. புதிய தொழில்நுட்பப் பகிர்வுடன் பனைசார் பயிற்சிகள் மூலம் சுயதொழில் வாய்புகள், தொழில் உபகரணப் பொதிகள், இயந்திரப்பொறித் தொகுதி, தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள் என்பன வழங்கி, சந்தைவாய்ப்பையும் ஏற்படுத்தி பனையாண்மை தற்சார்பு வாழ்வியல் வளர்ச்சிக்குப் பங்களிக்கின்றன. தொழில் வாய்ப்பு வேண்டும், பசி போக்கவேண்டும் என்போருக்கு "பனையாண்மை" மேற்கொண்டு பயனடையுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பனை வளம் பெருக்கி பயன்பல பெறுவோம்!

**1**

விதைஅதை மண்ணில்
விதைப்பதில்லை
களைகள் பிடுங்கி வளர்ப்பதில்லை
தரையில் இருந்தால் போதும் முளையிடும்
தனித்துவம் கொண்டு தலைநிமிர்ந்திடும்
புல்லினத்தில் ஓர் நல்லினம்
நல்லினத்தில் ஓர் வல்லினம்
பனை வளம் அதைப் பெருக்கி
பயன் பலபெறுவோம்!

**2**

கற்பகதருவுக்கோர்
பாமாலை சூட்டுவோம்
வடலிஎன இளமையில்
பெயர் கொண்டிடும்
பருவத்திலே பாளைகள் தந்திடும்
ஆண் பெண் எனதன்னை வகையாக்கும்
தனக்கெனதனித் சிறப்பைக் கொண்டிடும்
பனை வளம் அதைப் பெருக்கி
பயன் பலபெறுவோம்!

**3**

சட்டங்கள் போட்டு
முதலாளி ஆனதில்லை
தொழிலாளிமீதுவெறுப்புக் கொண்டதில்லை
பயனாளியாரெனபேதங்கள் பார்ப்பதில்லை
கொடையாளிஎன்றுமமதைகொள்வதில்லை
தன்னைநம்பியவரைஆரத் தழுவி
அட்சயபாத்திரமாய் அள்ளிவழங்கும்
பனை வளம் அதைப் பெருக்கி
பயன் பலபெறுவோம்!

**4**

இயற்கைச் சாறாய் கள் தந்திடும்
பக்கவிளைவின்றிஉற்சாகம் தந்திடும்
சுண்ணாம்பிட்டால் பதனீர் ஆகிடும்
பள்ளிப் பிள்ளைக்கும் பருகக் கொடுத்திடும்
அடுப்பில் காய்ச்சினால் பாணிஆக்கலாம்
பாணிகொண்டு பனைவெல்லம் ஆக்கிட
என்றும் நமக்குஉதவிடும்
பனை வளம் அதைப் பெருக்கி
பயன் பலபெறுவோம்!

**5**

பனம் பழம் சுட்டு
பசியதுபோக்கலாம்
அதைச் சாறெடுத்துப்
பனாட்டும் போடலாம்
களிகொண்டுமென் பானம் ஆக்கலாம்
நாருசிக்கபணியாரமும் ஆக்கிடஉதவிடும்
பனை வளம் அதைப் பெருக்கி
பயன் பலபெறுவோம்!

**6**

முளைகொள்ளும் விதையும்
கிழங்கினைத் தந்திடும்
முழுவதும் வீணின்றி
ஒடியல் புளுக்கொடியல் ஆகிடும்
பனைவெல்லக் கற்கண்டுமருந்துக்காகும்
பன்னாடை கூட வடிகட்டிஆகிடும்
பனை வளம் அதைப் பெருக்கி
பயன் பலபெறுவோம்!

**7**

சுயதொழில் செய்திட
குருத்தோலை தந்திடும்
மக்களின்மத்தியில் கூட்டுறவாய் சேர்ந்திடும்
பனையோலை உருமாறி அலங்காரமாயிடும்
வறுமைபோக்கிவெறுமைநீக்க
மனை சிறக்க உதவிடும்
பனை வளம் அதைப் பெருக்கி
பயன் பலபெறுவோம்!

**8**

தென்னாட்டு மக்களுக்கு
தெவிட்டாத உணவாம்
பன்னாட்டுவிருந்திலும்
காட்சிதரும் பொருளாம்
எந்நாடு சென்றாலும் பனம்பொருள் உயர்வாம்
தரணியிலேநிகரில்லா தனித்துவப்பொருளாம்
பனைவளம் அதைப் பெருக்கி
பயன் பலபெறுவோம்!

**9**

நம் கையைப் பார்க்காமல்
தன்பாட்டில் வளர்ந்திடும்
தனக்கென இல்லாது
முழுவதும் கொடுத்திடும்
தன் வாழ்வுமுடிந்தாலும் மனை வாழஉதவிடும்
மண்ணோடுபோகாமல் விறகாகிஎரிந்திடும்
பனை வளம் அதைப் பெருக்கி
பயன் பலபெறுவோம்!

**10**

சுயநலம் கொண்டோர்கள்
சூறையாடுவர் இதை
மனநலம் இழந்தோர் போல் அபகரிப்பர்
குணநலம் கொண்டுகாக்கத் துணிவோம்
பனை வளம் அழிப்போரை
தடுத்தே நிறுத்துவோம்
பனையதன் பயனைபறைசாற்றுவோம்
பனை வளம் அதைப் பெருக்கி
பயன் பலபெறுவோம்!

த.கமலநாதன்
காரைநகர்
ப.தெ.வ.அ.கூ.சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை கஜேந்திரன்,
(LL.B)(Jaff), LL.M in criminal Justice Administration(OUSL)(R),
Diploma in Forensic Medicine (Pera)(R )
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்,
சத்திரயப்பிரமாண ஆணையாளரும்,
கம்பனிச் செயலாளரும், தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பாளரும்

# கள்ளுற்பத்தி தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள் !

## மதுவரிக் கட்டளைச்சட்டம் மீதான ஒரு பார்வை




பனைமரம் என்பது வடமாகாணத்தோடு பிரித்துப்பார்க்க முடியாத அளவிற்கு தொடர்பைக் கொண்டது. வடமாகாணத்தின் ஒரு குறியீடாக அதேநேரம் ஓர் அடையாளமாக பனைமரம் காணப்படுகின்றது. தேசவழமைச் சட்டத்திலும் பனைமரம் தொடர்பிலான சேவகங்கள் பற்றிய சிறப்பான ஏற்பாடுகள் காணப்படுகின்றமையானது பனைமரம் வடமாகாண சமூக, கலை, கலாசார, பண்பாட்டியலோடு நீண்ட தொடர்பைக் கொண்டுள்ள மையை சல்லடைபோட்டுக் காட்டுகின்றது. பனைமரம் மற்றும் அதுசார்ந்த உற்பத்திப் பொருட்களில் கள் உற்பத்தி தொடர்பில் இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டங்களில் மதுவரிக் கட்டளைச் சட்டம் தொடர்பில் ஆராய்வதற்கு இக்கட்டுரை தலைப்படுகின்றது.

இலங்கையில் 1912ம் ஆண்டின் 08ம் இலக்க மதுவரிக் கட்டளைச்சட்டம் போதை ஏற்படுத்தும் திரவம், போதை ஏற்படுத்தும் மாத்திரைகள் என்பனவற்றை ஏற்றுமதி, இறக் குமதி, போக்குவரத்து, உற்பத்தி, விற்பனை மற்றும் உடைமையில் வைத்திருத்தல் தொடர் பிலான விடயப் பரப்புக்களை ஆள்வதற்கு உருவாக்கப்பட்டது.

இக்கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 01 இன் பிரிவு 02 ஆனது சொற்பதங்களுக்கான பொருள்கோடலை செய்கின்றது. அதில் 'கள்' என்றால் என்ன என்பது தொடர்பில் சட்ட ரீதியான வியாக்கியானம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் கள் என்பது **"தென்னை, பனை, கித்துள் மற்றும் வேறு பனைமரம் போன்ற கிளை இல் வகைத் தாவரங்களிலிருந்து எடுக்கப்படும் புளித்த அல்லது புளிப்புச் சுவையற்ற சாறு"** என்று பொருள்படும்.

இக்கட்டுரையானது மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் கள்ளை உற்பத்தி, உடைமையில் வைத்திருத்தல், விற்பனை தொடர்பிலும் கள் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் போக்குவரத்து போன்றவை தொடர்பான ஏற்பாடுகள் தொடர்பிலும் அனுமதிப்பத்திரம் தொடர் பிலும் மற்றும் கள் உற்பத்தியுடன் தொடர்புடைய குற்றங்கள் தண்டனைகள் பற்றியும் சுருக்கமாக விளக்குவதற்கு முற்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்பத்தி, உடைமையில் வைத்திருத்தல், விற்பனை

மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 04 உற்பத்தி, உடமையில் வைத்திருத்தல் மற்றும் விற்பனை தொடர்பில் ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. பிரிவு 15 இன் பிரகாரம் பிரதேச செயலரின் அதிகாரத்தின்படி அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் கட்டுறுத்துக்கள் தவிர இலங்கையில் கள் உற்பத்தி செய்யப்படலாகாது. மற்றும் பிரதேச செயலரின் அனுமதியின்றி கள் உற்பத்தியுடன் தொடர்புகொண்ட மரங்களில் இருந்து கள் எடுக்கப்பட முடியாது, அதேவேளை கள் உற்பத்தி செய்யும் மரங்களில் இருந்து பிரதேச செயலரின் அனுமதியின்றி கள் இறக்கமுடியாது. மேலும் கள்ளை வடிகட்டலோ, கள்ளை வடிக்கவோ, உற்பத்திக்கோ, கள் உற்பத்தி தொழிலுக்கென கட்டடங்களை அமைக்கவோ முடியாது. மேலும் அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள், கட்டுறுத்தல் தவிர கள் உற்பத்தி தவிர்ந்த ஏனைய குடி வகைகளுடன் தொடர்புடைய உற்பத்தி சாதனங்களை பாவனை செய்வதற்கோ வைத்திருக் கவோ அல்லது உடைமையில் வைத்திருக்கவோ யாருக்கும் அதிகாரம் இல்லை. அதேவேளை பிரதேச செயலரின் அனுமதி இன்றி குடி வகைகளை போத்தலில் விற்பனைக்காக அடைக்க முடியாது.



## கள் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் போக்குவரத்து போன்றவை தொடர்பான ஏற்பாடுகள்

கள் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் போக்குவரத்து போன்றவை தொடர்பான ஏற்பாடுகள் மதுவரிக் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதாவது இக்கட்டளைச் சட்டத்தின் படியோ அல்லது இந்தக் கட்டளைச் சட்டத்தின் கீழோ அல்லது கள் இறக்குமதி தொடர்பில் இலங்கையில் நிலவும் சட்டத்தின் கீழோ உரிய முத்திரை வரியைச் செலுத்தி அல்லது உரிய பிணைமுறியை நிறைவேற்றுவதன் மூலம் கள்ளை இறக்குமதி, போக்குவரத்துச் செய்யலாம். இங்கே முத்திரைவரி என்பது செலுத்தப்படின் இவை சட்டவிரோதமானதாக கருதப்படமாட்டாது என பிரிவு 10 கூறுகின்றது. மேலும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட கள் இக்கட்டளைச் சட்டத்தின் கீழோ அல்லது சுங்கத் திணைக்களத்தால் குறித்துரைக்கப்படும் வரிகளை செலுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படலாம். கள் ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பில் அமைச்சருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது அவர் தனது தற்துணிவின் அடிப்படையில் கள் ஏற்றுமதி, இறக்குமதியை தடைசெய்யலாம் அல்லது அனுமதியளிக்கலாம். அதுமட்டுமன்றி இலங்கையில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கள்ளைக் கொண்டு செல்வதற்கான தடைகளையும் தீர்மானிப்பதற்கு அமைச்சுக்கு பூரண அதிகாரம் உண்டு. மேற்குறித்த ஏற்றுமதி, இறக்குமதி, இன்னோரிடத்திற்கு கொண்டுசெல்லுதல் தொடர்பான முத்திரை வரிகளை அமைச்சரே தீர்மானிக்கலாம் என்பதே இங்கு ஒரு குறைபாடாக இருக்கிறது. அத்துடன் பிரிவு 13 இன்படி சட்டத்தால் குறித்துரைக்கப்படும் அளவுப் பிரமாணத்திலும் அதிகமான ஏற்றுமதி, இறக்குமதி போக்குவரத்து செய்யமுடியாது என்றாலும் ஒழுங்கான "கடவுகிடைத்தால்" மாத்திரமே கொண்டுசெல்லலாம். ஆயினும் அவை முத்திரைவரி ஒழுங்காக செலுத்தப்பட்ட வெளிநாட்டு குடிவகை எனில் அதற்கு கடவு தேவையில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுமதிப்பத்திரம்

மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 06 ஆனது அனுமதிப்பத்திரம் வழங்குதல் தொடர்பான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. பிரிவு 25 இன்படி அனுமதிப்பத்திரம், உத்தரவுச் சீட்டு, அனுமதிச்சீட்டு ஆனவை இக்கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் கட்டணங்கள் அறவிட்ட பின்னரே வழங்கப்படும் அதேவேளை, குறிப்பிட்ட காலத்திற்கு குறித்துரைக்கப்பட்ட தடைகளும் நிபந்தனைகளுக்கும் அமையவே வழங்கப்படும்.

அதேவேளை அமைச்சரால் குறித்துரைக்கப்படும் கட்டுப்பாட்டிற்கு அமைய வழங்கப்பட்ட அனுமதிகளானவை இரத்துச் செய்யப்படலாம் அல்லது இடைநீக்கம் செய்யலாம் என பிரிவு 27 கூறுகின்றது. அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்வதற்கு அல்லது இடைநீக்கம் செய்வதற்கு பின்வருவன காரணமாக இருக்கலாம். ஒழுங்காக கட்டணங்கள் செலுத்தப் படாமை, அனுமதிப் பத்திரத்தை வைத்திருப்பவர் சட்டத்தை மீறுவதாக தொழிற்படின் அதே நேரம் அனுமதிப் பத்திரத்தை வைத்திருப்பவர் அல்லது அவரின் தொழிலாளி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்வதற்கு ஏதுவாக தொழில்படின் இக்கட்டளைச் சட்டம் கூறும் ஏதாவது குற்றத்தை செய்திருப்பின் வரி தொடர்பாக ஏதேனும் குற்றம் செய்திருப்பின் ஏதேனும் பிணையில் செல்ல அனுமதிக்கமுடியாத தவறுகள் அல்லது பாரதூரமான தவறுகள் ஏதாவது செய்திருப்பின் 2003ம் ஆண்டு 36ம் இலக்க புலமைசார் சொத்துரிமைச் சட்டத்தின்கீழ் ஏதேனும் குற்றத்தை புரிந்திருப்பின் அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 129இன் கீழ் ஏதேனும் குற்றத்தைப் புரிந்திருப்பின் இவரது அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படலாம். அதேநேரம் இவ்வனுமதிப்பத்திரம் ஆனது ஏதேனும் ஒருநபரின் விண்ணப்பத்தின்பேரில் வழங்கப்பட்டிருப்பின் அதேநபரின் எழுத்துமூல வேண்டுகோளின்படி அவ்வனுமதிப்பத்திரமானது இரத்துச் செய்யப்படலாம் அல்லது இடைநிறுத்தப்படலாம்.

## கள் உற்பத்தியுடன் தொடர்புடைய குற்றங்கள், தண்டனைகள்

கள் உற்பத்தியை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள் கள் உற்பத்தி தொடர்பான குற்றங்கள் பற்றிய போதிய விழிப்புணர்வு பெற்றவர்களாக இருக்கவேண்டும். காரணம் சட்டத் துறையில் இருக்கின்ற மிகப்பழமையான ஒரு கொள்கையாக "சட்டம் தெரியாது என்பது மன்னிப்பாகாது" (Ignorance of law is inexcusable) என்கின்ற கொள்கை காணப்படுகின்றது. ஆகவே ஒவ்வொரு மனிதனும் சட்டம் பற்றிய சாதரண அறிவைப் பெற்றிருத்தல் அவனுக்கு பாதுகாப்பானதும்கூட.





எவராவது ஒருவர் இக்கட்டளைச் சட்டத்திற்கு முரணாக செயற்படினோ அல்லது இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஏதாவது ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட்ட விதிகளுக்கு முரணாக தொழிற் படினோ அல்லது இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அனு மதிப்பத்திரங்களுக்கு முரணாக செயற்படினோ அவர் தண்டனைக் குரியவராகிறார். தெளிவாக கூறுவதாயின் இக்குறித்த மதுவரிக் கட்டளைச் சட்டத்திற்கு முரணான வகையில் கள்ளை ஏற்றுமதி, இறக்குமதி, போக்குவரத்து, உடமையில் வைத்திருந்தாலோ அது தண்டனைக்குரிய குற்றமாகும். மேலும் இச்சட்டத்தால் குறித்துரைக் கப்படும் ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் கள்ளை உற்பத்தி செய்தல், கள்ளைச் சீவுதல், கள்ளை இறக்குதல் அல்லது கள்ளுற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியை விருத்திசெய்யும் வகையில் கட்டடங்களை அமைத்தல் என்பனவும் தண்டனைக்கு உரியதாகும் மட்டுமன்றி இக்கட்டளைச் சட்டத்திற்கு முரணாக கள்ளை விற்பனை அல்லது வைத்திருத்தல், விற்பனைக்காக விளம்பரப்படுத்தல் என்பனவும் குற்றமாகும். அதேவேளை சட்டத்திற்கு முரணாக விற்பனை நோக்கத்திற்காக கள்ளை போத்தலில் அடைத்தல் என்பன வும் தண்டனைக்குரியதாகும். அதாவது சட்டவிரோத ஏற்றுமதி, இறக்குமதி, போக்குவரத்து உடமையில் வைத்திருத்தல் அல்லது தொழிலுக்கு கட்டடம் அமைத்தல், விற்பனை அல்லது விற்பனைக்காக வைத்திருத்தல் அல்லது விளம்பரப்படுத்தல் மற்றும் சட்டவிரோத விற்பனை நோக்கத்திற்காக கள்ளைப் போத்தலில் அடைத்தல் என்பனவற்றிற்கும் ஒரு வருடத்திற்கு அதிகமான சிறைத்தண்டனை அல்லது ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தண்டப்பணம் அல்லது இரண்டினாலும் தண்டிக்கப்படுவார். இவ்வாறு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் பிற்பாடும் இக்குறித்த குற்றங்கள் தொடருமாயின் அவர் தொடர்ந்து செய்த ஒவ்வொரு நாளும் பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்தவேண்டும். உதாரணமாக ஐந்துநாள் தொடர்ந்து செய்தால் 50,000/- மேலதிகமாக தண்டப்பணமாக செலுத்த வேண்டும். ஆனாலும் சட்டத்திற்கு முரணாக கள்ளை உற்பத்திசெய்தால் ஆறு மாதத்திற்கு குறையாத அதேநேரம் 5 வருடங் களுக்கு அதிகமாகாத மறியற் தண்டனை அல்லது ஒரு இலட்சம் ரூபா அல்லது இரண்டு தண்டனைகளாலும் தண்டிக்கப்படலாம். மேலும் இவ்வாறு தண்டிக்கப்பட்டதன் பிற்பாடும் அவர் தொடர்ச்சியாக கள்ளை உற்பத்தி செய்வராயின் ஒவ்வொரு நாளும் 15,000/- தண்டப் பணமாக செலுத்தவேண்டும். உதாரணமாக தண்டனை வழங்கப்பட்ட பின்னர் 6நாள் தொடர்ந்து செய்தால் அவர் மீண்டும் 90,000/- வை தண்டமாக செலுத்தல் அவசியம்.



மேலும் பிரிவு 47(1) இன் பிரகாரம் எவராவது ஒருவர் சட்ட பூர்வமான அதிகாரமின்றி சட்டவிரோதமாக இறக்குமதி அல்லது உற்பத்தி கள்ளை உடைமையில் வைத்திருத்தல் சட்ட விரோத மாக கள்ளை வாகனத்தில் கொண்டு செல்லுதல் என்பனவும் தண்டனைக்குரியதாகும். மேலும் வரியை முறையாகச் செலுத் தாமை போன்ற குற்றமொன்றை புரிந்திருப்பின் ஒரு வருடத்திற்கு குறைவான மறியலினால் அல்லது ஐயாயிரத்திற்கு குறைவா னதும் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரத்திற்கு அதிகமாக ததுமான தண்டப்பணத்தினால் தண்டிக்கப்படலாம் அல்லது இரண்டு தண்டனையாலும் தண்டிக்கப்படலாம்.

## முடிவுரை

வடமாகாணத்தின் பண்பாட்டியலோடும் வாழ்வியலோடும் பின்னிப் பிணைந்த பனைமரம் தொடர்பிலான தொழில்களில் கள் உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் மிகவும் முக்கியமானதாகும். ஆயினும் அவற்றை ஆள்வதற்கு சட்ட ஏற்பாடுகள் பாராளுமன்றினால் கொண்டுவரப்படும்போது அவற்றை அனைவரும் மதித்து நடத்தல் வேண்டும். எனவே சட்டம் தேவைப்படுத்தும் அனுமதிப் பத்திரங்களைப் பெற்று சட்டத்தின்பால் செயற்படும்போது கள் உற்பத்தி தொடர்பான சவால்களை தைரியத்துடன் எதிர்கொள்ளலாம்.

✡✡✡✡✡✡✡✡



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ.தனுசன்,
அச்சுவேலி பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

# பண்பாடு பதித்த பனை!

நாம் பனைமரம் பற்றிய வரலாற்று கருத்துக்கள் பற்றி நோக்குமிடத்திலே வரலாற்று ரீதியிலான பனையின் செயற்பாடுகள் பரந்து விரிந்து செல்கின்றன என்பதனை நாம் ஆவண ரீதியாக தெரிந்துகொள்ள முடியும். தமிழர்களின் இலக்கியம் மட்டுமல்லாது பிறமொழி இலக்கியங்களும் பனை மரத்திற்கு முக்கியமான வகிபாகத்தினை வழங்கியுள்ளன. அவ்வாறு தொன்மையான வளம் இன்று அழிவினை நோக்கி நகர்வது மனவேதனைக்குரிய விடயமே. எமது இளம் சமூகத்தினரிடம் மரம் வளர்ப்பை ஊக்குவிக்கும் அதேவேளை வடபகுதியின் வளமான பனைமரம் தொடர்பிலே தெளிவுபடுத்த வேண்டும்.



பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னே உருவான இப் பூமியிலே பரிணாம வளர்ச்சியின்படி மனிதன் தோன்றினாலும் ஆரம்பத்திலே குகைகளிலும் மரப்பொந்துகளிலும் வாழ்ந்த மனிதன் இயற்கை வேளாண்மை அளித்த அறிவின்மூலம் ‘கொம்பைகள்’ என்னும் குடிசைகள் அமைத்து வாழ்வதற்கு அகன்று விரிந்த பனையோலைகளை பயன்படுத்தியுள்ளான். கிராமங்களிலே காணப்படும் ஓலைக்குடிசைகள் இதற்கு இன்றும் சான்றுபகர்கின்றன. தமிழ் மக்கள் பனம் பொருட்களான பனைநார், பனையோலை, மட்டை, பனஞ்சட்டம், பதநீர், கருப்பநீர், நுங்கு, பனம்பழம், பனங்கிழங்கு என பனையின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் உணவாகவும் மருந்தாகவும் மனித குலத்திற்கு தன்னையே கொடையளித்ததால் இதனை “கற்பக விருட்சம்” என்று பெயரிட்டு பெருமைப்படுத்தியுள்ளார்கள் எமது முன்னோர்கள்.

தமிழர் வரலாற்றில் தமிழர்களுக்கும் பனைக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு ஆங்காங்கே இழைந்தோடுவதனைப் பார்க்கமுடியும். “அழகர் மலையில் கண்டெடுக்கப்பட்ட கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று “நெடுமலன்” என்பவன் சமண முனிவர்களுக்கு கற்படுக்கை அமைத்துக்கொடுத்த நிகழ்வை “பாணித வணிகன் நெடுமலன்” என்று குறிப்பிடுகின்றது. இங்கே பாணிதம் என்பது பதநீரைக் காய்ச்சுவதன்மூலம் பெறும் பாணியையே குறிப்பிடப்படுகின்றது என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த திவாகர நிகண்டு பனையின் பெயர்களைத் தொகுத்து கூறுகின்றது. பொய்யாமொழிப் புலவர் அளவிலே பெரியதெனக் குறிப்பிடுவதற்காக பனை என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளதையும் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**" தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாகக்**

**கொள்வர் பயன்தெரிவார்"**

திருக்குறளிலே மேலும் இரு இடங்களிலே பனை மரத்தினைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் வள்ளுவர்.

கிறிஸ்தவ மதத்தின் புனித நூலான விவிலியத்திலே "நீதிமான் பனையைப்போல் செழித்து வளருவான்" என்ற இறைவார்த்தை இடம்பெற்றுள்ளது. கிறிஸ்து பிறப்பதற்கு முந்தையதாக காலம் கணிக்கப்பட்ட "தமிழி எழுத்துக்கள்" இன்றைய பிராமிக கல்வெட்டுக்களில் பனை என்ற சொல் இடம்பெற்றுள்ளது. மேலும் எட்டுத்தொகை பத்துப் பாட்டு போன்ற சங்க இலக்கியங்களிலும் பனை பேசுபொருளாக உள்ளது.

இந்துமதத்திலே திருஞானசம்பந்தர் பாடிய பதினொரு பதிகங்களிலும் சுந்தரர் பாடிய தேவாரங்களிலும் புராணக் கதைகளிலும் பனை தொடர்பான வர்ணனைகள் காணப்படு கின்றன.

இன்றுமட்டுமல்லாது சோழ மன்னர்கள் தங்களின் ஆட்சிக்காலத்திலே ஊரின் எல்லையில் பனையும் தென்னையும் வளர்ப்பதற்கான உரிமையை வழங்கி ஊக்குவித்ததோடு, பனந் தொழில் புரிந்தோர்மீது பனை வரியை அறவீடு செய்தார்கள் என்பதனை தமிழ் கல்வெட் டுக்கள்மூலம் அறியலாம்.

**" மாவும் பலாவும் கமுகும் பனையுங் கொடியும்**

**உள்ளிட்ட பல்லுருவில் பயன்மரம் இடவும் நடவும் பெறுவதாகும்"**

என்று குறிப்பிடுகின்றது. சோழர் காலத்தின் செப்பேடு இங்கே "பயன்மரம்" என்று குறிப்பிடப்படுவது பனைமரம் என்று அறியமுடிகின்றது.

**" பனைமரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம்**

**நயனுடை யான் கட்படின்"**

பனை மரம் என்ற சொல்லிற்கு பதில் "பயன்மரம்" என்று சொல்லி பெருமைப்படுத்துகிறார் வள்ளுவர்.

சேர மன்னர்கள் பனைமரத்தை தங்கள் அடையாளச் சின்னமாக பயன்படுத்தியுள்ளனர். தமிழர்களின் வீரத்தினைப் பறைசாற்றிய மன்னர்களான சேரன் செங்குட்டுவன், பெருஞ்சேரல் இரும்பொறை, அதியமான் முதலானோர் பனம்பூ என்ற போந்தை மாலையை அணிந்ததாக சங்ககால இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மேலும் பனையின் பெயர்களை அடியொற்றி பல ஊர்கள் உள்ளன. உதாரணமாக பனங்கன்டி என்ற ஊரினைக் குறிப்பிடலாம்.

பனையின் பாளைகளைப் பதப்படுத்தும் செயற்பாடுமூலம் பெறும் "கள்" பழந் தமிழர்களின் பாரம்பரிய மதுவாக இருந்துள்ளது. அது சங்ககாலம் தொட்டு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமைக்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. சங்க இலக்கியங்கள் கள்ளினை "தீம்பிழி" என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளன. சங்க காலத்திலே தமிழர்களின் நடுகல் வழிபாட்டில் படையல் பொருளாக கள் தவறாது இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் ஆய்வின் பிரகாரம் பனையின் வகையான தாளிப் பனை பொறித்த நாணயங்கள் இலங்கையில் பயன்பட்டுள்ளது. கி.பி. 1901-1926ம் ஆண்டுவரை புழக்கத்தில் இருந்துள்ளது. விக்டோரியா மகாராணிக்கு விசிறி செய்வதற்கு பனையோலை பயன்படுத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

தமிழர்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்த பனையானது பூமித்தாயின் மடியில் கிளைத்த பனைமரங்கள். கடந்த தலைமுறையினர் துய்த்த இன்பங்கள் இன்றைய தலை முறையினருக்குக் கிடைக்கப்பெறாமை கொடுப்பில்லாததே. தமிழர்கள் மரபில் தோய்ந்த பனைமரங்கள் இன்று அவர்களின் நினைவு அடுக்குகளில் நின்று புரளுகின்றது. தனது ஒவ்வொரு பரிணாம வளர்ச்சியையும் மனித குலத்திற்கு வழங்கி மீட்பராக விளங்கும் பனைகள் தமிழர்களின் இன வரைவியலோடும் மரபுப் பொருண்மையோடும் இரண்டறக் கலந்த உறவுக் கண்ணியைக் கொண்டது. அத்தகைய ஒப்பற்ற தன்மையுடைய பனை மரங் களைக் காத்து. உலகமயப் பொருளாதாரத்தைவிட பனைப் பொருட்களை உள்ளடங்கிய தமிழர் தற்சார்புப் பொருளாதாரத்தை மீட்டெடுக்க போராடவேண்டியது தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரினதும் வரலாற்றுக் கடமையாகும்.

**"தரணியிலே தாலவளம் காப்போம்"**

***உசாத்துணை நூல்கள்:-***


01. பனைமரம் (இரா.பஞ்சவர்ணம்).

02. விக்கிபீடியா.

03. பனை மரமே! பனை மரமே!


------------------------------ ✡✡✡✡✡✡✡✡ ------------------------------



# பெண் பனையே !


ராதை குபேரன்,
இணுவில்.


*பெண் பனையே காய்த்துக் குலுங்கும்!*
*தூங்கு வடிவில் குலையைச் சுமக்கும்!*
*பழத்தினைத் தந்திடும் சுவையாக மாறிடும்!*
*இதன் விதையே முளைத்து மரமாகும்!*

*கற்பகத் தருவானது கற்பிக்கும் பாடமானது!*
*காற்றிலே கீதமிசைக்கும்*
*காவோலையாக அசைந்தாடும்!*
*பருவத்தில் வளரும்*
*பயன்களைத் தந்திடும்!*
*பதநீர் பருகிட தேனாய் இனித்திடும்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்தரும் பலம்கொண்ட பனையே!

தொல்காப்பியனார் தொகுத்துள்ள நூலில்
தொனி பொருளாக புல்லாக புகழப்பட்ட பனையே!
தொன்று தொட்டு சில மானிடர்க்கான உதவாப் பண்பு
தோன்றியிராததை உன்னில் கண்டு மகிழ வேண்டும்

பனையே நாம் நேசிக்கும் மரமே!
பல பயன்தரும் வள்ளல் மரம் நீ!
பார்வாழ் மாந்தர்க்கு படிப்பினை கூறும்
பலம் கொண்ட பனை மரமே!



கற்பக தருவும் எனது நாமம்
கரிய வேர் முதல் நுனிவரை நற்பயன் ஈவாய்
கருமை நிறம் பச்சை நிறம் சேர்ந்த மரமே
கற்று விடயங்களை அறிந்ததால் நேசிக்கிறேன்

விதை களி கிழங்கு ஒடியல் பனாட்டு
விரும்பி பருகு கள்ளு பதநீர் பாணி
வீட்டுத் தேவை ஓலை மட்டை சுளகு பெட்டி
விதம் விதமாக இன்னும் பல பயன்தரும் கற்பகமே!

தன்னம்பிக்கை கொண்டு வளரும் தரு
தற்துணிவு கொண்ட கற்பக மரம்
தக்க சமயம் தன் கடமை நிறைவேற்றி
தன்னைக் கொடுக்கும் தருவே பனையே!

கற்பக தருவில் கழிவு என்று சொல்லி
கருதிட ஏதுமே இல்லை உன்னிடம்
தனக்கென்று ஈயா பிறர்க்கென ஈயும்
தற்கொடை தருவே நீ வாழி!

ப.அற்புதராஜ் (காசாளர்)
நானாட்டான் / முசலி
ப.தெ.வ.அ.கூ.சங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களைப் பொருளாதார நோக்கில் வலுப்படுத்துவதில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினுடைய வகிபாகம்!



*விகாஷ் கேசவன்*
*(வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி)*

கூட்டுறவு என்பது மக்கள் ஒன்றிணைந்த, மற்றும் ஜனநாயகக் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்கள் மூலம் அவர்களின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சாரத் தேவைகள் மற்றும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்காக தன்னார்வமாக ஒன்றுபட்ட மக்களின் தன்னாட்சி அமைப்பாக கூட்டுறவு வரையறுக்கப் படுகிறது. உலகளாவிய ரீதியில் 18ம் நூற்றாண்டில் ஏற்பட்ட கூட்டுறவு இயக்கத்தினுடைய வளர்ச்சியுடன் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள், கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பாலுற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், சேவை கூட்டுறவுச் சங்கங்கள், தேயிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், மற்றும் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் என பல வடிவங்கங்களில் தோற்றம் பெற்றன (Mahindapola el al, 2020).

இலங்கையில் கூட்டுறவு அமைப்பானது 1906ம் ஆண்டு பிரித்தானியரின் கீழ், கிராமியப் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், மானியத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்காகவும் உருவாக்கப்பட்டது. இலங்கை முழுவதும் கூட்டுறவு அமைப் புக்களின் செயற்பாடு அதிகமாக இருந்தாலும், கூட்டுறவு இயக்கத்தினுடைய வளர்ச்சி வடமாகாணத்திலேயே அதிகமாக இடம்பெற்றது. கிராமியப் பொருளாதார கட்டமைப்பில் பனை, தென்னை சார் உற்பத்திகள் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றன (Shalini, 2013). சமூக அடுக்கமைவில் இத்துறையில் ஈடுபடுகின்ற மக்கள் குறித்த ஒரு சமூக பிரிவினராக, குறிப்பாக சாதியம், வகுப்பு, பால் போன்ற அடிப்படையில் சமூக கட்டமைப்பிற்குள் உள்ளடக்கப் படுகின்ற இம் மக்கள் பல்வேறு காலகட்டங்களில் பல இன்னல்களையும் சந்தித்தே வந்துள் ளனர். இவ்வாறான நிலையில் தனியாருடைய ஆதிக்க சுரண்டலாலும், சமூக கட்டமைப் பாலும் புறந்தள்ளப்படும் சமூகத்தவரை ஒன்றிணைக்க, கூட்டுறவுத் திணைக்களத்தின் கீழ் 1972இல் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன (கற்பகதரு, 2012). கூட்டுறவுச் சங்கங்களாக ஒன்றிணைக்கப்பட்டதன் விளைவாக இத்துறை சார்ந்த மக்களுக்கும் சமூக, பொருளாதார ரீதியிலான வாய்ப்புகளையும், சமூக பாதுகாப் பினையும் இவ்வமைப்புக்கள் உறுதிப்படுத்தியுள்ளன. 2020ம் ஆண்டில் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அடுத்தபடியாக 17,219 உறுப்பினர்களை (ஆண்கள் 14,606 மற்றும் பெண்கள் 2,616) கொண்ட அமைப்பாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் காணப்படுகின்றன (கூட்டுறவுத் திணைக்கள அறிக்கை, 2021).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கின்ற உறுப்பினர்களில் பால்நிலை அடிப்படையில், ஆண்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் சில சங்கங்களில் ஆண்களுக்கு நிகராக பெண்களினுடைய எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. ஆண்களை பொறுத்தவரையில் அதிகமாக சீவல் தொழிலிலும், பெண்கள் உற்பத்தித் துறைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக பனாட்டு, பனங்களி, புளுக்கொடியல், ஒடியல்மா, பனங்கட்டி, பனஞ்சீனி மற்றும் பனை ஓலை சார்ந்த பொருட்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இச்சங்கங்களில் உறுப்பினர்களின் வகிபங்கினைப் போல நிர்வாக செயற்பாடுகள், கிராமிய வங்கிச் செயற்பாடுகள், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற பல பிரிவுகளில் ஊழியர்களினுடைய அர்பணிப்பும் கூட்டுறவுச் சங்கங்களினை பலமானதாக மாற்றியமைத்துள்ளன.

கூட்டுறவுத்துறையின் வளர்ச்சியில் பெண்களினுடைய பங்கேற்பு முக்கியமானதாக அமைந்துள்ளது. யுத்தத்திற்கு பின்னரான சூழலில் கிராமிய பொருளாதாரத்தினை மீள கட்டியெழுப்புவதிலும், உணவு நெருக்கடி, வறுமை போன்றனவற்றை தவிர்ப்பதிலும் பெண்களினுடைய பங்களிப்பு கட்டாயமானதாகவே அமைந்திருந்தது. பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் பெண்களினுடைய பங்கேற்பினை நோக்கும்போது, “கூட்டுறவு மகளீர் பாவனையாளர் தகவல் கல்வித்திட்டம்” என்ற செயற்றிட்டத்தின் கீழ் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களே அதிகளவில் பெண்களை உள்ளீர்த்த கூட்டுறவாக அமைந்தது (கற்பகதரு, 2012). அத்துடன் பெண்களுக்கான சுயதொழிலுக்கான பயிற்சிகளையும், நிதி சார்ந்த கடன்களையும், தையல், மனையியல் பயிற்சிகள் மற்றும் பல கிராமிய மட்டங்களில் முன்பள்ளிகளை செயற்படுத்துவதுடன் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளையும் வழங்குவதனூடாக மகளீருக்கான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதுடன், இதனூடாக சமூக, பொருளாதார அடித்தளத்தினையும் ஏற்படுத்தியுள்ளது (இளையதம்பி சு. - 2008).

கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு வகையிலான உற்பத்திகளில் ஈடுபடுகின்றன. பிரதானமாக கள் விற்பனை மற்றும் போத்தலில் அடைத்தல் போன்றவற்றில் ஈடுபட்டாலும் தொடர்ந்தும் அவற்றினை சார்ந்து செயற்பட முடியாது என்ற நிலையில் பல சங்கங்கள் மாற்று உற்பத்திக்களில் ஆர்வத்தினை வெளிப்படுத்தியுள்ளன. தற்போதும் பல சங்கங்கள் மாற்று உற்பத்திகளை ஆரம்பித்தாலும் முழுமையாக செயற்படுத்த தொழிநுட்பம் மற்றும் நிதி சார்ந்த சவால்கள் தாக்கம் செலுத்துகின்றன. வடமாகாணத்திலுள்ள பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மனித வளம் அதிகமாக கிடைக்கின்ற நிலையில் தங்களுடைய உற்பத்திகளை அதிகரிப்பதற்கான எதிர்பார்ப்பினையும் கொண்டுள்ளனர். குறித்த உற்பத்திகள் அனைத்திலும் பெண்களினுடைய பங்கேற்பினை அதிகரிப்பதனையே முக்கிய இலக்காக கூட்டுறவு அமைப்புக்கள் கொண்டிருக்கின்றன.

பனைசார் துறையில் ஈடுபட்டுள்ள பெண்கள் சுயதொழில் முயற்சியாக, வீடுகளில் உற்பத்தி செய்யும் பனைசார் கைவினைப்பொருட்கள் மற்றும் உணவுப்பொருட்களின் சந்தை வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி கொடுத்துள்ளன. இதனூடாகப் பெண்களினுடைய உற்பத்திகளை அதிகரிப்பதற்கும், அவற்றினுடைய வினைத்திறன் தன்மையையும் அதனூடாக ஏனைய பெண்களையும் உள்ளீர்ப்பதற்கான முன்னுதாரணமாக செயற்படுத்துவதற்கான வழிகளையும் செயற்படுத்த வேண்டியுள்ளது. அத்துடன், இன்று பனைசார் பொருட்களின் சந்தைப்படுத்தலில் தனியாரினுடைய ஆதிக்க நிலைமையில் பெண்களுடைய உற்பத்திக்கான விலையை பெற்றுக்கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன், பெண்களை அரசியல் ரீதியாக ஊக்குவிப்பதில் கூட்டுறவின் பங்கு மிகவும் முக்கியமானது. கூட்டுறவுக் கூட்டங்களில், விவாதங்கள் மற்றும் முடிவெடுப்பதற்கான வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்கலாம். நுண்கடன் நடவடிக்கைகள் மூலம் அவர்களது தற்போதைய சமூக-பொருளாதாரத் தொடர்புகளை வலுப்படுத்தும் வாய்ப்பையும் அவர்களுக்கு வழங்க முடியும். அதுமட்டுமின்றி பெண்கள் கூட்டுறவு இயக்கங்கள்மூலம் சமூகம் சார்ந்த அமைப்புகளில் சேரும் வாய்ப்பும் கிடைத்துள்ளது. சமூகமயமாக்கல் செயல்முறைக்கு ஏற்ப பதில்கள் ஆண்கள் மற்றும் பெண்களிடமிருந்து வேறுபட்டவை. சில்வாவின் கூற்றுப்படி (2001) ஆண்களுடன் ஒப்பிடும்போது, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து சேவைகளைப் பெறுவதில் பெண்கள் அதிக ஆர்வத்துடன் உள்ளனர் (Ashini Bandaranayake, 2018). மேற்கூறிய காரணிகளைக் கருத்தில் கொண்டு, பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ரீதியாக, கூட்டுறவு இயக்கம் பாலின சமத்துவத்தை செயல்படுத்துவதற்கான முக்கிய தளமாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் பெண்களின் முன்னேற்றமானது கடந்த 05 தசாப்தத்திற்கு மேலாக அதிகரித்து வந்துள்ளது. குறிப்பாக கல்வியினுடைய வளர்ச்சி மற்றும் மேலைத்தேய கருத்தியலின் பரவுகையும் இவற்றில் முக்கிய தாக்கத்தினை செலுத்தியுள்ளது. ஏனைய பாகங்களை போன்று வட பகுதியிலும் கல்வி ஊடான சமூக மாற்றத்தில் பெண்களினுடைய மேம்பாடு முன்னேற்றமடைந்தாலும் கடந்த 03 தசாப்தமாக ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தினுடைய வடுக்கள் பெண்களை நேரடியாகவே பாதித்துள்ளன. குறிப்பாக கல்வியை முறையாக பெற்றுக் கொள்ளாமை, வலுவிழப்பிற்கு உள்ளாகியமை மற்றும் பெண் தலைமைக் குடும்பங்களாக உருமாறியமை போன்ற பல வழிகளில் பெண்கள் பாதிப்புறும் குழுவினராக அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக, பெண்கள் தங்கள் பாலின வகிபங்கிலிருந்து விடுபடுவதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் செயல்களில் ஈடுபடுவதற்கும் சில விரைவான வாய்ப்புகளை வழங்கியுள்ளது. போருக்குப் பிந்தைய சூழலில் NGO மற்றும் அரசாங்க நிறுவனங்களின் நடவடிக்கைகள் பெரும்பாலும் "அனைவருக்கும் பொருந்தக்கூடிய வகையிலான செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்தியதன் விளைவு பல வினைத்திறனற்ற வாழ்வாதார தலையீடாகவே அமைந்துள்ளன. அரசாங்கம் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் கோழி வளர்ப்பு, தையல் இயந்திரங்கள், ஆடுகள் மற்றும் மாடுகள் பெண்களுக்கு சிறந்த வாழ்வாதாரம் எது என்ற முன் முடிவுகளின் பிரதிநிதிகளாக உள்ளன. அந்த அமைப்புகள் பெண்களுக்கான அர்த்தமுள்ள வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு உதவவும் கட்டமைக்கவும் தவறிவிட்டன. ஆய்வுப் பிரதேசமானது யுத்தத்தினால் அதிகமாக பாதிப்புக்குள்ளாகாமல் இருந்தாலும் பொருளாதார ரீதியாகவும் புவியியல் ரீதியாகவும் எல்லைப்படுத்தப்பட்ட பகுதிகளாக உள்ளது. இங்குள்ள மக்களுக்கு நிரந்தரமற்ற தொழில் நிலைமை காரணமாக நிலையான வருமானத்தினை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் இப்பகுதியிலுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் பாரிய சவால்களை எதிர்நோக்கி வருகின்றன.

கிராமியப் பொருளாதாரத்தினைப் பொறுத்த வரையில் பருவகாலத்தினை அடிப்படையாகக் கொண்டே வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன. இவ்வாறான நிலையில் ஆண்கள் வெளி மாவட்டங்களுக்கு மேசன் வேலைகளுக்குச் சென்றாலும் அவர்களுடைய வருமானம் குடும்பத்தினுடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இல்லை. பெண்களைப் பொறுத்த வரையில் பன்ன வேலை, கடலுணவுகள் பொதி செய்தல், தோட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை, பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் வேலை என நாட்கூலிக்கு வேலை கிடைத்தாலும் வருமானத்தின் நிலைத்திருப்பு குறைவாகவே உள்ளது. வருடம் முழுவதும் தொழில் கிடைப்பனவிற்கான வாய்ப்பு இருப்பினும் வருமானத்தினுடைய அளவு குறைவடைந்துள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடியில் பணவீக்கத்தின் தாக்கம் ஊழிய வருமானத்தினை நேரடியாகப் பாதித்துள்ள நிலையில் பெண்களினுடைய வருமானம் முக்கிய தாக்கத்தினை எதிர்நோக்கியுள்ளது.

கூட்டுறவுத் துறையில் பணியாளர்கள் நிரந்தரம் மற்றும் தற்காலிகம் என்ற அடிப்படையில் கடமையாற்றுகின்றனர். பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாளர்களில் 20% த்தினர் நிரந்தர பெண் பணியாளர்களாக உள்ளனர். இவர்களுடைய ஊதியமும் முக்கிய சவாலாக அமைந்துள்ளது. குறிப்பாக கூட்டுறவுச் சட்டத்தின் அடிப்படையில் நிரந்த ஊழியரினுடைய அடிப்படை வருமானம் ரூபாய் 18,000 ஆக காணப்படுவதுடன் பதவி அடிப்படையிலும் பணி அனுபவத்தின் அடிப்படையிலும் வருமானத் தின் அளவு அதிகரித்தாலும் ரூபாய் 40,000 வரையிலுமே தற்போதும் பெற்றுக்கொள் கின்றனர் (தாலம், 2020). அத்துடன் சங்கத்தினுடைய இலாபகரமான செயற்பாட்டை பொறுத்து வாழ்கைப்படி கொடுக்கப்பட்டாலும் விற்பனை மற்றும் இலாபத்தின் நிரந்தரமின்மை சவாலாக அமைந்துள்ளது. இது அனைத்து கூட்டுறவுச் சங்கங்களிலும் இடம்பெறுகின்ற முக்கிய பிரச்சினையாக உள்ளது. தற்காலிக பணியாளர்களும் நாளுக்கு ரூபாய் 500-700 க்கு இடைப்பட்ட வருமானத்தினையே பெற்றுக்கொள்கின்றனர். அவர்களுடைய கோரிக்கை நாளுக்கு ரூபாய் 1,000 இருந்தாலும் வருடம் முழுவதும் தங்களுக்கு வருமானம் கிடைத்தால் குடும்பத்தினை கொண்டு நடாத்தலாம் என்பதே இவர்களுடைய கோரிக்கையாகவும் உள்ளது. நிரந்தப் பணியாளர்களுக்குக் கிடைக்கின்ற ஊழிய சேமலாப நிதியமும் ஓய்வூதியத்திற்கு பின்னரான சமூக பாதுகாப்பினை உறுதிபடுத்தும் செயற்பாட்டினையும் சங்கங்கள் மேற்கொள்ளுகின்றன. எனினும் தற்காலிக பணியாளர்கள் தொடர்ச்சியாக உற்பத்தி செயன்முறையில் பங்கேற்பதில்லை என்ற காரணத்தினால் பல சங்கங்கள் அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக தரமுயர்த்துவதற்கு அச்சமடைகின்ற நிலை மையையும் காணலாம்.

கூட்டுறவுச் சங்கங்களை நவீனமயப்படுத்துகின்ற தன்மையும் முக்கிய சவாலாக அமைந்துள்ளது. குறிப்பாக பல கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்தும் கள் விற்பனையில் ஈடுபட முடியாது என்பதால் தங்களுடைய அங்கத்தவரின் நலனைப் பேண மாற்று உற்பத்திகளில் அதிக கவனத்தினை செலுத்துகின்றன. ஆய்வுப் பிரதேசத்திலும் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுடைய கைத்தொழிற்சாலைகளை நவீனப்படுத்த பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமையும் உற்பத்திகளுக்கான சந்தைவாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன. இவற்றின் மூலமாக அங்கத்தவர்களுடைய வாழ்வாதாரத்தினை பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது பெண்களின் முன்னேற்றத்திற்கான வழியும் ஏற்படுத்தப்படும். எனினும் ஆய்வுப் பிரதேசத்திலுள்ள சில சங்கங்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையிலும் புதிய கைத்தொழிலுக்குள் உட்புகுவதற்கான ஆர்வத்தினை வெளிப்படுத்தவில்லை. இவ்வாறான நிலை குறித்த பகுதிகளிலுள்ள பனைசார் உற்பத்தியில் ஈடுபடும் பெண்களுக்கும் பொருளாதாரம் சார்ந்த தடையாக அமையும்.

பனை, தென்னை சார் உற்பத்திகளில் ஈடுபடும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சி னைகளில், சந்தை வாய்ப்பும், விலை நிர்ணயமும் முக்கிய விடயமாக உள்ளது. குறிப்பாக இத்துறையில் ஈடுபடும் பெண்கள் தங்களுடைய உற்பத்திகளை விற்பனை செய்ய தனியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைகளையே அதிகம் நாடுகின்ற போக்குக் காணப்படுகின்றது. பனைசார் உப உற்பத்திகளுக்கான வெளிநாட்டுச் சந்தை அதிகம் காணப்பட்டாலும் அவற்றினை உற்பத்தி செய்யும் பெண்களுக்குப் போதியளவான வருமானம் கிடைப்பதில்லை. குறிப்பாகப் பெண்கள் மத்தியில் பேரம் பேசுகின்ற சக்தி குறைவாக இருக்கின்றமை தங்களுடைய உழைப்பிற்கு ஏற்ற பலனை பெற்றுக்கொள்ள முடியாத சூழலை உருவாக்கியுள்ளதால், தங்களுடைய உற்பத்திகளை குறைந்த விலைக்கு சந்தைக்கு விற்பனை செய்கின்றனர். அத்துடன் நிரந்தரமற்ற இலாபம் காரணமாக பலர் இத்தொழிலை மேற்கொள்வதிலிருந்து பின்வாங்கியுள்ளனர்.

சமூக ரீதியாக அடுக்கமைக்கப்பட்ட சாதியக் கட்டமைப்பின் கீழ் தீவுப்பகுதி மக்களும் எல்லைப்படுத்தப்பட்ட மக்களாகவே பார்க்கப்பட்டு வந்துள்ளனர். இந்நிலையில் சமூக கட்டமைப்பின் அடிப்படையில் பெண்களினுடைய வகிபங்கு குறித்த பிரச்சினைகளும் ஆய்வுகளின் ஊடாக வெளிப்பட்டாலும் ஆய்வு பிரதேசத்தில் எவ்வாறான சூழ்நிலை காணப்படுகின்றது என்பதனையும் ஆராய வேண்டும். அத்துடன் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இவ்வாறான அடுக்கமைவு சார்ந்த சவால்களை முறைப்படுத்தி செயற்படுகின்றன போன்ற விடயங்களும் ஆய்வுக்கு உற்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

பெண்கள் சுயதொழிலில் ஈடுபடுவதற்கான வளங்களில் காணி உரிமை சார்ந்த விடயங்களும் தாக்கம் செலுத்துகின்றன. குறிப்பாக வடமாகாணத்தில் பின்பற்றப்படும் தேசவழமைச் சட்டத்திலுள்ள கட்டுப்பாடுகள் மற்றும் தனித்துக் காணி சார்ந்த விடயங்களில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றமை போன்றன பெண்களின் முன்னேற்றத்தில் தாக்கம் செலுத்தும்.

பெண்களினுடைய கல்வியும் அவர்களுடைய வாழ்வாதாரத்தினைத் தீர்மானிக்கும் பலமாக அமைந்துள்ளது. இலவச கல்வியின் மூலமாக அனைவருக்கும் கல்வி என்ற சித்தாந்தம் அனைவரையும் உள்வாங்கியுள்ள நிலையில் பெண்களினுடைய கல்வி அடைவு மட்டம் பல்வேறு வழிகளில் தாக்கம் செலுத்தியுள்ளது. பாரம்பரிய விழுமியங்கள் குடும்பம் மற்றும் சமூக மட்டத்தில் கொண்டுள்ள செல்வாக்கானது பெண்களின் கல்விசார் முன்னேற்றங்களில் தாக்கம் செலுத்தியுள்ளது.

பெண்களின் பொருளாதார மற்றும் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கான கல்வியின் அனைத்தும் உள்ளடக்கிய முக்கியத்துவம் என்னவென்றால், கல்வியறிவு குறைந்த அல்லது கல்வியறிவு இல்லாத பெண்கள் குழந்தைகளாகத் திருமணம் செய்துகொள்வது, குடும்ப வன்முறையை எதிர்கொள்வது, வறுமை மற்றும் வீட்டுச் செலவுகள் மற்றும் அவர்களின் சுகாதாரப் பராமரிப்பு ஆகியவற்றில் குரல் பற்றாக்குறையால் பாதிக்கப்படுகின்றனர். இதில் பெண்களை வலுவிழக்கச் செய்தல் (உலக வங்கி, 2018). தொழிலாளர் சந்தையில் வாய்ப்புகளை நிர்ணயிப்பதில் கல்வி பின்னடைதல் ஒரு முக்கியமான காரணியாகும்.

2020ம் ஆண்டு ஏற்பட்ட கொவிட் பெருந்தொற்று பரவல் மற்றும் அதன் பின்னரான நெருக்கடி நிலைமைகளின் மத்தியில் வாழ்வாதாரத்திற்கான சவால்கள் அதிகரித்துள்ள நிலையில், கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டுள்ள பெண்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பு எவ்வாறு நிலைபேண் தன்மையில் உள்ளது என்பதும் கேள்வியாக உள்ளது. இதன் பின்னணியில் எவ்வாறான சவால்கள் பெண்களின் முன்னேற்றத்திலும், வாழ்வாதாரச் செயற்பாட்டிலும் ஏற்பட்டுள்ளன என்ற விடயமும் தற்காலத்தில் முக்கியமாகப் பார்க்கப்பட வேண்டிய விடயமாக அமைந்துள்ளது. கூட்டுறவு துறை பெண்களினுடைய சமூக அங்கீகாரத்தினை நிலைபேண் தன்மையில் பேணுவதற்கான நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுக்கப்போகின்றன என்ற வினாவுடன், கூட்டுறவு இயக்கத்தில் பெண்களின் வகிபங்கினை இனங்காணலும் நோக்கமும் காலத்திற்கு ஏற்றாற்போல் மாற்றமடைய வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இன்றைய நிலை தொடர்பான ஒரு கண்ணோட்டம் !

க.சசிகரன்,
கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் - தரம் -1
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
கிளிநொச்சி.

1972ம் ஆண்டுக்கு முன்னர் பனை தென்னை வள உற்பத்தியாளர்கள் மரவரி கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக தமது உற்பத்திகளை விற்பனை செய்து வந்தார்கள். இந் நிலையில் அவர்கள் தமது உற்பத்திகளை நியாயமான விலைக்கு சந்தைப்படுத்த முடியாமலும் அதிகளவிலான கட்டுப்பாடுகளை எதிர்நோக்கியும் வாழ்வாதாரத்தினை முன்னெடுக்கும் நோக்கில் மேற்கொண்டு வந்தார்கள். இவர்களின் இந்நிலையினை கவனத்திற் கொண்டு பதிவு முறைக்கு உட்பட்டதான கூட்டுறவு அமைப்பாக மாற்றுவதற்கு 1972ம் ஆண்டு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குவதற்கு அரசினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து பனை தென்னை வள அபிவி ருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றிகர அமைப்பாக பதிவு செய்யப்பட்டன. இலங்கையின் வடமாகாணத்திலேயே பனை வளம்சார் உற்பத்திகள் அதிகளவு இடம்பெறுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. பிரதேச செயலக ரீதியாக உற்பத்தியாளர்களின் எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு ஒரு பிரதேச செயலாளர் பிரிவிற்கு ஒன்றிற்கு குறையாத வகையில் இச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன.

1972ம் ஆண்டு தொடக்கம் 2000ம் ஆண்டு வரையில் இச்சங்கத்தின் அங்கத்தவர்கள் கள், பதனீர், பனைசார் உற்பத்திகளை தாம் அங்கத்துவம் பெறும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வந்தனர். இதன்மூலம் அவர்களுக்கு சந்தை வாய்ப் பினை பெற்றுக்கொள்ள முடிந்ததுடன் நியாயமான விலையும் கிடைக்கப்பெற்றது. பனைசார் உற்பத்தி பொருட்கள் உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளுக் கும் ஏற்றுமதி செய்யும் நிலையினை அடைந்துள்ளன. அத்துடன் இத்தொழில்சார் துறையில் நவீன தொழில் நுட்ப முறைகள் உட்புகுத்தப்பட்டு புதிய அங்கத்தவ ர்கள் இணையத்தக்க வகையில் ஊக்குவிக்கப்பட் டார்கள். வடமாகாணத்திலே 30க்கு மேற்பட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் சிறப்பான நிலையில் இயங்குகின்றன. இதனைவிட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிகள் மூலமான போத்தற் கள், சாராய உற்பத்தி மேற்கொள்ளப்படுவதுடன் உள்நாட்டு விற்பனைக்கு மேலதிகமாக வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயற்கையாக உற்பத்தி செய்யப்படுகின்ற கள் மனித நுகர்விற்கும், உடலிற்கும் ஆரோக்கியமான பானமாக காணப்படுவதுடன் உடல் ரீதியாக ஏற்படுகின்ற உபாதைகள், நோய்களிற்கு சிறந்ததாகவும் காணப்படுகின்றது. இந்நிலையிலே இவ் உற்பத்தியானது 2000 ஆண்டு வரையும் உள்நாட்டிலேயே பாவனையாளர்களால் அதிகளவு நுகரப்பட்டு வந்தபோதிலும் 2000ம் ஆண்டிற்கு பிற் பட்ட காலப்பகுதியில் இருந்து நுகர்வின் அளவானது படிப்படியாக குறைவடைந்து இன்று மிகக் குறைந்த விற்பனை போக்கினை காட்டுகின்றது. இது வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற சாராய வகைகள், உள்நாட்டில் உற்பத்தி செய் யப்படுகின்ற குடி வகைகள் என்பவற்றினை நுகர்வதில் பாவனை யாளர்கள் காட்டுகின்ற ஆர்வம் காரணமாக உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுகின்ற கள், பதனீர் போன்ற இயற்கை பானங்களின் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளது. நாகரீக மோகம், கவர்ச்சிகரமான விளம்பரம் போன்றவற்றினால் இவற்றை நுகருகின்ற வளர்ந்துவரும் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. கள், பதனீர் உற்பத்திகளில் ஈடுபடுகின்ற உற்பத்தியா ளர்களின் எண்ணிக்கை சமூக அந்தஸ்த்து, நாகரீகம், வேறு தொழில்சார் துறைகளில் உள்ள ஆர்வம், ஐரோப்பிய நாடுகளில் உள்ள வேலைவாய்ப்பு என்பவை காரணமாக வீழ்ச்சிய டைந்து வருகின்றது. புதியவர்கள் இத்தொழிலினை கற்றுக்கொள்ள விரும்பாத நிலையும் கல்வித்துறை சார்ந்த ரீதியில் கொண்டுள்ள நாட்டமும் உற்பத்தியாளர்களின் எண்ணிக் கையில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இவ் உற்பத்திகள் தொடர்பாக சமூக ரீதியிலே காணப்படுகின்ற எதிர்ப்பு நிலைகள் இவற்றுக்கு பதிலாக உற்பத்தி செய்யப்படுகின்ற முறைகேடான உற்பத்திகள் அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் கொண்டுவரப்படுன்ற சட்ட மாற்றம் என்பவை இத்துறை சார்ந்த உற்பத்தியாளர்களை மேலும் நலிவடையச் செய்கின்றது. அத்துடன் தற்போது இடம்பெறுகின்ற உற்பத்திகளுக்கு நுகர்வோர் மத்தியில் கேள்வி குறைவாக காணப் படுவதுடன் நியாயமான விலையும் கிடைப்பதில்லை. இது அவர்களின் வாழ்வாதாரத்தினை பாதிப்படையச் செய்கின்றது.

பனைசார் உற்பத்திகளை பாதுகாக்கும் நோக்கில் அத்தொழில் வல்லுனர்களை அங்கத் தவர்களாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் மௌனித்த 2009ம் ஆண்டில் இருந்து உள்நாட் டில் சிவில் கட்டுப்பாட்டு முறைகள் இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட்ட நிலையில் இத்துறை சார்ந்த உற்பத்திகளை விரிவுபடுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அத்துடன் இத்துறை சார்ந்த உற்பத்தி முயற்சியில் ஈடுபடுகின்ற கூட்டுறவு சங்கங்கள் நவீன தொழில்நுட்ப முறை களைப் பின்பற்றி தமது உற்பத்திகளை வெளியீடு செய்கின்ற அதேவேளை உற்பத்தியின் தரத்தினையும் உயர்த்தவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அத்துடன் வீழ்ச்சியடைந்துள்ள பனைசார் உற்பத்திகளுக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலாக ஊக்குவிப்பு திட்டங்களை மேம்படுத்தவேண்டிய அதேநேரத்தில், புதிய தொழில் முயற்சிகளையும் நாடவேண்டியுள்ளது. இது அங்கத்தவர்களின் வாழ்வாதார நோக்கில் வருமான பகிர்வினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையினை ஏற்படுத்தாது என்பதுடன், இக் கூட்டுவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டதன் நோக்கம் மழுங்கடிக்கப்பட்டு அதன் தூரநோக்கு, குறிக்கோள் என்பவை முரண்பாடு கொண்டதாக அமைகின்றது.

அத்துடன் இக் கூட்டுறவு அமைப்புகளை நோக்கி பிற நிறுவனங்களில் இருந்தான எதிர்விளைவுகளும் , கட்டுப்பாடுகளும் காணப்படுகின்றன. அரசினால் வழங்கப்படுகின்ற மதுபான விற்பனை நிலையங்களின் அனுமதிகள் அதிகரித்துள்ளமை, கிராமப்புறங்களில் மதுபான விற்பனை ஆரம்பிக்கப்படுகின்றமை, உயர்தர உணவகங்களில் மற்றும் விடுதிகளில் மதுபான விற்பனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை, கள் உற்பத்தியில் காணப்படுகின்ற சுகாதார குறைபாடுகள் போன்றவை காரணமாக இந்த வகை கூட்டுறவு அமைப்புகள் எதிர்காலத்தில் வலுவான நிலை ஒன்றினை அடைவதற்கு தடைக்காரணிகளாக உள்ளன. அத்துடன் புதியவகை தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் இவ் அமைப்புக்களின் துணைவிதிகள், நடைமுறைவிதிகளில் மாற்றம் ஏற்படுத்த வேண்டியுள்ளது. மாற்றம் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் தொழில்புரள்வு காரணமாகவும் அங்கத்தவர்களின் ஏகபோக உரிமம் இழக்கப்படுகின்ற நிலையும் ஏற்படும். நவீன பல்பொருள் அங்காடிகள் மற்றும் துறைசாராத தொழில்முயற்சிகள் ஆராம்பிக்கப்படுகின்ற போதிலும் இம்முயற்சிகளுக்கு ஏற்கனவே பதிவு பெற்றுள்ள கூட்டுறவு அமைப்புகள் தம்நிலை சார்ந்த எதிர்ப்பினை வெளிப்படுத்துவதுடன் தமது முயற்சிகளுக்கும் இடையூறாக அமைவதினை வெளிப்படுத்துகின்றன.

எனவே பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தாம் மேற்கொள்கின்ற தொழில் முயற்சிகளில் நவீன முறைகளினை உட்புகுத்தி கள் இறக்குவதனை மேற்கொள்வதுடன் இணைந்த உற்பத்திகளிலும் நவீன தொழில்நுட்ப முறைகளினை பிரயோகித்து உற்பத்தி வகைகளின் மாதிரியை மேம்படுத்த வேண்டும். இவ்வாறு மேம்படுத்தப்படும் உற்பத்தியினை நாடு முழுவதும் விநியோகிக்கக்கூடிய அளவிற்கு உற்பத்தி அளவினை அதிகரிப்பதுடன் வெளிநாடுகளிற்கும் ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இயற்கை முறையில் அமைந்த இவ்வகை உற்பத்திகளுக்கு கூடியளவு விளம்பரங்களை மேற்கொள்வதுடன் இணையத்தளத்தின் ஊடாக விற்பனை மேம்படுத்தல்களையும் மேற்கொள்ள வேண்டும். இதன்மூலம் இத்துறைசார்ந்த உற்பத்திகளுக்கு நுகர்வோரின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். இதனால் இந்தவகை கூட்டுறவு சங்கங்கள் எதிர்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தியுடன் நிலைத்திருக்கும் தன்மையினை பேணக்கூடியதாக அமையும்.

*"பனை வளம் பேணுவோம் உடல் , உள வளம் காப்போம் "*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திச் சந்தைப்படுத்தற் செயற்பாட்டுப் புள்ளிவிபரங்கள் 2021, 2022



இலங்கையின் தேசிய வருமானத்தில் முக்கிய பங்களிப்பு ஆற்றுகின்ற துறைகளில் கூட்டுறவுத் துறையின் ஊடான உற்பத்தித் துறைக்கு கணிசமான பங்கு உண்டு. அந்த வகையில் வடக்கு மாகாணத்தின் கூட்டுறவுத் துறையில் பெருமளவான உற்பத்தி, விற்பனை அதனோடு இணைந்த சேவைகளை வழங்குவதில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பு பாரியதாகும். கடந்த காலங்களில் ஏற்பட்ட பெருந்தொற்று, எரிபொருள் நெருக்கடி, பொருளாதார மந்தம், அரசியற் குழப்ப நிலை போன்ற அசாதாரண காரணங்களினால் இச்சங்கங்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டபோதும் தம்முடைய நிதி வல்லமையாலும் அங்கத்தவர்களின் முயற்சிகளாலும் தம் தனித்துவத்தை தக்கவைக்க போராடி வெற்றி பெற்றன என்றே கூறலாம். இவ்வாறான கூட்டுறவு நிறுவனங்களின் புள்ளிவிபரங்களை காலத்திற்கு காலம் பதிவேற்றிக்கொள்வது அவசியமானதாகும்.

உற்பத்திச் சந்தைப்படுத்தற் தரவுகளைச் சேகரித்து இலகுவாக விளங்கக்கூடிய வகையில் அட்டவணை மூலமாகவோ அல்லது வரைபடங்கள் மூலமாகவோ வெளிக்காட்டும் செயன்முறை உற்பத்திச் சந்தைப்படுத்தற் புள்ளிவிபரம் ஆகும்.

ஒரு நிறுவனம் குறித்த ஒரு நிதியாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் எவை? விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் எவை? என்பதை வெளிக்காட்டுவதன் மூலம் தமது அடைவுமட்டத்தை சுயபரிசீலனை செய்து ஆய்வு செய்வதற்கும் அடுத்த ஆண்டு உற்பத்தியை திட்டமிடுவதற்கும் நிறுவன வரலாற்றுத் தரவுகளைச் சேமிப்பதற்கும் இது உதவுகின்றது.

அந்த வகையில் வடமாகாணத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 2021, 2022ஆம் ஆண்டுகளின் உற்பத்திச் சந்தைப்படுத்தல் தொடர்பாக சேகரிக்கப்பட்ட விபரங்கள் 2023ஆம் ஆண்டின் "தாலம்" ஓலை 4 இதழுக்காக இங்கு தொகுத்தளிக்கப் படுகின்றது.

*தொகுப்பு :*
**பொ.செல்வராசா**
**பொதுமுகாமையாளர்.**
யாழ். மா.ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்

### வடமாகாணத்தில் அமைந்துள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள்

| இல. | மாவட்டம் | ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் | இரண்டாம்படிக் கூட்டுறவுச் சங்கங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01. | யாழ்ப்பாணம் | 19 | 06 | 25 |
| 02 | கிளிநொச்சி | 03 | 02 | 05 |
| 03 | முல்லைத்தீவு | 08 | 01 | 09 |
| 04 | வவுனியா | 03 | 01 | 04 |
| 05 | மன்னார் | 04 | 01 | 05 |
| | | 37 | 11 | 48 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மாகாண ப.தெ.வ.கூட்டுறவு சங்கங்களின் கள் கொள்வனவு விற்பனை -போத்தற்கள் உற்பத்தி விற்பனை விபரங்கள் -2021

| இல | மாவட்ட பனை தெ.வ.அ.கூ.சங்கம் | கள் கொள்வனவு | கள் விற்பனை | போத்தற் கள் உற்பத்தி - கொள்வனவு | போத்தற் கள் விற்பனை |
|---|---|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 4573175 | 2884686 | 985582 | 985582 |
| 2 | கிளிநொச்சி | 1400939 | 760539 | 238773 | 323496 |
| 3 | முல்லைத்திவு | 1585807 | 1204687 | 749182 | 701035 |
| 4 | மன்னார் | 584276 | 554864 | 0 | 0 |
| 5 | வவுனியா | 374260 | 374260 | 7052 | 7052 |
| | மொத்தம் | 8518457 | 5779036 | 1980589 | 2017165 |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மாகாண ப.தெ.வ.கூட்டுறவு சங்கங்களின் கள் கொள்வனவு விற்பனை - போத்தற்கள் உற்பத்தி விற்பனை விபரங்கள் -2022

| இல | மாவட்ட பனை தெ.வ.அ.கூ.சங்கம் | கள் கொள்வனவு | கள் விற்பனை | போத்தற் கள் உற்பத்தி - கொள்வனவு | போத்தற் கள் விற்பனை |
|---|---|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 6593437 | 5082080 | 1808069 | 1808069 |
| 2 | கிளிநொச்சி | 1992238 | 1575148 | 367558 | 426067 |
| 3 | முல்லைத்திவு | 1833751 | 1375093 | 589330 | 785709 |
| 4 | மன்னார் | 756446 | 748371 | 22573 | 20663 |
| 5 | வவுனியா | 410294 | 410294 | 9544 | 9544 |
| | **மொத்தம்** | 11586166 | 9190986 | 2797074 | 3050052 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மாவட்ட சங்கங்களின் உற்பத்தி விற்பனை விபரங்கள் -2021

| இல | சங்கங்கள் | கள் உற்பத்தி - போத்தலில் /750ml | | போத்தற்கள் -625 ml | | ஏனைய உற்பத்தி விபரங்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொ/வு | விற்பனை | உற்பத்தி / கொள்வனவு | விற்பனை | பதநீர் உற்பத்தி போத்தல் | பதநீர் விற்பனை போத்தல் | பாணி விற்பனை | வெல்ல உற்பத்தி | கல்லாக்காரம் | பனாட்டு- Kg | பாணி பனாட்டு | ஒடியல் மா -Kg | புழுக் கொடியல் Kg | புழுக் கொடியல் மா -Kg |
| 1 | கோண்டாவில் | 155,915 | 32,779 | 90,425 | 75,563 | 20,897 | | | 589 | 23 | | | | | |
| 2 | சுன்னாகம் | 260,979 | 169,448 | 46,341 | 36,782 | 4,249 | | | 199 | | | | | | |
| 3 | தெல்லிப்பளை | 282,096 | 193,386 | 71,802 | 68,498 | 4,775 | | | 357 | 3 | | | | | |
| 4 | மானிப்பாய் | 266,040 | 173,694 | 67,282 | 43,905 | 5,200 | | | 433 | | | | | | |
| 5 | பண்டத்தரிப்பு | 286,859 | 180,867 | 60,399 | 66,931 | 185,748 | 914 | | 14,675 | 2 | 242 | 115 | 664 | 860 | 862 |
| 6 | சங்கானை | 360,878 | 139,142 | 66,717 | 65,250 | | | | | | | | | | |
| 7 | காரைநகர் | 288,030 | 163,512 | 138,510 | 124,631 | | | | | | | | | | |
| 8 | யாழ்ப்பாணம் | 156,604 | 100,443 | 66,092 | 69,803 | | | | | | | | | | |
| 9 | அரியாலை | 115,512 | 91,024 | 6,921 | 11,914 | | | | | | | | | | |
| 10 | கோப்பாய் | 196,304 | 185,979 | 26,497 | 24,598 | | | | | | | | | | |
| 11 | அச்சுவேலி | 347,281 | 275,356 | 79,140 | 17,924 | | | | | | | | | | |
| 12 | சாவகச்சேரி | 376,495 | 284,941 | 64,042 | 49,227 | 66,574 | | | 3,279 | 12 | | | | | |
| 13 | கொடிகாமம் | 579,931 | 204,655 | 88,296 | 122,160 | 1,325 | | | 85 | | | | | | |
| 14 | கரவெட்டி | 150,342 | 108,462 | | - | 66,903 | | | 5,060 | 55 | | | | | |
| 15 | பருத்தித்துறை | 260,058 | 203,839 | 2,595 | 23,983 | 43,810 | 27,171 | 702 | 693 | | | | | | |
| 16 | ஊர்காவற்துறை | 165,680 | 111,814 | 62,213 | 71,859 | 11,017 | | | 758 | | 9 | | 100 | 100 | |
| 17 | வேலணை | 106,565 | 93,745 | 6,759 | 44,384 | 2,001 | | | 166 | | 20 | | | | |
| 18 | வடமராட்சிகிழக்கு | 122,469 | 92,521 | 2,050 | 28,669 | 30,667 | 11,698 | 25 | 837 | 4 | | | | | |
| 19 | அனலைதீவு | 95,137 | 79,079 | | - | | | | | | | | | | |
| 20 | தென் கொத்தணி | | | 39,501 | 39,501 | | | | | | | | | | |
| | மொத்தம் | 4,573,175 | 2,884,686 | 985,582 | 985,582 | 443,166 | 39,783 | 727 | 27,131 | 99 | 271 | 115 | 764 | 960 | 862 |

## யாழ் மாவட்ட சங்கங்களின் உற்பத்தி விற்பனை விபரங்கள் -2022

| இல | சங்கங்கள் | கள் உற்பத்தி - போத்தலில் /750ml | | போத்தற்கள் -625 ml | | ஏனைய உற்பத்தி விபரங்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொ/வு | விற்பனை | உற்பத்தி / கொள்வனவு | விற்பனை | பதநீர் உற்பத்தி போத்தல் | பதநீர் விற்பனை போத்தல் | பாணி விற்பனை | வெல்ல உற்பத்தி kg | கல்லாக்காரம் kg | பனாட்டு- Kg | பாணி பனாட்டு | ஒடியல் மா -Kg | புழுக் கொடியல் -Kg | புழுக் கொடியல் மா -Kg |
| 1 | கோண்டாவில் | 380,349 | 248,613 | 165,803 | 151,694 | - | | | | | | | | | |
| 2 | சுன்னாகம் | 284,509 | 237,537 | 39,694 | 39,694 | | | | | | | | | | |
| 3 | தெல்லிப்பளை | 418,257 | 292,187 | 106,464 | 97,353 | 20,490 | 290 | 16 | 1,597 | | | | | | |
| 4 | மானிப்பாய் | 200,282 | 121,689 | 68,936 | 68,936 | | | | | | | | | | |
| 5 | பண்டத்தரிப்பு | 423,321 | 281,700 | 128,222 | 111,188 | 221,287 | 1,715 | 280 | 16,080 | 10 | 389 | 133 | 950 | 1,134 | 999 |
| 6 | சங்கானை | 407,161 | 265,346 | 114,999 | 95,883 | | | | | | | | | | |
| 7 | காரைநகர் | 414,584 | 294,014 | 140,911 | 128,113 | | | | | | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | யாழ்ப்பாணம் | 263,442 | 201,070 | 137,004 | 101,354 | | | | | | | | | | |
| 9 | அரியாலை | 213,625 | 210,877 | - | 6,914 | | | | | | | | | | |
| 10 | கோப்பாய் | 346,735 | 322,292 | 33,604 | 33,604 | | | | | | | | | | |
| 11 | அச்சுவெலி | 478,283 | 437,161 | 539,385 | 539,385 | 11,457 | | | 676 | | | | | | |
| 12 | சாவகச்சேரி | 492,112 | 406,813 | 63,518 | 55,518 | 22,180 | 124 | | 1,794 | 8 | | | | | |
| 13 | கொடிகாமம் | 660,558 | 412,275 | 142,799 | 142,799 | | | | | | | | | | |
| 14 | கரவெட்டி | 253,367 | 220,448 | - | 15,663 | 20,168 | | | 1,542 | | | | | | |
| 15 | பருத்தித்துறை | 358,631 | 315,664 | - | 13,096 | | | | | | | | | | |
| 16 | ஊர்காவற்துறை | 356,446 | 314,118 | 97,728 | 74,083 | | | | | | | | | | |
| 17 | வேலணை | 164,639 | 146,500 | - | 55,257 | | | | | | | | | | |
| 18 | வடமராட்சிகிழக்கு | 361,999 | 254,697 | - | 35,650 | 1,900 | | | 300 | | | | | | |
| 19 | அனலைதீவு | 115,137 | 99,079 | - | 12,883 | | | | | | | | | | |
| 20 | தென் கொத்தணி | | | 29,002 | 29,002 | | | | | | | | | | |
| | மொத்தம் | 6,593,437 | 5,082,080 | 1,808,069 | 1,808,069 | 297,482 | 2,129 | 296 | 21,989 | 18 | 389 | 133 | 950 | 1,134 | 999 |

### மன்னார் மாவட்ட சங்கங்களின் உற்பத்தி விற்பனை விபரங்கள் -2021

| இல | சங்கங்கள் | கள் உற்பத்தி - போத்தலில் /750ml | | போத்தற்கள் -625 ml | | ஏனைய உற்பத்தி விபரங்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொ/வு | விற்பனை | உற்பத்தி | விற்பனை | பதநீர் உற்பத்தி போத்தல் | பதநீர் விற்பனை போத்தல் | பாணி விற்பனை | வெல்ல உற்பத்தி kg | கல்லாக்காரம் kg | பனாட்டு- Kg | பாணி பனாட்டு | ஒடியல் மா -Kg | புழுக் கொடியல் -Kg | புழுக் கொடியல் மா -Kg |
| 1 | மன்னார் கிழக்கு | 109,552 | 107,835 | - | | 17,123 | 1,914 | | | | | | | | |
| 2 | மன்னார் மேற்கு | 183,287 | 182,534 | - | - | | | | | | | | | | |
| 3 | அடம்பன் | 133,743 | 133,743 | - | - | | | | | | | | | | |
| 4 | நானாட்டான் (முசலி) | 157,694 | 130,752 | - | - | | | | | | | | | | |
| | மொத்தம் | 584,276 | 554,864 | - | - | 17,123 | 1,914 | - | - | - | - | - | - | - | - |

### மன்னார் மாவட்ட சங்கங்களின் உற்பத்தி விற்பனை விபரங்கள் -2022

| இல | சங்கங்கள் | கள் உற்பத்தி - போத்தலில் /750ml | | போத்தற்கள் -625 ml | | ஏனைய உற்பத்தி விபரங்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொ/வு | விற்பனை | உற்பத்தி | விற்பனை | பதநீர் உற்பத்தி போத்தல் | பதநீர் விற்பனை போத்தல் | பாணி விற்பனை | வெல்ல உற்பத்தி kg | கல்லாக்காரம் kg | பனாட்டு- Kg | பாணி பனாட்டு | ஒடியல் மா -Kg | புழுக் கொடியல் -Kg | புழுக் கொடியல் மா -Kg |
| 1 | மன்னார் கிழக்கு | 182,163 | 179,673 | - | - | 9,092 | 450 | | | | | | | | |
| 2 | மன்னார் மேற்கு | 246,025 | 244,611 | - | - | | | | | | | | | | |
| 3 | அடம்பன் | 163,646 | 162,153 | - | - | | | | | | | | | | |
| 4 | நானாட்டான் (முசலி) | 164,612 | 161,934 | 13,028 | 13,028 | | | | | | | | | | |
| 5 | மன்னார் மாவட்ட ப.தெ.சமாசம் | - | - | 9,545 | 7,635 | | | | | | | | | | |
| | மொத்தம் | 756,446 | 748,371 | 22,573 | 20,663 | 9,092 | 450 | - | - | - | - | - | - | - | - |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லை மாவட்ட சங்கங்களின் உற்பத்தி விற்பனை விபரங்கள் -2021

| இல | சங்கங்கள் | கள் உற்பத்தி - போத்தலில் /750ml | | போத்தற்கள் -625 ml | | ஏனைய உற்பத்தி விபரங்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொ/வு | விற்பனை | உற்பத்தி | விற்பனை | பதநீர் உற்பத்தி போத்தல் | பதநீர் விற்பனை போத்தல் | பனங்கிழங்கு | வெல்ல உற்பத்தி | பனம் பாணி | பனாட்டு- Kg | பாணி பனாட்டு | ஒடியல் மா -Kg | புழுக் கொடியல் -Kg | புழுக் கொடியல் மா -Kg |
| 1 | புதுக்குடியிருப்பு | 215,727 | 198,731 | 120,397 | 119,999 | 482 | | 19,812 | 172 | - | 621 | 293 | 1,197 | 6,309 | 5,290 |
| 2 | முல்லை கிழக்கு | 250,736 | 139,951 | 132,083 | 126,403 | | | | | | | | | | |
| 3 | முல்லை தெற்கு | 183,125 | 180,500 | 96,554 | 91,230 | | | | | | | | | | |
| 4 | முல்லை மேற்கு | 331,503 | 119,135 | 181,034 | 145,259 | | | | 30 | | 10 | | 50 | 50 | |
| 5 | முல்லை வடக்கு | 180,492 | 170,786 | | | | | | | | | | | | |
| 6 | விசுவமடு | 67,454 | 65,749 | 6,549 | 6,549 | 20,382 | | | 1,367 | 2,385 | | | | | |
| 7 | பாண்டியன்குளம் | 134,928 | 108,693 | 32,555 | 32,555 | | | | | | | | | | |
| 8 | ஒட்டிசுட்டான் | 221,842 | 221,142 | 180,010 | 179,040 | | | | | | | | | | |
| | மொத்தம் | 1,585,807 | 1,204,687 | 749,182 | 701,035 | 20,864 | - | 19,812 | 1,569 | 2,385 | 631 | 293 | 1,247 | 6,359 | 5,290 |

| இல | சங்கங்கள் | கைவினை பொருள்- பெறுமதி | தேங்காய் (எண்ணிக்கை) | ஒடியல் -கி.கி | பனம் கள் (லீற்றர்) | புளுமா லட்டு (கி.கி / எண்.) |
|---|---|---|---|---|---|---|
| 1 | புதுக்குடியிருப்பு | 12,000 | | 2,143 | 439 | 563 |
| 2 | விசுவமடு | | 36,167 | - | | |
| 3 | பாண்டியன் குளம் | | | | 1,800 | |
| 4 | ஒட்டிசுட்டான் | 100,410 | | | | |
| 5 | முல்லை மேற்கு | | | | 1,700 | |
| | மொத்தம் | 112,410 | 36,167 | 2,143 | 3,939 | 563 |

முல்லை மாவட்ட சங்கங்களின் உற்பத்தி விற்பனை விபரங்கள் -2022

| இல | சங்கங்கள் | கள் உற்பத்தி - போத்தலில் /750ml | | போத்தற்கள் -625 ml | | ஏனைய உற்பத்தி விபரங்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொ/வு | விற்பனை | உற்பத்தி | விற்பனை | பதநீர் உற்பத்தி போத்தல் | பதநீர் விற்பனை போத்தல் | பனங்கிழங்கு | வெல்ல உற்பத்தி | பனம் பாணி | பனாட்டு- Kg | பாணி பனாட்டு | ஒடியல் மா -Kg | புழுக் கொடியல் -Kg | புழுக் கொடியல் மா -Kg |
| 1 | புதுக்குடியிருப்பு | 231,916 | 169,607 | 100,666 | 100,565 | 971 | | 27,830 | 133 | | 200 | 100 | 300 | 1,600 | 800 |
| 2 | முல்லை கிழக்கு | 270,633 | 174,644 | 106,332 | 109,448 | | | 350 | 80 | | | | 150 | 50 | |
| 3 | முல்லை தெற்கு | 250,181 | 233,667 | 131,235 | 126,136 | | | | | | | | | | |
| 4 | முல்லை மேற்கு | 353,222 | 134,696 | | 200,302 | 1,917 | | | 148 | | 8 | | | 15 | - |
| 5 | முல்லை வடக்கு | 251,961 | 225,911 | | | | | | | | | | | | |
| 6 | விசுவமடு | 76,483 | 72,895 | 12,494 | 12,464 | 11,330 | | | 926 | 1,398 | | | | | |
| 7 | பாண்டியன்குளம் | 159,358 | 124,056 | 47,157 | 47,157 | | | | 288 | | | | | | |
| 8 | ஒட்டிசுட்டான் | 239,997 | 239,617 | 191,446 | 189,637 | | | | | | | | | | |
| | மொத்தம் | 1,833,751 | 1,375,093 | 589,330 | 785,709 | 14,218 | - | 28,328 | 3,344 | 1,398 | 208 | 100 | 450 | 1,665 | 800 |

| இல | சங்கங்கள் | கைவினை பொருள்- பெறுமதி | பனம் பாணி | தேங்காய் | பனம் கள் | தேங்காய் எண்ணை - லீற்ற் | கல்லாக்காரம் | பனம் தும்பு | புளுமா லட்டு | ஒடியல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புதுக்குடியிருப்பு | 64000 | | | 600 | | 3 | 420 | 300 | 900 |
| 2 | விசுவமடு | | 1398 | 55607 | | 1365 | | | | |
| 3 | பாண்டியன் குளம் | | | | 2700 | | | | | |
| 4 | ஒட்டிசுட்டான் | 198742 | | | | | | | | |
| 5 | முல்லை மேற்கு | | | | 2258 | | | | | 10 |
| | மொத்தம் | 262742 | 1398 | 55607 | 5558 | 1365 | 3 | 420 | 300 | 910 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிளிநொச்சி மாவட்ட சங்கங்களின் உற்பத்தி விற்பனை விபரங்கள் -2021

| இல | சங்கங்கள் | கள் உற்பத்தி - போத்தலில் /750ml | | போத்தற்கள் -625 ml | | ஏனைய உற்பத்தி விபரங்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொ/வு | விற்பனை | உற்பத்தி | விற்பனை | பதநீர் உற்பத்தி போத்தல் | பதநீர் விற்பனை போத்தல் | பாணி விற்பனை | வெல்ல உற்பத்தி kg | கல்லாக்காரம் kg | பணாட்டு- Kg | பாணி பணாட்டு | ஒடியல் மா -Kg | புழுக் கொடியல் -Kg | புழுக் கொடியல் மா -Kg |
| 1 | பூநகரி | 485,926 | 315,498 | 210,724 | 232,688 | 941 | | | | | | | | | |
| 2 | கிளிநொச்சி | 682,618 | 298,109 | 13,303 | 76,062 | 113,639 | | | 9,152 | | | | | | |
| 3 | பளை | 232,395 | 146,932 | 14,746 | 14,746 | 8,689 | | | | | | | | | |
| | மொத்தம் | 1,400,939 | 760,539 | 238,773 | 323,496 | 123,269 | - | - | 9,152 | - | - | - | - | - | - |

### கிளிநொச்சி மாவட்ட சங்கங்களின் உற்பத்தி விற்பனை விபரங்கள் -2022

| இல | சங்கங்கள் | கள் உற்பத்தி - போத்தலில் /750ml | | போத்தற்கள் -625 ml | | ஏனைய உற்பத்தி விபரங்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொ/வு | விற்பனை | உற்பத்தி | விற்பனை | பதநீர் உற்பத்தி போத்தல் | பதநீர் விற்பனை போத்தல் | பாணி விற்பனை | வெல்ல உற்பத்தி kg | கல்லாக்காரம் kg | பணாட்டு- Kg | பாணி பணாட்டு | ஒடியல் மா -Kg | புழுக் கொடியல் -Kg | புழுக் கொடியல் மா -Kg |
| 1 | பூநகரி | 681,014 | 479,152 | 226,454 | 300,772 | | | | | | | | | | |
| 2 | கிளிநொச்சி | 945,426 | 832,934 | 115,322 | 99,722 | 89,925 | | | 5,297 | | | | | | |
| 3 | பளை | 365,798 | 263,062 | 25,782 | 25,573 | | | | | | | | | | |
| | மொத்தம் | 1,992,238 | 1,575,148 | 367,558 | 426,067 | 89,925 | - | - | 5,297 | - | - | - | - | - | - |

### வவுனியா மாவட்ட சங்கங்களின் உற்பத்தி விற்பனை விபரங்கள் -2021

| இல | சங்கங்கள் | கள் உற்பத்தி - போத்தலில் /750ml | | பனஞ்சோடா 190 மி.லீற்றர் | | ஏனைய உற்பத்தி விபரங்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொ/வு | விற்பனை | உற்பத்தி | விற்பனை | பனங்கிறல் 625 மி.லீற்றர் | பனங்கள் 750 மி.லீற்றர் | பாணி விற்பனை | வெல்ல உற்பத்தி | கல்லாக்காரம் | பணாட்டு- Kg | பாணி பணாட்டு | ஒடியல் மா -Kg | புழுக் கொடியல் -Kg | புழுக் கொடியல் மா -Kg |
| 1 | நெடுங்கேணி | 110,462 | 110,462 | 7,052 | 7,052 | 324 | 9,423 | | | | | | - | | |
| 2 | வவுனியா | 203,799 | 203,799 | - | - | | | | | | | | | | |
| 3 | புளியங்குளம் | 59,999 | 59,999 | - | - | | | | | | | | | | |
| | மொத்தம் | 374,260 | 374,260 | 7,052 | 7,052 | 324 | 9,423 | - | - | - | - | - | - | - | - |

### வவுனியா மாவட்ட சங்கங்களின் உற்பத்தி விற்பனை விபரங்கள் -2022

| இல | சங்கங்கள் | கள் உற்பத்தி - போத்தலில் /750ml | | பனஞ்சோடா 190 மி.லீற்றர் | | ஏனைய உற்பத்தி விபரங்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொ/வு | விற்பனை | உற்பத்தி | விற்பனை | பதநீர் உற்பத்தி போத்தல் | பதநீர் விற்பனை போத்தல் | பாணி விற்பனை | வெல்ல உற்பத்தி kg | கல்லாக்காரம் kg | பணாட்டு- Kg | பாணி பணாட்டு | ஒடியல் மா -Kg | புழுக் கொடியல் -Kg | புழுக் கொடியல் மா -Kg |
| 1 | நெடுங்கேணி | 164,591 | 164,591 | 9,544 | 9,544 | | | | | | | | 43 | | 75 |
| 2 | வவுனியா | 163,486 | 163,486 | - | - | | | | | | | | | | |
| 3 | புளியங்குளம் | 82,217 | 82,217 | - | - | | | | | | | | | | |
| | மொத்தம் | 410,294 | 410,294 | 9,544 | 9,544 | - | - | - | - | - | - | - | 43 | - | 75 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2023 நிகழ்வில் கௌரவிக்கப்படும் சங்கங்களின் சிறந்த அங்கத்தவர்கள்

## கிளிநொச்சி மாவட்டம்




2021 திரு அ.த.நிக்சன் 2022 திரு த.தயாசீலன்

பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்




2021 திரு க.இராசதுரை 2022 திரு சி.செல்வராசா

பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்




2021 திரு ஆ.அன்ரன்யூலியஸ் 2022 திரு சோ.தங்கராசா

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## வவுனியா மாவட்டம்




2021 திரு இ.ஜெயகாந்தன் 2022 திரு செ.கெங்காதரன்

நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்




2021 திரு கி.பிறேமநாத் 2022 திரு பி.பிறேமராசா

புளியங்குளம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்




2021 திரு கி.ரவி 2022 திரு ம.கலிஸ்ரஸ்

வவுனியா பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்டம்


2021

திரு சி.ரசி


2022

திரு இ.டிபன்

கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்


2021

திரு த.மோகனதாஸ்


2022

திரு த.ரவிச்சந்திரன்

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்


2021

திரு க.துரைசிங்கம்


2022

திரு கி.மங்களேஸ்வரன்

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்


2021

திரு வீ.தனீஸ்வரன்


2022

திரு ச.குயின்ரன் டொமினிக்

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்


2021

திரு தி.இந்திரசித்து


2022

திரு தே.கிறிஸ்துராசா

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்


2021

திரு மா.ஜெயம்


2022

திரு இ.தவராசா

கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2021



2022

திரு மா.பரஞ்சோதி    திரு கி.தயாபரன்

பருத்தித்துறை பனை தென்னை வள
அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம்



2021



2022

திரு தீ.அ.பெர்ணாண்டோ    திரு கு.நிராகரன்

ஊர்காவற்றுறை பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



2021



2022

திரு க.பத்மநாதன்    திரு வை.சந்திரன்

அச்சுவேலி பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



2021



2022

திரு ஜெ.துஸ்யந்தன்    திரு இ.பிரதீபன்

மானிப்பாய் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



2021



2022

திரு க.சிறிகாந்தகுமார்    திரு த.தனீஸ்

யாழ்ப்பாணம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



2021



2022

திரு சி.சுதர்சன்    திரு க.கருணேஸ்வரன்

சாவகச்சேரி பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2021

திரு க.தவராசா



2022

திரு சி.தவச்செல்வன்

அரியாலை பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



2021

திரு ஜே.ஜெமிர்சன்



2022

திரு ப.பகீரதன்

வேலணை பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



2021

திரு மு.பரமேஸ்வரன்



2022

திரு ந.ஜெயக்குமார்

காரைநகர் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



2021

திரு ஐ.புலேந்திரன்



2022

திரு க.யோகராசா

அனலைதீவு பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



2021

திரு செ.ரவீந்திரன்



2022

திரு நா.கணேசன்

தெல்லிப்பழை பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



2021/2022

திரு த.சுபாஸ்கரன்

வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





2021 திரு ப.தவராசா

2022 திரு சி.நந்தகுமார்

சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## மன்னார் மாவட்டம்





2021 திரு அ.யேசுதாஸ்

2022 திரு க.சந்தியோகு

மன்னார் கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்





2021 திரு ப.சிவகுமார்

2022 திரு கா.கருணாநிதி

மன்னார் மேற்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்





2021 திரு மா.பிறேமதாஸ்

2022 திரு ஆ.இரத்தினராசா

அடம்பன் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்





2021 திரு து.ஜெகந்தன்

2022 திரு ம.பிரான்சிஸ்

நானாட்டான்/ முசலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டம்



2021

திரு அ.ஸ்ரீபன்



2022

திரு நோ.தியோப்பிள்ளை

புதுக்குடியிருப்பு பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



2021

திரு ந.ரவீந்திரராசா



2022

திரு செ.தவராசா

விசுவமடு பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



2021

திரு கா.பரராசிங்கம்



2022

திரு த.தவராயேஸ்வரன்

பாண்டியன்குளம்/துனுக்காய் பனை
தென்னை வள அ. கூட்டுறவுச் சங்கம்



2021

திரு சா.சத்தியசீலன்



2022

திரு ஆ.தாஸ்மோகன்

ஒட்டுசுட்டான் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



2021

திரு ச.பிரதீபன்



2022

திரு இ.இலங்கேஸ்வரன்

முல்லை மேற்கு பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



2021/2022

திரு ம.கெல்மன்

முல்லை வடக்கு பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2021/2022

திரு க.சிவசிறி

முல்லை தெற்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



2021/2022

திரு த.ராஜ்குமார்

முல்லை கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2022 ஓவியப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற ஓவியங்கள்

## மேற்பிரிவு (தரம் 11- A/L)

1



நவரத்தினம் சுஜீபா - தரம் - 12
கிளி/ முருகானந்தா கல்லூரி

அன்ரன் றிச்சாட் கரிஷான் - தரம் 11
மன்/ இலுப்பைக்கடவை தமிழ் மகாவித்தியாலயம்

2



சிவகுமார் யதுர்சன் - தரம் A/L
கிளி/ முருகானந்தா கல்லூரி

3




## மத்திய பிரிவு (தரம் 06- 10)

1



ஜெயதீபன் பிரணாப் - தரம் - 09
யா/ ஹாட்லி கல்லூரி

தயாபரன் மனோஜ் - தரம் 10
யாழ் / வேலாயுதம் மகாவித்தியாலயம்

2




முஹமட் சுஹார் ஹதீஜா - தரம் 09
மன் / ஈச்சளவக்கை அ.த.க. பாடசாலை

3





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1

றொ.றொசாந் - தரம் 2B
மு/ அணிஞ்சியன்குளம்
தமிழ் கலவன் வித்தியாலயம்

2

பு.தருணியன் - தரம் 4
மன்/ இலுப்பைக்கடவை
தமிழ் மகாவித்தியாலயம்



3

த.அகரன் - தரம் 4
மு/ செம்மலை மகாவித்தியாலயம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலம் – ஓலை 3 வெளியீட்டின் பதிவுகள்

## முல்லை மாவட்டம்





## யாழ்ப்பாண மாவட்டம்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020 கண்காட்சி நிகழ்வின் பதிவுகள்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி!



❖ "தாலம்" - ஓலை 4 சஞ்சிகை வெளிவர வழிகாட்டியும் நெறிப் படுத்தியும் ஒழுங்கமைத்த கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய மதிப்பார்ந்த திருமதி தேவந்தினி பாபு அவர்களுக்கு "தாலம்" - ஓலை 4 தனது முதற்கண் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது.

❖ மேலும் இம்மலருக்கான வாழ்த்துரைகளை வழங்கி கௌரவித்தவர்களுக்கும்,

❖ ஆக்கங்களை வழங்கிய சகல எழுத்தாளர்களுக்கும்,

❖ ஆக்கங்களை சரிபார்த்து ஒப்புநோக்கி திருத்தங்களை மேற்கொண்டும் முடிவுரைகள் எழுதியும், ஆலோசனைகளை வழங்கியும் வழிகாட்டிய மலர்க்குழு உறுப்பினர்களுக்கும் ,

❖ யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் ஆகியோருக்கும்,

❖ ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டிய சகல கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும்,

❖ கணினி வடிவமைப்பு செய்த சமாச அச்சகமுகாமையாளர் திரு சி.சுகிர்தன் அவர்களுக்கும்,

❖ ஆக்கங்களைத் திரட்டுவதற்கும் புள்ளிவிபரங்களைப் பெற்றுத் தொகுத்து வழங்குவதற்கும் உதவி புரிந்த அனைத்து தரப்பினருக்கும்,

❖ கணினித் தட்டச்சு செய்துதவிய திரு.தெ.தர்சன் அவர்களுக்கும்

❖ கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்கள், நிர்வாக உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், பொதுமுகாமையாளர்கள் , பணியாளர்கள் அனைவருக்கும் ,

❖ நிகழ்வில் கலந்துகொண்ட முதன்மை விருந்தினர்கள் மற்றும் விருந்தினர்களுக்கும்,

❖ சஞ்சிகை வெளியீட்டுரை மற்றும் ஆய்வுரைகளை மேற்கொள்பவர்களுக்கும்,

❖ நிகழ்வுகளின் பதிவுகளை வழங்கிய முல்லை மாவட்ட ப.தெ.வ.அ.கூ.ச. சமாசம் மற்றும் யாழ் மாவட்ட ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம் ஆகியவற்றிற்கும்,

❖ சிறந்த முறையில் இம்மலரினை அச்சிட்டு வழங்கிய யாழ் மாவட்ட ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் சமாச அச்சகத்தினருக்கும்,

❖ பலவழிகளிலும் உதவிபுரிந்த மற்றும் நிகழ்வுகளில் கலந்துகொண்ட அனைத்து நல் உள்ளங்களுக்கும் "தாலம்" - ஓலை 4 சிரம்தாழ்ந்த நன்றிகளைப் பகிர்கின்றது.

*"காலத்தினால்செய்த நன்றி சிறிதுஎனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org